KALKI 4.9.88 ரூ. 2.

கல்கி

இத்துடன் 16 — பக்க
இலவச இணைப்பு



கர்நாடக அரசியல்

– நேரடி ரிப்போர்ட்

அழகோ அழகு ஃப்ரெஸ்கா
அற்புத நறுமணம் ஃப்ரெஸ்கா





கோத்ரெஜ் அறிமுகப்
படுத்துகிறது ஃப்ரெஸ்கா—
அற்புதமான சோப்.

ஃப்ரெஸ்கா—நிறைந்த சுகந்தம்,
நிகரில்லா நறுமண சோப்.

வளமான நுரை—தந்திடும்
வந்திடும் அதிக நாட்களுக்கு
ஃப்ரெஸ்கா சோப்.

அடக்கமான விலையிலே
அற்புதமான சோப் ஃப்ரெஸ்கா.

அழகான அற்புதமான சோப் வழங்குவோர் கோத்ரெஜ்

Enterprise/GS/61R Tm



* ஹெக்டே ராஜிநாமா செய்த போது கதறியழும் ஒரு பெண்....

ஹெக்டே ராஜிநாமாவும் கர்நாடக அரசியலும்...

ஹெக்டே தமது முதல்வர் பதவியை ராஜிநாமாச் செய்த பிறகு, கர்நாடக அரசியலின் நிலை என்ன? கட்சிக்குள் இருக்கும் அதிருப்தியாளர்களின் நிலை என்ன? புதிதாக முதல்வர் பொறுப்பேற்றிருக்கும் பொம்மை கடைசி வரை தாக்குப் பிடிப்பாரா? இந்தக் கேள்விகளையெல்லாம் பெங்களூர் சென்றிருந்த நமது சிறப்பு நிருபர் பல்வேறு தரப்பினரையும் சந்தித்துப் பேசி விட்டு வந்து அலசுகிறார்......

கர்நாடக ஜனதா கட்சியின் உள்கட்சிப் பூசல்கள் அவ்வப்போது திடீர் திடீரென்று மேல் மட்டத்துக்கு வருவதும், பிறகு அடங்கிப் போவதும்; மறுபடி 104 டிகிரி, 105 டிகிரி என்று ஜுரம் ஏறுவது போல் ஒரு கொந்தளிப்பான சூழ்நிலை உருவாவதும், உடனே முதல்வர் பதவியிலிருந்து ராஜிநாமா செய்வதாக ராமகிருஷ்ண ஹெக்டே ஒரு ஷாக் ட்ரீட்மெண்ட் கொடுப்பதும், சகஜமான காட்சிகளாக இருந்தன.

இனி —

புலி வருகிறது, புலி வருகிறது' என்ற அந்தக் கதை நடவாது; காரணம், ஹெக்டே கடைசியில் ராஜிநாமாச் செய்தே விட்டார்.

திறமையான ஆட்சி நடத்தியவர், நேர்மையானவர், மக்களின் குறைகளைக் கேட்டறிந்து செயல்பட்ட எளிமையான முதல்வர் என்றெல்லாம் நல்ல பெயர் எடுத்திருந்த ஹெக்டே மீது, ஒரு சில குற்றச்சாட்டுக்கள், அவர் பதவிக் காலத்தில் கொண்டு வரப்பட்டது உண்டு.

அப்போதெல்லாம் அவற்றிலிருந்து வெற்றிகரமாக மீண்டு வந்த அவரது ஆட்சி, அவருக்கு எதிராகச் செயல்பட்ட சிலரின் தொலைபேசிப் பேச்சுக்களை ஒட்டுக் கேட்டது என்ற குற்றச்சாட்டுக்கு ஆளாகிய போது ஹெக்டே தாமே தார்மீகப் பொறுப்பேற்று, முதல்வர் பதவியை ராஜிநாமா செய்தார். இத்தனைக்கும், மத்தியிலும் சரி, மாநிலங்கள் பலவற்றிலும் சரி, எதிர்க்கட்சித் தலைவர்கள், வேண்டாதவர்கள் என்று பலரது தொலைபேசிகளை ஒட்டுக் கேட்பதும், அவர்களது தபால்களைப் பிரித்துப் பார்ப்பதும் சர்வ சாதாரணமாக நடந்து வரும் அன்றாட நிகழ்ச்சிகளாகப் போய் விட்ட பின்னணியில், இது என்ன மகா பெரிய பாவமா, இதற்குப் போய் ராஜிநாமா செய்ய வேண்டுமா என்று அவரது ஆதரவாளர்களும், அனுதாபிகளும், அவரது நடைமுறையை அறிந்த பொது மக்களும் கேட்டார்கள்.

'ராஜிநாமா செய்வது தவிர வேறு வழியில்லை எனக்கு. நான் இதில் சம்பந்தப்படவில்லை என்றாலும், என் மீது குற்றம் சாட்



* பொம்மை: தாக்குப் பிடிப்பாரா?



* தேவே கௌடா: சும்மா இருப்பாரா?

தப்படும். எனவேதான் ராஜிநாமா செய்கிறேன்' என்றார் ஹெக்டே. 'அரசின் புலனாய்வுத் துறையினர் ஒட்டுக் கேட்டு வருகிறார்கள் என்பதே எனக்குத் தெரியாது' என்று ஹெக்டே சொல்லுவதை, அவரது அபிமானிகளே கூட நம்ப மறுக்கிறார்கள். ஒரு முதலமைச்சருக்குத் தெரியாமல், அவர் சம்மதம் இல்லாமல், தலைமைச் செயலர் உத்தரவு போடுவாரா? என்று கேட்கிறார்கள்.

பல பத்திரிகையாளர்களும் கூட ஹெக்டேயின் இந்தக் கூற்றை ஜீரணிக்கத் தயாராயில்லை. ஹெக்டே தமது மந்திரி சபையிலும் கட்சியிலும் பல குழப்பங்களைச் சமாளிக்க வேண்டிய நிலை வந்துவிட்டது: தேவே கௌடா அவருக்கு எதிராகப் போர்க் கொடி தூக்கிக் கொண்டு கிளம்பியிருந்தார்; எல்லாவற்றையும்விட, அகில இந்திய அளவில் தாம் பணியாற்ற வேண்டும் என்ற ஹெக்டேயின் ஆசை கைகூடி வருகிற மாதிரி எதிர்க்கட்சிகள் முன்னணி ஒன்று உருவாகி, அகில இந்தியத் தலைமைப் பீடத்தில் அவர் அமருகிற சூழ்நிலை தயாராகிவிட்ட இந்தத் தருணத்தை அவர் நழுவவிட விரும்பவில்லை என்பதுதான் ஹெக்டேயின் இந்த ராஜிநாமாவுக்குக் காரணம் என்று சொல்லுகிறார்கள்.

ஏற்கெனவே சந்திரசேகர் இவருக்குத் தலைவலி கொடுத்து வந்தார். போதாக் குறைக்கு அஜீத்சிங் வந்து சேர்ந்த பிறகு தலைவலியோடு திருகுவலியும் சேர்ந்த கதையாயிற்று! கர்நாடகத்தில் தேவே கௌடாவையும் இன்னும் சில அதிருப்தியாளரையும் அவருக்கு எதிராகத் தூண்டிவிட்டார் அஜீத்சிங்.

''அதிருப்தியாளர்கள் எம். எல். சி. தேர்தலில் வென்று விடுவார்கள்!'' என்று தேவே கௌடா மார் தட்டிக் கொண்டு சொல்ல, ''ஆகா, பிரமாதம். அப்படியானால் நம்முடைய பிரச்னைகள் எல்லாமே மறைந்துவிடும்!'' என்று அஜீத்சிங் சொல்கிறார். ''[illegible]ராப்பூரில் பிரும்மாண்டமான



* அஜீத்சிங்: ''தெரிந்தேதான் செய்தார் ஹெக்டே...''

"நான் பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை!"

— ஹெக்டே பேட்டி



கேள்வி: உங்கள் வருங்காலத் திட்டம் என்ன? பொம்மை அவர்களுக்கு ஆலோசனை வழங்கி உதவுவீர்களா?

ஹெக்டே: திட்டம் என்று எதுவும் ஆலோசிக்கவில்லை. கர்நாடக மாநிலத்துக்கும் இந்தியாவுக்கும் என் பணிகளைத் தொடர்ந்து ஆற்றுவேன். திரு. பொம்மை அவர்களுக்கு நான் வழிகாட்ட வேண்டிய அவசியமேயில்லை. அவர் அநுபவம் வாய்ந்த நிர்வாகி. நான் பின்—இருக்கையிலிருந்து வண்டி ஓட்ட வேண்டிய அவசியமே இல்லை. மிகச் சாமர்த்தியமாக அரசை நடத்திச் செல்லும் திறமைசாலி திரு. பொம்மை. என்னுடைய அபிப்ராயங்களும், உதவிகளும் தேவைப்படும் பட்சத்தில், அப்படி என்னைக் கேட்கிற போது, நான் நிச்சயம் கொடுத்து உதவுவேன்.

கேள்வி: 'டெலிபோனில் ஒட்டுக் கேட்பது எனக்கு அறவே தெரியாது' என்று நீங்கள் சொல்லுவதை உங்கள் அபிமானிகளும், ஆதரவாளர்களுமே நம்ப மறுக்கிறார்கள். உங்கள் பதில் என்ன?

ஹெக்டே: உண்மையாகச் சொல்லுகிறேன். எனக்கு முன்னமே தெரிந்திருந்தால், தெரிந்த அன்றைக்கே நிறுத்தியிருப்பேன். முதலமைச்சருக்குத் தெரியாமலே கூட டெலிபோனை ஒட்டுக் கேட்கலாம். இது சர்வ சாதாரணமாக உள்ள நடைமுறை. முதலமைச்சரின் உத்தரவே தேவையில்லை. மாநிலத்தின் தலைமைச் செயலர் உத்தரவிடத் தகுதி படைத்தவர். முதலமைச்சருக்கு இந்த விஷயத்தில், சம்பந்தமே இல்லை. பிற மாநிலங்களைப் பொறுத்த வரை, முதல்வர்கள் தங்களை எதிர்ப்பவர்களின்—எதிர்க் கட்சியினரின் அல்லது எதிர் கோஷ்டியினரின் தொலை பேசிகளை ஒட்டுக் கேட்க, குறிப்பாக ஏதும் ஆணை இடுகிறார்களோ என்னவோ, அவர்களது நடவடிக்கைகளை அறிய அப்படிச் செய்யலாம். தில்லியில்கூட, பிரதமரின் செயலகத்திலேயே, பிரதமருக்குத் தெரிந்தே, முக்கியமான சிலரின் டெலிபோன் பேச்சுக்கள் ஒட்டுக் கேட்கப்படுகின்றன. மற்ற எல்லா மாநிலங்களிலும் இது நடைபெறத் தான் செய்கிறது. எனக்கு இது விஷயம் தெரிய வந்த உடனேயே, அதை முழுவதுமாக நிறுத்தச் சொல்லி விட்டேன். நான் பொய் சொல்ல வேண்டிய அவசியமே இல்லை.

கேள்வி: சந்திரசேகருக்கு உங்கள் மீது இத்தனை காழ்ப்பு உணர்ச்சி வரக் காரணம் என்ன?

ஹெக்டே: எனக்கு எப்படித் தெரியும்? நீங்கள் அவரைத்தான் கேட்க வேண்டும். எனக்கு சந்திரசேகர் உட்பட எவரிடமும் காழ்ப்பு உணர்ச்சியே இல்லை.

கூட்டத்தில் பேசினேன்'' என்கிறார் தேவே கௌடா. ''சபாஷ்'' போட்டுத் தட்டிக் கொடுக்கிறார் அஜீத்சிங்! இவை முழுதும் 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளிதழில் வெளியாகியது.—இப்படி அஜீத்சிங் தேவே கௌடாவிடம் பேசிய டெலிபோன் பேச்சை ஹெக்டே ஒட்டுக் கேட்டார் என்பதுதான் பூதாகாரமான குற்றச்சாட்டாகப் போய் விட்டது.

'எக்ஸ்பிரசு'க்கு எங்கிருந்து இந்த டெலிபோன் செய்தி கிடைத்தது? மத்திய அரசுத் துறையிலிருந்து என்றது 'எக்ஸ்பிரஸ்.' ஆனால் உண்மையில், முழு டெலிபோன் பேச்சையும் வெளியிடுமாறு ஹெக்டேயே அதை அருண் ஷோரிக்கு அனுப்பி வைத்ததாகவும் கூறப்படுகிறது. ஒரு கட்சியின் தலைவரான சந்திரசேகரே அந்தக் கட்சி ஆட்சி செய்யும் மாநில முதல்வருக்கு எதிராகச் செயல்படும்படி எப்படி மற்றவர்களைத் தூண்டுகிறார், எப்படிக் கீழ்த்தரமாகச் செயல்படுகிறார் என்று நாட்டு மக்கள் அறியட்டும், என்பதைக் காட்டுவதற்காக ஹெக்டே செய்த இந்தக் காரியம், இப்போது அவருக்கே எதிராகச் செயல்

"என்னை முதல்வராக்குவார்கள் என்றே எதிர்பார்த்தேன்..."

— விவசாய—வனத்துறை அமைச்சர் பி. ராச்சையா கூறுகிறார்:



கேள்வி: அடுத்த முதல்வர் நீங்கள்தான் என்று பலமாகப் பேசப்பட்டதே, முதலமைச்சர் பதவி கிடைக்காது போனதில் உங்களுக்குக் கோபமோ, வருத்தமோ இல்லையா?

பதில்: நான் ஏன் வருத்தமடைய வேண்டும்? பெரும்பான்மையினர் ஒருவரை முதல்வராகத் தேர்ந்தெடுக்கும் பொழுது அதை ஏற்றுக் கொள்வதுதான் முறை: ஜனநாயக அமைப்பில் அதுதான் சரியான நடைமுறை. ஆனால், பெரும்பான்மை ஜாதியினரான இரு பிரிவினருமே, பிற்படுத்தப்பட்ட வகுப்பைச் சேர்ந்தவன் என்ற முறையில் என் விஷயத்தில் பெருந்தன்மை காட்டித் தேர்ந்து எடுப்பார்கள் என்று நான் எதிர்பார்த்தேன். அப்படி ஒரு நிகழ்ச்சி நடந்திருந்தால், அது கர்நாடக ஜனதாவின் புகழையும் பெருமையையும் ஓங்கச் செய்திருக்கும். பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஒன்றே கால் ஆண்டுகளே இருக்கும் இந்தக் கட்டத்தில், அப்படி ஓர் ஏற்பாடு நடந்திருந்தால் நன்றாக இருந்திருக்கும் என்று நான் வெளிப்படையாகவே சொல்லியிருக்கிறேன்.

கேள்வி: ஹெக்டேயுடன் இருந்தது போலவே, பொம்மையுடனும் உங்கள் உறவு இனி இருக்குமா?

பதில்: எப்போது நான் அவரைத் தலைவராக ஏற்றுக் கொண்டு விட்டேனோ, அப்போதே எங்கள் உறவு சுமுகத்தான் இருக்க வேண்டும். இல்லை என்றால் நான் பதவியை ஏற்றுக் கொள்ளக் கூடாது. ஆனால் ஹெக்டே அவர்கள் என்னை எந்த மாதிரி நடத்தினாரோ, அதே மாதிரியான உறவை, மரியாதையை நான் எதிர்பார்க்கிறேன். அப்படி இருந்தால்தான் அது பரஸ்பரம் நட்பையும் இணக்கத்தையும் வலுப்படுத்தும்.

கேள்வி: தேவே கௌடாவை அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டதில் உங்கள் அபிப்பிராயம் என்ன?

பதில்: தேவே கௌடா மீது கொடுக்கப்பட்டது போலவே ஆரம்பக் கல்வி அமைச்சரான சோமசேகர் மீதும் சில குற்றச் சாட்டுக்கள் லோக் அயுக்தவிடம் கொடுக்கப்பட்டன. சோமசேகர் ராஜினாமா செய்து விட்டார். இப்போது, ஒருவரை மட்டும் அமைச்சரவையில் சேர்த்துக் கொண்டிருக்கிறார்கள். ஒரே மாதிரியான நிலையில் இருக்கும் இருவர் விஷயத்தில், ஒரே மாதிரியான அளவுகோல்தான் வைத்துக் கொள்ள வேண்டும் என்பது என் அபிப்ராயம். இதற்கு மேல் நான் எதுவும்

பட்டு, அவர் பதவியையே ராஜிநாமா செய்ய வேண்டிய கடைசிக் கட்டத்துக்கு அவரைக் கொண்டு போய்விட்டது. (உள்ளுக்குள் இருந்தே கழுத்தை அறுக்கிற காரியம் செய்த சுப்பிரமணியம் சுவாமிக்கு ஹெக்டே ராஜிநாமாவால் ஏக சந்தோஷமாம்!)

224 பேர் உள்ள சட்டசபையில், 139 ஜனதா எம். எல். ஏக்கள் இருந்தும், நிம்மதியாக ஆட்சி நடத்த முடியாதபடிக்கு, அதிருப்தியாளர்கள் அவ்வப்போது நடந்து கொண்டார்கள். எம். எஸ். நாராயணராவ், பைரே கௌடா, வரதே கௌடா, என். எஸ். கேத், எஸ். டி. ஜெயராம், பி. பி. குருபிரசாத் ஆகிய ஆறு அதிருப்தியாளர்களை ஹெக்டே சஸ்பெண்ட் செய்தார் அப்போது. இதில் எம். எல். சி. எலெக்ஷனில் காங்கிரசுக்கு ஒத்துழைத்தார் என்ற ஆதார பூர்வமான குற்றச்சாட்டுக்கு உள்ளான பைரே கௌடாவைத் தவிர, மீதி ஐந்து பேர் மீதான சஸ்பென்ஷன் உத்தரவை இப்போது விலக்கிக் கொண்டு விட்டது ஜனதாக் கட்சி.

ஹெக்டே ராஜிநாமாவுக்கு, அல்லது கர்நாடக அரசுக்கு அவ்வப்போது உண்டாகும் தலைவலிக்குப் பிரதான ஜாதி அமைப்புக்களான வொக்கலிகாவோ, லிங்காயத்துக்களோ மோதிக் கொள்வது காரணமல்ல என்கிறார்கள். ஏனென்றால் இரண்டு ஜாதிகளிலுமே கிட்டத்தட்ட 40, 45 எம். எல். ஏக்கள் என்று சமமாகத்தான் இருக்கிறார்கள். இன்னும் சொல்லப் போனால், தேவே கௌடாவை ஆதரிப்பவர்களில் லிங்காயத்துக்களும் இருக்கிறார்களாம். (லிங்காயத்துக்கள் வீர சைவர்கள். நிஜலிங்கப்பா, பி. டி. ஜாட்டி, வீரேந்திர பாட்டீல் எல்லாம் லிங்காயத் வகுப்பினர். ஹநுமந்தய்யா வொக்கலிகா. குண்டுராவ்,

சொல்ல விரும்பவில்லை.

கேள்வி: பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் நலனுக்காக நீங்கள் என்னென்ன செய்திருக்கிறீர்கள்?

பதில்: கண்கூடாகப் பார்க்கிற மாதிரி, பிரம்மாண்டமான கட்டடங்கள் கட்டியிருக்கிறேன் பாருங்கள் என்று எதுவும் காண்பிக்க முடியாது. பிற்படுத்தப்பட்ட சமுதாயத்தினரை முன்னேற்றுவது என்பது மிக நீண்ட, தொடர்ந்த பணி. அவர்களுக்கு கல்வியறிவு புகட்டுவது, தீண்டாமையைப் போக்குவது, நிலமற்ற விவசாயிகளுக்கு நிலம் வழங்குவது, சிறு விவசாயிகளுக்கு உதவுவது, எல்லாம் இந்தப் பணியில் அடங்கும். நான் வெகு காலமாகவே நிலச் சீர்திருத்தத்துக்காகப் பாடுபடுபவன். நிலச் சீர்திருத்தக் கமிட்டி, செனெட், சிண்டிகேட், அரசாங்க அலுவலக மொழி கமிட்டி என்று பல குழுக்களில் உறுப்பினராக இருந்து எந்தெந்த வகைகளில் பிற்பட்ட வகுப்பினருக்கு உதவ முடியுமோ அத்தனையும் செய்திருக்கிறேன்.

கேள்வி: தேசிய அளவில் புதிய கூட்டணி உருவாவது பற்றி உங்கள் கருத்து என்ன?

பதில்: எஸ். ஜே. டி. அல்லது எந்தப் புதிய கட்சியுமே தோன்றி நிலை பெறுவதற்கு, மக்களின் உணர்ச்சியைத் தட்டியெழுப்பும் சக்தி படைத்ததாக இருக்க வேண்டும். காங்கிரசை எதிர்த்து நிற்பதாகத் தீர்மானித்து விட்டால், மிக வலுவான ஓர் எதிர்க்கட்சியாக அது இருக்க வேண்டும். உருவாகி வரும் கூட்டணி இதை மனத்தில் வைத்துக் கொள்ள வேண்டும்.

கேள்வி: ஹெக்டே இல்லாத கர்நாடக அரசு எப்படித் தோன்றுகிறது உங்களுக்கு?

பதில்: கற்பனையும், புத்திசாலித்தனமும் மிகுந்த கவர்ச்சிகரமான மனிதர் ராமகிருஷ்ண ஹெக்டே. நாட்டையும் மக்களையும் முன்னேற்றுவதைப் பற்றி முன்கூட்டியே திட்டமிடும் சாமர்த்தியசாலி. அவரைச் சில சக்திகள் தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்டன. அவரைப் பொறுத்தவரை சுதந்தரப் போராட்டத்தில் ஈடுபட்டு, சொத்து சுகம் இழந்த தியாகப் பரம்பரையில் வந்தவர். பூதான இயக்கத்தில் இணைந்து பாடுபட்ட குடும்பம். அவர் தலைமை தற்போது கர்நாடக அரசியலுக்கு இல்லை என்றாலும், அவர் தொடர்ந்து எங்களுக்கு வழி காட்டுவார்.

கேள்வி: ஹாசன், சிக்மகளூர், கூர்க் போன்ற மலைநாடு பிரதேசங்களில், சுமார் 15–20 வருடங்களாக பெரும்பான்மை வகுப்பினர் சுமார் இரண்டு லட்சத்துக்கு மேற்பட்ட ஏக்கர் நிலங்களை ஆக்கிரமித்து அநுபவித்து வருகின்றனர். இது நிலமற்றவர்களுக்கும், குறிப்பாக பிற்படுத்தப்பட்ட வகுப்பினருக்கும் இழைக்கப்படும் அநீதி இல்லையா? அந்த நிலங்களை அவர்களுக்கே கொடுக்கப் போகிறார்களாமே?

பதில்: அப்படி எல்லாம் தூக்கிக் கொடுத்துவிட முடியாது. நிலம் வழங்கும் விதிகள் இருக்கின்றன. (Land Grant Rules) அதன்படிதான் நிலங்களைக் கொடுக்க முடியும். நாங்கள் இன்னும் நீங்கள் குறிப்பிடும் நிலங்களைப் பிரித்துக் கொடுத்து விடவில்லை. நான் இந்த விஷயத்தைப் பார்க்கிறேன், பரிசீலிக்கிறேன்.

கேள்வி: பொம்மை எப்படிப்பட்டவர்? ஆட்சியைத் திறமையாகத் தலைமை ஏற்று நடத்துவாரா?

பதில்: நிச்சயமாக. நிலையான கொள்கையும், செயல் திறனில் ஆர்வமும் உள்ளவர். மனிதாபிமானி. எம்.என்.ராயின் பொதுவுடைமைக் கொள்கையில் திளைத்து வந்தவர். நிலமற்றவர்களுக்கு நிலம் வழங்குவதிலும், தீண்டாமையை ஒழித்துக் கட்டுவதிலும் தமது ஆட்சி முன்னிடம் வகிக்கும் என்று சொல்லியிருக்கிறார். இதைச் செயலிலும் காண்பிக்க வேண்டும் என்பதே என் ஆசை.

ஹெக்டே எல்லாம் பிராமண வகுப்பினர்.)

''தேவே கௌடா ஒரு ஸ்ட்ராங் லீடர்... மக்களின் ஆதரவு உள்ள செல்வாக்குப் படைத்த தலைவர். அவர் மந்திரி பதவியில் இல்லாத போதும், கிட்டத்தட்ட 45 எம்.எல். ஏக்களைத் தம் கையில் வைத்திருந்தார் என்பது சாதாரண விஷயமல்ல. சிறு தலைவர்களின் பேச்சைக் கேட்டுக் கொண்டு, மூத்த தலைவர்களைப் புறக்கணித்தார் ஹெக்டே!'' என்றார் ஒரு மூத்த பத்திரிகையாளர். ''தமது உறவினருக்கு மைசூரில் சட்ட விரோதமாக மனை ஒதுக்கிக் கொடுத்தார் என்பதுதான் தேவே கௌடாமீதான குற்றச்சாட்டு. அவர்பொதுப் பணித்துறை அமைச்சராக இருந்த போது அப்படிச் செய்தார் என்பதற்காக, லோக் அயுக்த், சி. ஓ. டி. விசாரணைகள் நடத்தப் பட்டன. அதனால் தேவே கௌடா அமைச்சர் பதவியைத் துறக்க நேர்ந்தது. அதுதான் தேவே கௌடா ஹெக்டே மீது எரிச்சல் அடையக் காரணம்'' என்றார் அவர்.

'லங்கேஷ் பத்ரிகா' என்ற கன்னடப் பத்திரிகையின் ஆசிரியரும் உரிமையாளருமான லங்கேஷைச் சந்தித்தபோது, ''ஹெக்டே நன்றாகத் தெரிந்தேதான் டெலிபோன் பேச்சுக்களை ஒட்டுக் கேட்க ஏற்பாடு செய்திருக்கிறார். தம் கட்சிக்காரர்கள் தவிர, எதிர்க்கட்சித் தலைவர்கள் நாகரத்தினம்மா, மொய்லி ஆகியோரது தொலைபேசிகளையும் ஒட்டுக் கேட்க ஏற்பாடு செய்திருக்கிறார். இப்போது தமது ராஜிநாமாவின் மூலம் சந்தர்ப்பத்தைத் தமக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளப் பார்க்கிறார் ஹெக்டே. வேண்டப்பட்டவர்களுக்கு மட்டுமே வேண்டியதை எல்லாம் செய்து

கேள்வி: அமைச்சரான பிறகும் நீங்கள் தான் கர்நாடக ஜனதா கட்சித் தலைவராக இருக்கிறீர்களா?

பதில்: ஆமாம், கடந்த ஒரு வருடத்துக்கு மேலாக அந்தப் பதவியையும் வகித்து வருகிறேன். இன்னும் ஒரு மாதத்துக்குள் இங்கே நிலைமை சீரானவுடன் கட்சித் தலைமைப் பதவியை ராஜிநாமா செய்து விடுவேன்.

கேள்வி: கர்நாடக அரசியலில் ஏன் அடிக்கடி அதிருப்தியாளர்கள் ஏதாவது குழப்பம் உண்டாக்கிக் கொண்டே இருக்கிறார்கள்?

பதில்: இப்போது நல்ல புத்தி வந்திருக்கிறது அவர்களுக்கு. முன்பு மேலவைத் தேர்தலில், கட்சி நலனுக்கு எதிராகச் செயல்பட்டவர்களை ஆதரித்தார்கள். பொதுக் கூட்டங்களில் கட்சித் தலைமையையும் ஆட்சித் தலைமையையும் குறை கூறி வந்தார்கள். முன்பு, ஊழலில் ஈடுபட்ட ஆட்களை மந்திரி சபையிலிருந்து விலக்க வேண்டும் என்றார்கள். இப்போது தான் ஆட்சித் தலைமையே மாறி விட்டதே. அதனால் அவர்களும் மாறி விட்டார்கள்! என்னைக்கூட கட்சித் தலைவர் பதவியை விட்டு விலகச் சொன்னார்கள். ஹெக்டே நம்பிக்கை வோட்டுப் பெற்று, தம் பலத்தை நிரூபித்தவுடன் கொஞ்சம் அடங்கிப் போனார்கள். இப்போது, தார்மீக — நாகரிகப் பொறுப்பேற்று ஹெக்டே ராஜிநாமா செய்த பிறகு இதே அதிருப்தியாளர்கள் மாறிப் போய் விட்டார்கள். திரு. பொம்மை முதல்வராகப் பொறுப்பேற்றவுடன், ஹெக்டே அவர்களின் அறிவுரைப்படி, தேவே கௌடா முழு ஒத்துழைப்பையும் அவருக்குக் கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறார். பழையதை மறந்து விடுவதாகச் சொல்லியிருக்கிறார். அதிருப்தியாளரில் சிலர் மந்திரி சபையிலும் எடுத்துக் கொள்ளப்பட்டிருக்கின்றனர். அவர்களது தொடர்ந்த ஆதரவு கிடைக்கும் என்று நம்புகிறோம். மேலும், பார்லிமென்ட், சட்டசபைத் தேர்தல்கள் வர இருப்பதால், யாரும் கட்சிக்கு ஆபத்து வரும் வகையில் செயல்பட மாட்டார்கள். அப்படி யாரேனும் செய்தால் அது அவர்களுக்கே பாதகமாக முடியும்!

கேள்வி: கர்நாடக அரசியலில் ஹெக்டே இல்லாமலிருப்பது உங்கள் கட்சியைப் பாதிக்காதா? அதை எப்படிச் சமாளிக்கப் போகிறீர்கள்?

பதில்: ஹெக்டே ஒரு காந்த சக்தி படைத்த தலைவர்தான். அதில் சந்தேகமே இல்லை. அவர் தொடர்ந்து எங்களுக்கு வழிகாட்டி நடத்திச் செல்லுவார். அகில இந்திய அளவில் அவர் பணி தேவையாயிருப்பதால் அவர் கூடுதலான சுமையைச் சுமக்க நேரிடும். அரசும் சரி, கர்நாடக ஜனதாவும் சரி, அவரது ஆலோசனைகளைக் கேட்டுச் செயல்படும்.

கேள்வி: தேவே கௌடாவை மந்திரி சபையில் சேர்த்துக் கொண்டது பலருக்கும் பிடிக்கவில்லை. உங்கள் கருத்து என்ன?

பதில்: முதலமைச்சரே லோக் அயுக்தா ரிப்போர்ட்டை மறுபடி பார்ப்பதாகவும், அமைச்சரவைக்கு அது தந்துள்ள குறிப்புக்களைப் பரிசீலிப்பதாகவும் சொல்லியிருக்கிறார். முதல்வர் என்ன செய்கிறார் என்று பொறுத்திருந்து பார்க்கலாம்.

பதில்: ஹெக்டே மீதும் சில ஊழல் குற்றச் சாட்டுக்கள். வேண்டப்பட்டவர்களுக்கு கொடுத்தவர். ஊழல்காரர். திறமையற்றவர். அரசுக்குச் சேர வேண்டிய நியாயமான வரிகளை வசூலிக்கத் தவறியவர். அவருடைய நிதித்துறைதான் இந்தியாவிலேயே மிக மோசமானது. அவருடைய அந்தரங்கச் செயலர் டி. ஆர். ராமப்பா இணை அரசாங்கம் நடத்தி வந்தார். அதன் மூலம் ஹெக்டேவுக்கும் அவர் உறவினர்களுக்கும் உதவி வந்தார். ஹெக்டேவுக்கு வேண்டப்பட்ட அதிகாரிகள் என்று ஒரு பட்டியல் உண்டு. பி.டி.ஓ. சேர்மன் ஹெச். ஜி. வி. ரெட்டி; ஸ்போர்ட்ஸ் கௌன்சில் சேர்மன் ராகவன்; பி. டி. ஏ. செயலர் திம்மே கௌடா. முக்கியமான பதவிகளை எல்லாம் தமக்கு மிக வேண்டியவர்களிடமே கொடுத்தவர் ஹெக்டே. அதனால்தான் அதிருப்தியாளர்கள் அவர் மீது கோபம் கொண்டார்கள். ஆட்சியிலும் கட்சியிலும் பிரச்னைகள் தோன்ற ஆரம்பித்தன...'' என்றார்.

இவரைப் போன்ற சிலர் ஹெக்டே பற்றி இப்படிச் சொன்னாலும், சாதாரண ஆட்டோ ரிக்‌ஷா ஓட்டுநர், பத்திரிகை படிக்கிற ஓட்டல் சர்வர், வேலைக்குப் போகும் ஆண்கள், வீட்டைப் பார்த்துக் கொண்டிருக்கும் பெண்கள், வெளி மாநிலங்களிலிருந்து இங்கே குடியேறியிருப்பவர்கள் என்று யாரைக் கேட்டாலும், 'அவர் மாதிரி உண்டா?' 'ஹெக்டே நேர்மையானவர். நல்லவர்; எளிமையானவர்; நன்றாக ஆட்சி புரிந்தார்' என்றே நற்சாட்சிப் பத்திரம் படிக்கிறார்கள்.

காங்கிரஸ் (இ) எம். எல். சி., ஏ. கே. சுப்பையா கடந்த பதினெட்டாம் தேதி ஒரு பத்திரிகைச் செய்தியாளர் கூட்டம் கூட்டியிருந்தார். தொலைபேசியில் ஒட்டுக் கேட்க உதவிய அதிகாரிகளையும் ஹெக்டேயையும் குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டுமென்று சொன்னார். மத்திய அரசு சி.பி.ஐ. மூலமாக வழக்குப் பதிவு செய்து இதைச் செய்ய வேண்டும் என்றார்! அதோடு நிற்கவில்லை. முதல்வர் எஸ். ஆர். பொம்மை, ஊழல் குற்றச்சாட்டுக்கு உள்ளான தேவே கௌடாவை எப்படி அமைச்சரவையில் சேர்த்துக் கொள்ளலாம் என்று கேட்டார். அவரையும் குற்றவாளிக் கூண்டில் ஏற்ற



"இப்போது அதிருப்தியாளர்கள் மாறிப் போய் விட்டார்கள்!"

— செய்தி, சுற்றுலாத் துறை அமைச்சர் எம். பி. பிரகாஷ் கூறுகிறார்:

உதவினார் என்ற குற்றச் சாட்டுக்கள் இருக்கிறதே?

பதில்: இப்போதைய அரசியல் நிலவரத்தில், எந்த ஒருவருமே இது மாதிரி குற்றச் சாட்டுகளுக்கு ஆளாகாமல் தப்பித்து விட முடியாது. லோக் அயுக்த என்கிற விசாரணை அமைப்பு ஏற்படுத்தி, தம்மையும் விசாரிக்க முடியும் என்ற அதிகாரத்தை அதற்கு வழங்கியவர், வேறு யாராவது இருக்கிறார்களா? யார் வேண்டுமானாலும் குற்றம் குறைகளைக் கூற இப்படி ஓர் அமைப்பு ஏற்படுத்தப்பட்டிருக்கிறது. யாருக்காவது அப்படி குற்றச்சாட்டுக்கள் சுமத்த வேண்டுமானால், அவர்கள் தைரியமாகப் போய் லோக் அயுக்தவிடம் அவற்றைப் பரிசீலிக்குமாறு தாராளமாகக் கேட்கலாம்.

கேள்வி: ரவீந்த் கொலை வழக்கில் சம்பந்தப்பட்டதாகச் சொல்லப்படும் ஜாலப்பா விஷயமாக என்ன சொல்லுகிறீர்கள்?

பதில்: ஏதாவது ஒரு குழப்பமான சூழ்நிலை இங்கே உருவாகும் போது, மத்திய அரசு அந்த நேரமாகப் பார்த்து, இங்கே ஏதேனும் குளறுபடியை உண்டாக்குவார்கள். அந்த 'டைமிங்' அப்படித்தான் இருக்கும். இல்லை என்றால், ஸி. பி. ஐ-க்கு சிபாரிசு செய்து ஏழெட்டு மாதங்களுக்குப் பிறகு, திடீரென்று விழித்துக் கொண்ட மாதிரி இப்படி ஒரு நடவடிக்கை எடுப்பார்களா? அது ஸி.பி.ஐ. மீதே, அவர்களின் நேர்மையான பணி மீதே, சந்தேகப்படும்படி அல்லவா இருக்கிறது? சட்டப்படி என்ன நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமோ அதன்படி நடக்கட்டும். சட்டம் தன் போக்கில் செயல்படட்டும். அதன் முடிவுகளுக்குக் காத்திருப்போம்.

கேள்வி: எதிர்க் கட்சிகள் கூட்டணியில் எடுக்கப்பட்ட முடிவு என்ன?

பதில்: ஹெக்டே, சந்திரசேகர், ராம் நரேஷ் யாதவ், தண்டவதே, பட்நாயக் எல்லோரும் கூட்டத்தில் கலந்து கொண்டார்கள். கொள்கையளவில் இணைப்புப் பற்றி முடிவு எடுக்கப்பட்டிருக்கிறது. எல்லா வழி வகைகளும் கொண்ட ஓர் அமைப்பை எப்படி உருவாக்குவது என்று யோசித்து வருகிறார்கள். எங்கள் பார்லிமெண்டரி போர்டும் சட்டசபை அங்கத்தினர்களும் இவற்றை விவாதிப்பார்கள். ஜனதா ஒரு மாநிலக் கட்சி அல்ல. இ. காங்கிரசையும், ராஜீவ் காந்தியையும் எதிர்க்க ஒருங்கிணைந்த கட்சிகளின் அமைப்பு அவசியம் தான் என்பதை ஜனதா உணர்ந்திருக்கிறது.

வேண்டும் என்று அறைகூவினார்! லோக் அயுக்த், சி. ஓ. டி. ரிப்போர்ட்டுகளின்படி தேவே கௌடா மீது பொம்மை நடவடிக்கை எடுத்தே ஆகவேண்டும் என்று கர்ஜித்தார் சுப்பையா. தேவே கௌடா மீதுள்ள ஊழல் குற்றச்சாட்டைச் சுட்டிக் காட்டி, அவர் மீது உடனடி நடவடிக்கை எடுக்க முன்னாள் இ. காங்கிரஸ் எம். எல். சி. புட்டசாமியும், முன்னாள் பி. ஜே. பி. எம். எல். ஏ. சிவப்பாவும் கவர்னரிடம் மனுக் கொடுத்திருக்கிறார்கள்.

இதெல்லாம் போதாது என்று, மாநில பி. ஜே. பி. தலைவர் ஏடியூரப்பா, மத்திய அரசு மூலமாக நிர்வகிக்கப்படும் சிறப்பு அரிசி உற்பத்தித் திட்டத்தில் ஊழல் நடந்திருப்பதை — லட்சக்கணக்கில் நஷ்டமாகி இருப்பதைச் சுட்டிக் காட்டியிருக்கிறார். இதில், லிட்டருக்கு ரூ. 13.40 விலையேயுள்ள பூச்சி மருந்தை, 16 ரூபாய் விலைக்கு மஸ்காட் கெமிகல்ஸிடமிருந்து வாங்கியதும், தாமதமாகப் பயிர்க் கடன் விநியோகம் செய்ததால் சரியான சமயத்தில் உபயோகிக்க முடியாமல் நஷ்டமடைந்ததும் அடங்கும்! இவற்றோடு கேரள வக்கீலான ரவீந்த் கொலையுண்டதும் அதில் முன்னாள் உள் துறை அமைச்சர் ஜாலப்பா சம்பந்தப்பட்டிருப்பதும், கர்நாடக ஜனதாவின் மேலுள்ள மேலும் ஒரு கரும் புள்ளி என்றுதான் சொல்ல வேண்டும்.

"இந்தக் கரும்புள்ளிகளையெல்லாம் தாண்டி, எத்தனை குற்றச் சாட்டுக்கள் சுமத்தப்பட்ட போதிலும் 'சீசரின் மனைவி சந்தேகங்களுக்கு அப்பாற்பட்டவள்' என்பது போல, ஹெக்டே மீது பொது மக்கள் வைத்திருக்கும் அசையாத நம்பிக்கையைப் போலப் புதிய முதல்வர் பொம்மையாலும் பெற முடியுமா? உட்கட்சிப் பூசல்களைச் சமாளித்து ஆட்சியைக் கவிழாமல் பார்த்துக் கொள்ள முடியுமா? ஹெக்டேயை எதிர்த்த தேவே கௌடா பொம்மையை மட்டும் எதிர்க்க மாட்டார் என்பதற்கு என்ன நிச்சயம்? இதற்கெல்லாம் காலம்தான் பதில் சொல்ல வேண்டும்.

— சாருகேசி.

படங்கள்: பாபுராஜ் (பெங்களூர்).

வட்டமேஜை

மனம் நெகிழ்ந்தது; கண்கள் பனித்தன...

* 'ஏழு கட்சிகளின் எழுச்சி ராஜீவின் வீழ்ச்சியா?' என்ற தலையங்கம் படித்தேன். ராஜீவின் வீழ்ச்சி தெரிந்த ஒன்று. ஆனால் இந்த ஏழு கட்சிகளின் எழுச்சி வீழ்ச்சியாகாமல் இருக்குமா? இப்பொழுதே எச். என். பகுகுணா, தேவிலால் போன்றவர்களின் மோதல் ஆரம்பமாகி விட்டது. இந்த ஏழு கட்சிகள் சிறியதாக இருந்தாலும், அதன் தலைவர்கள் ஒவ்வொருவரும் பெரியவர்களாகத் தங்களை நினைத்துக் கொள்வதுதான் இந்தப் புதிய அணியின் பலவீனம். ராஜீவ் என்னதான் அட்டூழியம் செய்தாலும் இவர்கள் அவரை மீண்டும் பதவியில் உட்கார வைக்காமல் விட மாட்டேன்... என்று சபதம் எடுத்திருக்கிறார்களோ என்றுதான் எண்ணத் தோன்றுகிறது. இல்லையென்றால் கடந்த காலத்தை மறந்து விட்டு ஆரம்பத்திலேயே இப்படி மோதிக் கொள்வார்களா?

சென்னை – 15. எஸ். வி. ராஜசேகர்.

* 'காலரா கலவரம்' என்னும் கட்டுரையில் காலரா எப்படிப் பரவுகிறது, அது வராமல் தடுக்கும் வழிமுறைகள், வந்து விட்டால் உடனடியாகச் செய்ய வேண்டிய சிகிச்சை முறைகள் ஆகியவற்றைத் தெளிவாக்கியிருந்தது பயனுள்ளதாகும். அந்தக் கட்டுரையை எங்கள் ஊரில் உள்ள 'பாவேந்தர் பாசறை' என்னும் மன்றத்தின் இருபால் உறுப்பினர்களுக்கும் படித்துக் காட்டிப் பயனுள்ளதாக்கினேன். வெளியிட்ட கல்கிக்குப் பாராட்டுக்கள்.

கொளப்பாடு. இரா. சேகர்.

* 'இது நம்ம ஆளு' விமர்சனத்தில் கொடுத்துள்ள வெற்றிலை பாக்கு உவமை வெகு அருமை. அதிலும், 'பல்லிடுக்கில் ஆங்காங்கே மாட்டிக் கொண்டு உறுத்தாமல் மட்டும் இருந்திருந்தால்...' என்ற வரிகள் சூப்பர்ப்!

மயிலாடுதுறை. ராமசாமி.

* அமரர் கல்கியின் அமரத்துவம் வாய்ந்த 'ஜமீன்தார் மகன்' கதையில் அன்று பர்மா அல்லோலகல்லோலப் பட்டதை விளக்கியிருந்தார். இன்றும் (சில நாட்களாக) மீண்டும் பர்மா அல்லோலகல்லோல நிலைமையில்தான் இருக்கிறது. நகைச்சுவையோடு கூடிய சரளமான நடை. சஸ்பென்ஸ். சரித்திரக் கதைகளானாலும் சரி, சமூகக் கதைகளானாலும் சரி, கல்கிக்கு நிகர் கல்கிதான்!

வெள்ளகால். இரா. கந்தையா.

* 'சிலர் எழுதுவதற்கென்றே பிறக்கிறார்கள்!' — உருக்கமான கதையுடன், ஜீவனுள்ள நகைச்சுவையை இணைத்து அமரர் கல்கி வழங்கியுள்ள "ஜமீன்தார் மகன்" படித்ததும் எனக்கு இப்படித்தான் நினைக்கத் தோன்றியது.

சென்னை – 28. எம். தியாகராஜன்.

* நகைச்சுவை+சீரியஸ் கலந்த இனிமைக் கதை, 'பெருமையிகு பொட்டல் பாளையம்!' பொ. பாளையம் பெரிய ஊராகப் போகின்ற செய்தியும், டிரான்ஸ்பர் செய்தியும் சுதாபாத்திரத்தை மட்டுமல்லாமல் எங்களையும் திக்கிடச் செய்தது!

குத்தாலம். வி. சுந்தரராமன்.

* "இறப்பு விழா" என்ற அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியின் மூன்றாம் பரிசுக் கதையைப் படித்தோம். இன்றைய உண்மைச் சம்பவம் அது. உணர்ந்து எழுதியிருக்கிறார் தமிழினியன். அழுகையே வந்து விட்டது படிக்கும் போது! தமிழினியனுக்கு எங்களது பாராட்டுதல்கள்.

திருச்சி. ஆர். வெங்கடேசன்.

* "இறப்பு விழா" இன்றைய அரசியல் கட்சிகளின் தொண்டர்கள் நிலையினைத் தெளிவாகப் புலப்படுத்தியது. கதையின் முடிவில் செண்பகம் கூறுகின்ற வார்த்தைகள், இன்றைய அடிமட்டத் தொண்டர்கள் மனத்தை மாற்றக் கூடிய வார்த்தைகள்.

விருத்தாசலம். ஏ. டி. பூவராகவன்.

* 'இறப்பு விழா' என்ற கதை அற்புதமாக இருந்தது. நடைமுறையில் உள்ள அரசியல் அவலட்சணங்களைக் கருவாகக் கொண்டு, இயல்பான நடையில் கதை அமைந்திருந்தது பாராட்டுக்குரியது.

திருச்சி. மீனம் தனுசு.

* 'வதங்கிய குழந்தைகளுக்கும் வாழ்க்கை காத்திருக்கிறது....' என்ற கட்டுரை பயனுள்ள மற்றும் வழிகாட்டியாக விளங்கும் மிகச் சிறந்த கட்டுரை. 'ஸ்பாஸ்டிக் குழந்தையைச் சந்திக்கும் போது, ஐயோ பாவம் என்று அனுதாபப்படுவதை விட, கேள்விக் கணைகளால் அதன் பெற்றோரைத் துளைப்பதை விட, தோழமையுடன் சிரித்து ஹலோ என்று சொன்னால் போதும். அந்த அங்கீகாரத்தால் அக்குழந்தை நிரம்பப் பலமும் பெருமையும் அடையும்' என்ற கட்டுரையின் வரிகள் அட்சர லட்சம் பெறும்.

சைதாப்பேட்டை. எஸ். அருண்குமார்.

* 'வதங்கிய குழந்தைகளுக்கும் வாழ்க்கை காத்திருக்கிறது' கட்டுரை மிக மிகப் பயனுள்ள கட்டுரை. கட்டுரை மனத்தை நெகிழ்வித்தது என்றால், கே. வி. ஆனந்தின் புகைப்படங்கள் கண்களில் கண்ணீரையே வரவழைத்தது.

சென்னை – 15. ஆர். முரளி.

* 'விவசாயப் புரட்சிக்கு வித்திடும் பண்ணை' கட்டுரை மாறுபட்ட விதத்தில் அமைந்திருந்தது. இன்றைய நமது முக்கிய தேவை விவசாயத்தில் புரட்சிதான். அதற்கு இத்தகைய கட்டுரைகள் அவசியமானவையே.

புன்செய்ப்புளியம்பட்டி. ஆர். ரத்தினசாமி.

* தகுந்த பருவத்தில் 'J' 13 நெல் பற்றிய விபரத்தை வெளியிட்டுள்ளீர்கள். தற்போது அண்ணா மாவட்டம் ரெட்டியார் சத்திரம் ஒன்றியம் ஆவாரம்பட்டி கிராமத்தில் 82 சிறு விவசாயிகளைத் தேர்ந்தெடுத்து 'J' 13 நெல் விதை இலவசமாக வழங்கியுள்ளோம். அக்கிராமத்தைத் தற்போது 'J' கிராமம் என அழைக்கின்றோம். மேலும் அண்ணா மாவட்டம் முழுவதும் நெல் பயிரிட்டு ஹெக்டேருக்கு 10 டன் நெல் மகசூல் எடுக்கத் தீவிர முயற்சிகள் எடுத்துள்ளோம்.

எஸ். கே. கோபால்,
முதல்வர் (பொ) கிராமிய
பல்கலைக் கழகம், காந்தி கிராமம்.



daCunha/TT/4/88 TAM

சாகாவரம் பெற்ற சாதனைகள்

—செம்பியன்—



ஆலந்தூர் நகராட்சியைச் சேர்ந்த பழவந்தாங்கல் மக்கள் அற்புதமான சாதனை ஒன்றை நிகழ்த்தியிருக்கிறார்கள். சிறிதளவு மழை பெய்தாலும் குளமாக மாறிவிடும் சாலையில், ''ஆலந்தூர் நகராட்சியின் சாதனை பாரீர்! எங்களுக்கு நீச்சல் குளம் அமைத்துத் தந்திருக்கிறது!'' என்று சுவரொட்டிகளும் 'பானர்'களும் ஒட்டியும் கட்டியும் இருக்கிறார்கள். 'ஆலந்தூர் நகராட்சியின் இந்தச் சாதனை போன்று சாகாவரம் பெற்ற சாதனைகளை வேறு யாராவது செய்திருக்கிறார்களா?' என்று நான் யோசிக்க ஆரம்பித்த போதே, பாலகுமாரன் வீட்டினெதிரே சாதனை பானர் கட்டப்பட்டிருப்பதாகக் கேள்விப்பட்டேன்! 'அடடா!



இவர் நம்ம ஆளாயிற்றே! என்ன சாதனை புரிந்திருக்கிறார். தெரிந்து கொள்ள வேண்டாமா' என்று எண்ணி விரைந்தேன்.

'''பா' வரிசை டைரக்டர்களில் இன்னும் ஒருவர் பாக்கியிருக்கிறார்; அவரிடமும் நீங்கள் பணியாற்றி விட்டால் நீங்களே நாலாவது பா வரிசை டைரக்டராகி விடலாம். அதைச் சாதனை என்றும் ஒப்புக் கொள்ளலாம். ஆனால் பாரதிராஜாவிடம் பணியாற்று முன்னரே 'சாதனை பானர்' கட்டி விட்டால் எப்படி?'' என்று பேச்சை ஆரம்பித்தேன்.

''படத்தைப் பார்த்திங்களா? ஒரு நாவிதரின் மகன் பிராமணப் பெண்ணைக் கல்யாணம் செய்து கொள்கிறானே?'' என்றார் பாலகுமாரன்.

''அதிலென்ன அதிசயம்? பாரதியாரே பிராமணரல்லாதவருக்கு பூணூல் போட்டு வைத்தது பற்றி படித்திருக்கிறோம். இந்த நாளில் பிராமணர்கள் ஜாதி என்ன, மதம் விட்டுக் கூட கல்யாணம் செய்து கொள்வது சகஜமாகத்தானே இருக்கிறது?''

''அதெல்லாம் பகிரங்கமாக நடக்கும். நம் படத்தில் வருகிற மாதிரி ஏமாற்றுக் கல்யாணம் பண்ணிக்கிட்டவங்க உண்டா?''

''அப்படியும் சொல்வதற்கில்லையே; ஏமாற்ற வேண்டும் என்று எண்ணிக் கதாநாயகன் செயல்படலையே; சந்தர்ப்பச் சூழ்நிலை அப்படி அமைந்து அவனை அந்த நிலைக்குத் தள்ளிவிட்டது போல அமைச்சிருக்கீங்களே! சாமர்த்தியம்னு வேணாச் சொல்லலாம்; சாதனை எப்படி ஆகும்?''

''மடிசார் கட்டிக் கொண்ட பிராமணப் பெண் பிரேக் டான்ஸ் ஆடுகிறாளே?''

''தமிழ் சினிமாவில் கனவுலகில் என்னென்னவோ வரும்; இதெல்லாம் ஒரு சாதனையா?''

''அப்படி வாங்க வழிக்கு'' என்றார் பாலகுமாரன். ''தமிழ் சினிமாவிலே லட்சியத்துக்காக உயிரைக் கொடுத்தவங்கதான் இதுவரை வந்திருக்காங்க. உயிருக்காக லட்சியத்தைக் கைவிட்டவங்களை யாராவது காட்டியிருக்காங்களா? இந்தப் படத்தைப் பாருங்க, நாவிதர் மகனான ஹீரோவும், தான் செய்து கொடுத்த சத்தியத்தைவிட உடலுறவுதான் முக்கியம்னு முடிவுக்கு வந்துட்டான். அந்தப் பிராமண மாமனாரும் தமது வீர சபதத்தை விடவும் உயிர் தப்பிப் பிழைப்பதுதான் முக்கியம்னு முடிவுக்கு வந்துட்டார். இப்படிப்பட்ட புரட்சிகரமான கதையம்சத்தை வேறே எந்தப் படத்திலாவது பார்க்க முடியுமா? இது சாதனைதானே!''

நான் அசந்து போனேன். ''படத்தின் முக்கிய கதாபாத்திரங்களான இருவரையுமே லட்சியத்திலிருந்து சறுக்கி விழச் செய்த நீங்க பாலகுமாரனே இல்லை; அறிவிலே முதிர்ந்த குமாரன்!'' என்று பாராட்டிவிட்டு, அங்கிருந்து கிளம்பி நெடுஞ்செழியன் வீட்டை அடைந்தேன்.

நெடுஞ்செழியன் சாதனை போர்டு எழுதிக் கொண்டிருந்தார். என்னைக் கண்டதும் ''வா, தம்பி'' என்று உற்சாகமாக வரவேற்றார். ''போர்டு இன்னும் எழுதி முடியலையே, என்ன எழுதப் போறீங்க?'' என்று கேட்டேன்.

''பேப்பரில் படிக்கலையா நீ? காஞ்சிபுரக்

திலேயே, அண்ணா அரங்கத்திலேயே எனக்குக் கூட்டம் சேரவில்லை! கூட்டமே இல்லாத பொதுக் கூட்டத்தில் பேசிட்டு வந்திருக்கேன்!''

''இது ஒரு சாதனையா? எத்தனையோ பல கட்சிகளின் எத்தனையோ பல கூட்டங்களுக்கு எண்ணிப் பத்துபேர் கூட வருவதில்லை. வீரமுழக்கம் நின்றா போய் விடுகிறது?''

''என்னுடைய அணியைச் சேர்ந்த நிர்வாகிகளே பலர் வரவில்லை!''

''இதில் என்ன அதிசயம்? இப்போ அணிக்குள்ளே கோஷ்டி உருவாகியிருப்பதால் அந்தப் பக்கம் போயிருப்பாங்க.''

''என்னுடைய பேச்சில் சாரமேயில்லை; கொள்கையில்லை; திட்டமில்லை!''

''இதையும் ஒரு சாதனை என்று கூற முடியாது. எதிர்க் கோஷ்டியை, அணியை, கட்சிகளைத் திட்டுவதுதானே இப்போ ஃபாஷன்; இட்டத்தை யார் கேட்கிறார்கள்?''

''அப்படின்னா நான் சாதனை ஏதும் பண்ணலைன்னு சொல்றியா?''

''எனக்குத் தெரிஞ்சு இல்லே; சாதனை போர்டைத் தூக்கி உள்ளே போடுங்க!''

''கொஞ்சம் இரு'' என்றார் நெடுஞ்செழியன், ''செம்பியனைத் தொடர்ந்து இரண்டு வாரங்கள் என்னைக் கவனிக்குமாறு செய்து எழுத வைச்சிருக்கேனே, அதுக்கு என்ன சொல்றே?'' என்று கேட்டார்.

''நிச்சயமாக அது ஒரு சாதனைதான்'' என்று பலமாகத் தலையாட்டி ஒப்புக் கொண்டு, ஓர் ஆட்டோ பிடித்து ஜெயலலிதா வீட்டுக்கு விரைந்தேன்.

''ஆறு மாதங்கள் படுக்கையில் இருக்க வேண்டியவர், ஆறே நாட்களில் குணமாகிப் பொதுக் கூட்டங்களுக்கும் வர ஆரம்பிச்சுட்டீங்களே! இந்தச் சாதனையை எப்படி நிகழ்த்தினீங்க?'' என்று கேட்டேன்.

''ரொம்ப சிம்பிள் மிஸ்டர் செம்பியன்! தினமும் காலையில் எழுந்ததும் நமக்குப் பிடிக்காதவங்களை நினைச்சு ஒவ்வொருவருக்காகவும் பல தடவை பற்களை நறநறன்னு கடிக்கணும். உடம்பு குணமாகித் தெம்பு வந்துடும்'' என்றார் ஜெ.

நான் எனக்குப் பிடிக்காத ஒருவரை எண்ணிப் பற்களை ஒரே ஒரு முறை கடித்துப் பார்த்தேன். பல் வலித்தது. ''அது ஒன்றும் சுலபமில்லை போலிருக்கே'' என்றேன்.

''சுலபமாக ஒரு வழியிருக்கு! அவங்க ஒவ்வொருத்தரும் நம்மைப் பற்றி என்ன வசை பாடினாங்கன்னு கூடவே நினைச்சுக்கிட்டா பற்களை நறநறப்பது சுலபமாயிடும். உதாரணமா, கட்சிப்பணத்தைநான் முழுங்கி விட்டதாக ஓர் எதிரி கூறியதுமே படுக்கையில் எழுந்து உட்கார்ந்துட்டேன். அப்புறம் ஒருவன், 'ஹிட்லர்' என்று என்னை வர்ணித்த போது வந்த கோபத்தில் எழுந்து நின்னுட்டேன்; 'சேலை கட்டிய கருணாநிதி' என்றதும் நடமாடவும் மேடை ஏறவும் ஆரம்பிச்சேன். நான் டோபா அணிந்திருப்பதாகச் சொன்னதும் சுற்றுப் பயணத் திட்டம் போட ஆரம்பிச்சுட்டேன்!''

''ஒவ்வொரு தடவையும் பற்களை நறநறப்பீர்களா?''


''ஒவ்வொரு தடவையும் ஓராயிரம் முறை! அதனால்தான் இவ்வளவு தெம்பா இருக்கேன்!''

''அடேயப்பா! அளப்பரிய சாதனைதான்! ஆனால் ஜாக்கிரதை! ஜாக்கிரதை! அடுத்தாற்போல் உங்களுக்கு நிஜப் பல்லே ஒன்று கூட இல்லை; எல்லாம் பொய்ப் பல் செட் என்று முத்திரை குத்திப் பேசப் போகிறார்கள்!'' என்று புரட்சித் தலைவியை எச்சரித்துவிட்டு, அவர் பற்களை நறநறப்பதற்கு முன்பாக ஓட்டமாக ஓடிவந்து விட்டேன்!

''சிறுகதைத் தொகுப்புப் போடணும்னு சொல்றீங்களே, இதெல்லாம் பிரபல பத்திரிகைகள்லே வந்ததா?''

''எல்லாமே பிரபல பத்திரிகைகளிலேர்ந்து திரும்பி வந்தவைதான்....!''

— அ. தெய்வசிகாமணி.





''உன்னோட உடம்பு இளைச்சதுக்கு காரணமே அந்த ஹோட்டல்தான்னு சொல்றியே, சாப்பாடு மோசமா?''

''ஊஹூம்.... ஆட்டுக்கல் மோசம்!''

— ஜெ. அ. கதிர்வேல்.

மங்கையர் மலர்

செப்டெம்பர் '88

புதிதாய்க் கற்றுக் கொள்வோமே!

—இலவச இணைப்பு—

சேமிப்பில் எந்த வகை சேமிப்பு சிறந்தது?

—வல்லுநர்களின் கலந்துரையாடல்—


ஜெய்சிங்
ஜோதிபாசு
பூடாசிங்
கோர்க்கா தனி மாநில வன்முறைக் கும்பல்
ஸ்வீட், வடை, பாயசம், அப்பளம், அவியல், பாஸந்தி, ஐஸ் க்ரீம்.. இருக்குது உனக்கு! நிறையப் போடு! சாப்பிட்டுட்டு ராஜீவை மறந்துடாதே!
தமிழன்
30 லட்சம் நிதி உதவி
பூகம்பத்தால் வாடும் மக்கள்
150 கோடி நிதி கோரிக்கை
ஹோட்டல் பில் பாக்கின்னு மாவாட்டச் சொல்லுய்யா!
ஹோட்டல்களில் பில் பாக்கி!
ஜெயலலிதா மீது திருநாவுக்கரசு குற்றச்சாட்டு



கல்கி

1988 செப்டம்பர் 4
மலர் 47 இதழ் 5
விபவ ஆவணி 19.



பூகம்பத்தை விடப் பயங்கரம்

பீகாரிலும் நேபாளத்திலும் ஏற்பட்ட பூகம்பத்தைக் காட்டிலும் பயங்கரமான விஷயம் ஒன்று உண்டென்றால் அது அரசு, நிவாரணப் பணிகளில் காட்டுகின்ற அலட்சியமும் மெத்தனமும்தான். பிரதமர், நிவாரண நிதியிலிருந்து முப்பது லட்சம் தருவதாகக் கூறியிருப்பது, பிரதமர் பிரச்னையின் பரிமாணத்தைப் புரிந்து கொள்ளவே இல்லையோ என்று எண்ண வைக்கிறது. கணிசமான தொகை ஒதுக்குவதுடன் அந்தத் தொகை சரியானபடி செலவிடப்படுகிறதா, சேர வேண்டியவர்களுக்கு மெய்யாலுமே போய்ச் சேருகிறதா என்பதும் கவனிக்கப்பட வேண்டும். இல்லையெனில் வழியிலேயே முழுங்கி விட மலைப்பாம்புகள் காத்திருக்கின்றன. இடிபாடடைந்து பாழான வீடுகளுக்குப் பதில் வேறு குடியிருப்புக்களை அரசு, அவசர கால நடவடிக்கையாக மேற்கொண்டு கட்டித்தர வேண்டும். புதிய கட்டடங்கள் உறுதியாகவும் மீண்டும் பூகம்பம் வந்தாலும் பாதிக்கப்படாதவையாகவும் அமைய வேண்டும். இதற்குரிய விஞ்ஞானத் தொழில் நுணுக்கங்கள் இன்று ஜப்பான் போன்ற நாடுகளில் கிடைக்கின்றன.

எத்தனை பேர் மாண்டார்கள், எத்தனை பேர் காயமுற்றார்கள் என்ற கணக்கிலே கூடக் குழப்பம் காணப்படுகிறது. இறந்தவர் எண்ணிக்கை எண்ணூறு முதல் ஆயிரம் வரை என்று பத்திரிகைகள் மதிப்பீடு செய்ய மாநில அரசோ, 164; 198 என்று தவணை முறையில் மடிந்தவர்களின் எண்ணிக்கையை அதிகரித்துக் கூறி வருகிறது. மாநில அரசு, எதற்காக உயிர்ச் சேதத்தையும் பொருட்சேதத்தையும் குறைத்து மதிப்பிட வேண்டும் என்பது யாருக்கும் புரியாத மர்மமாக விளங்குகிறது. பார்க்கப் போனால் சற்றுக் கூடுதலாகச் சேதத்தை நிர்ணயித்தாலும் பாதகமில்லை; குறைத்து மதிப்பிடுவதால் மக்களுக்கு ஏற்படும் துன்பம் பன்மடங்காகப் பெருகும்.

பூகம்பத்தினால் பாதிக்கப்பட்டவர்களைப் பார்வையிடப் பிரதமர் வர, அவருக்கு முன்னதாக அவருடைய பாதுகாப்புப் பட்டாளம் வர, அவர்களுடன் கூடவே அவர்களுடைய அதிகார ஜபர்தஸ்துகளும் வந்தன. படுகாயமடைந்து மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டிருந்த பலரைப் பிரதமரின் பாதுகாப்புக் கருதி இவர்கள் வெளியேற்றினர் என்பதை அறிய வேதனைக்கும் மேலாகக் கோபம்தான் பொங்கி எழுகிறது. வெந்த புண்ணில் வேல் பாய்ச்சுவது என்பதற்கு இதைவிடப் பொருத்தமான ஓர் உதாரணம் இருக்க முடியுமா?

1934–ல் ஏற்பட்ட பீகார் பூகம்பம் பத்தாயிரத்துக்கு மேற்பட்ட மக்களைப் பலி வாங்கியது என்பது சரித்திரத்தில் ஒரு அதிசோக நிகழ்ச்சி. அதற்குப் பிறகு கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலான காலகட்டத்தில் எவ்வளவோ விஞ்ஞான வளர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. ஒரு பூகம்பம் ஏற்படப் போவதாக அறுதியிட்டு உறுதி கூற முடியாது எனினும் கடந்த மூன்று ஆண்டுகளாகவே பல விஞ்ஞானிகள் இந்த வட்டாரத்தில் ஒரு பெரிய பூகம்பம் நிகழ்வதற்கான சாத்தியக் கூறுகள் இருப்பதாகக் கூறி வந்துள்ளனர். அவர்களின் எச்சரிக்கையை மட்டுமின்றி, ஆகஸ்டு 6–ம் தேதி ஏற்பட்ட நில நடுக்கம், வரப் போகும் ஒரு பெரிய பூகம்பத்துக்கு முன்னறிவிப்பு என்று உணராமல் அலட்சியம் செய்தது துரதிர்ஷ்டம் மட்டுமல்ல, நமது விஞ்ஞானப் பார்வை பழுதுபட்டுப் போயிருப்பதற்கு நிரூபணம். ஒரு பெரிய பூகம்பம் ஏற்படக் கூடும் என்று எதிர்பார்த்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை அரசு மேற் கொண்டிருந்தால் இவ்வளவு பரிதாபகரமான பின்விளைவுகளை நாம் பார்க்க நேர்ந்திராது. ஒருவேளை பூகம்பம் தாக்கினால் என்னென்ன செய்ய வேண்டும் என அவசர நடவடிக்கைகளுக்கு ஒரு திட்டம் தீட்டி, பயிற்சி அளித்து, மக்களையும் நிவாரணப் பணியில் ஈடுபட வேண்டியவர்களையும் தயார் நிலையில் வைத்திருந்திருக்கலாம். ஒரு திடீர் தாக்குதலாகப் பூகம்பம் விளங்கி, ஆட்சியைத் திகைப்பில் ஆழ்த்தி, செயலற்றுப் போகச் செய்திருக்காது. விஞ்ஞான நோக்கும் அணுகுமுறையும் ஆட்சியினருக்கே இல்லையெனில், 21–ம் நூற்றாண்டுக்கு மக்கள் தயாராவது எப்படி?

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற
தாயென்று கும்பிடடி பாப்பா. — பாரதியார்.



daCunha/GCM/147/88/TAM

மாப்பிள்ளை சார்

விசுவை நம்பிப் படமா, படத்தை நம்பி விசுவா? பட்டிமன்றம் நடத்தினால் தலைவர் தலையைப் பிய்த்துக் கொள்வார்.

நடுத்தர வயது. வம்புக்குப் போகும் சுபாவம். பின்னால் கிளப்பிவிட்டு, முன்னால் ஒன்றும் தெரியாதவராக அப்பாவியாக நடந்து கொள்வது. பெண்டாட்டி — சாப்பாடு இவற்றின் மீது சபலம் காட்டுவது — விசுவுக்கு இந்த ஒற்றையடிப் பாதை பழகி வந்த பாதை.

பணக்காரக் குடும்பத்துப் பெண்டாட்டியின் பின்னே கைகட்டி அவர் வந்து விட்டார் என்பதை எவ்வளவு கொசகொசப்பாகச் சொல்ல முடியுமோ அவ்வளவு கொசகொசப்பாகச் சொல்லியிருக்கிறார்கள்.

விசுவின் பெண்டாட்டியாக ஜெயந்தி. டாம்பீகம், கொஞ்சல், கெஞ்சல் — எல்லாம் அட்டகாஸ்.

ரேகா பாவம்! மேக்கப்பில்லாமல் சலவைக்குப் போட்ட காட்டன் சட்டை போல் வெளுத்து விட்டார். மோகனுக்கும் அவருக்கும் காரோட்டிப் பிறக்கும் லவ்வு சரியான ஜவ்வு. திலீப்பும், பௌர்ணமியும் இளமைக்குச் சாம்பிள்.

மூலக்கதையில் சத்துப் பற்றாது என்று நினைத்தோ, என்னவோ, பக்கத்து வீட்டுக் கிஷ்முவை வைத்து ஒரு கிளைக்கதை. 'குட்மார்னிங்' சொல்லும் அந்தப் பையன் யாருடைய குழந்தை என்பதில் ஒரு சஸ்பென்ஸ், ஸாரி சப்பென்ஸ்.

ரோடில் போகும் கிழவி விசுவிடம் வழி கேட்க, விசு வழி சொல்லும் நேரம் கிஷ்மு வந்து 'இளம்பெண்ணிடம் என்னய்யா கலாட்டா பண்ணுகிறாய்?' என்கிற ரீதியில் வம்பு பண்ணும் ஸீன் மகா கலகல. கலகல ஸீன்களைத் தேடிப் பிடித்துச் சந்தோஷப்படலாமே தவிர, படம் முழுதும் கலகலா இல்லையே ஏன் என்று பார்த்தால் —

பிரேக் பிடிக்காத வண்டி போல் கதை அங்கங்கே மோதித் திசை திரும்பி, வேறு இடத்தில் மோதி மறுபடி திசை திரும்பி மீண்டும் மோதி......

— ஜெயமன்மதன்.



கிறிஸ்துவுக்கு முற்பட்ட மகிழ்ச்சிகரமான அந்த வரலாற்றுக் காலத்தில்...
புத்த மதத்தின் புனிதச் சின்னத்தைப் பாதுகாத்து இலங்கைக்குக் கொண்டு சேர்த்தது, ஓர் இளவரசியின் 'கூந்தற் பேழை'யின் சக்தி.

இந்திய இளவரசி ஒருத்தியின் எழிலார்ந்த் கூந்தல் மகுடத்தினுள்ளே மறைத்து எடுத்துச் செல்லப்பட்ட புத்தபகவானின் புனிதப்பல்தான் இன்று இலங்கையிலுள்ள கண்டியில் ''தலாடா மலிகாவா'' என்ற கோவிலில் கொலுவீற்றிருப்பது. இத்தகவலை நமக்குத் தருவன வரலாற்று ஏடுகள்.

புத்த மதத்தின் புனிதச் சின்னத்தை என்றென்றும் அழியாவண்ணம் இவ்வாறு பேணிக்காத்தது அந்தக் 'கூந்தற் பேழையே'.

ஆனால் சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள் நிறைந்துள்ள இந்நாட்களில் நீங்கள் உங்கள் உடைமைகளைப் பாதுகாப்பதற்கென நாடுகளைக் கடக்கவோ இடர்ப்பாடான வழிகளை நாடவோ அவசியமேயில்லை. உங்கள் விலைமதிப்பற்ற உடமைகளின் பாதுகாப்புக்கும் வசதிக்கும் உத்திரவாதமளிப்பது 'சக்தி'.

உங்கள் மதிப்புமிக்க உடைமைகளை உங்களுக்கு மட்டுமே தெரியும் வகையில் பேணிப் பாதுகாத்து வைக்க நீங்கள் சிரமப் படத் தேவையில்லை. உங்களுக்காக அதை சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள் எளிமையாக, இனிமையாகச் செய்து தருகின்றன.

பாதுகாப்பிற்கும், நம்பிக்கைக்கும் முழுவதும் பாத்திரமான **சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள்**

குளிர்சாதன வசதியுடன் நீங்கள் உங்கள் பாதுகாப்புப் பேழைகளைப் பயன்படுத்த, இனிய வரவேற்பு நல்கக் காத்திருப்பவை சக்தி பாதுகாப்புப் பெட்டகங்கள்.

தமிழகத்தில்: கோவை: அவினாசி சாலை, ஆர்.எஸ்.புரம். சென்னை: தி.நகர், அண்ணாநகர், அடையாறு, அசோக் நகர், மைலாப்பூர். பொள்ளாச்சி, திருநெல்வேலி, சேலம், காரைக்குடி. கேரளத்தில்: எர்ணாகுளம், திருச்சூர் மற்றும் திருவனந்தபுரம்.

போட்டிக் கதை — 1

காயப்படுத்தும் அஸ்திரங்கள்

அவினாசி முருகேசன்

ரேகாவுக்கு உடம்பு சரியில்லை என்று தெரிந்ததும் பழனியப்பன் பதறிப் போய் விட்டார். இப்பொழுது என்ன செய்வது? இதுவோ பாழும் கிராமம். செத்துப் போனால் கூடச் சுடுகாடு இல்லாத இடம். ஆஸ்பத்திரியை எதிர்பார்க்க முடியுமா?

அந்தப் பக்கமாக விஸிட் செய்த கிராம சேவிகா பங்கஜம் வந்து பார்த்தாள்.

''பி. டி. ஓ. ஸார்... அம்மாவை டவுனுக்கு அழைத்துச் செல்லட்டுமா...?''

பழனியப்பன் கையைப் பிசைந்தார்!

''அதற்குத்தான். என்ன வழி என்று யோசித்துக் கொண்டிருக்கிறேன்...''

''என்ன சார் நீங்க? இந்த ஜீப் எதுக்கு இருக்கு? இது மாதிரி ஆத்திர அவசரத்துக்கு உதவாத ஜீப்பினாலே என்ன பயன்? உங்களுக்குதவாத ஜீப் பின்னே எதுக்கு...?''

''பங்கஜம். அது பஞ்சாயத்து யூனியனோட அரசாங்க ஊர்தி... நான் பி. டி. ஓ.வா இருந்தாலும், எந்தச் சொந்த உபயோகத்துக்கும் பயன்படுத்தக் கூடாது. பஸ் வரும்... அதிலே ஆஸ்பத்திரிக்குப் போகலாம்!''

தலையில் அடித்துக் கொண்டாள் பங்கஜம்! இந்தக் கலிகாலத்தில் இப்படியும் ஒரு மனுஷரா? ஆபீஸ் வேலைக்குத் தவிர, மற்ற எல்லாச் சொந்த வேலைகளுக்கும் அரசாங்க வாகனங்களைப் பயன்படுத்தும் மனிதர்கள் நிறைந்த இந்த யுகத்தில் இவரைப் போலவும் ஒரு பி. டி. ஓ.வா?

தள்ளுகதவைத் தட்டி எச்சரித்து விட்டு எஸ். இ. ஓ. உள்ளே நுழைந்தார்!

''ஸார்... குட்மார்னிங்...''

''மார்னிங்... ஆனால் குட் இல்லை மிஸ்டர் வடிவேல்...''

''பரவாயில்லை ஸார்...'' அவர் அனுமதி இல்லாமலேயே, எதிரில் உள்ள நாற்காலியில் அமர்ந்து கொண்டார். நாற்காலி கூட வலைவலையாகப் பிளாஸ்டிக் ஒயரினால் பின்னப்பட்டு மெத்து மெத்தென்று இருந்தது!

''என் மீது 'என்கொயரி'க்கு எழுதிப் போட்டு விட்டீர்களாமே...? அந்தக் கிராம சேவிகாவை நான் கையைப் பிடிச்சு இழுத்ததாக அபாண்டமான பழி சுமத்தியிருக்கிறீர்கள்... எப்போதுமே ஒரு கை ஓசை எழுப்பாது என்பது உங்களுக்குத் தெரியும்... நடந்தது என்னவோ நடந்து விட்டது... அதைக் கண்டுக்காமல் போய் விட்டால் உங்களுக்கும் நல்லது... எங்களுக்கும் நல்லது... இந்த ஊர் எம். எல். ஏ. முல்லையரசன் என்னோட ஆருயிர்த் தோழர் என்பது உங்களுக்குத் தெரியுமல்லவா?''

— தாம், பி.டி.ஓ. மீது உக்கிரமான ஒரு பாணத்தைத் தொடுத்துவிட்ட திருப்தியில் எழுந்து கொண்டார் எஸ். இ. ஓ. வடிவேல்!

ஆனால் பழனியப்பனுக்குச் சிரிப்புத்தான் வந்தது! கடமைகளைச் செய்வதற்கும், நியாயமாக நடப்பதற்கும் தண்டனைகள் கிடைக்கக் கூடுமானால், அத்தகைய தண்டனைகள் பெருமைக்குரியவை அன்றோ? நெருப்பும் உண்மைகளும் சுடத்தான் செய்யும். அதற்கு என்ன செய்வது?

ஜன்னல் திரையை விலக்கிப் பார்த்தால், தூரத்தில் மரங்களடர்ந்த பாறைகளின் வழியே அருவிகள் விழுவதைக் காணலாம். வெள்ளி ஜரிகைகளைத் தொங்கவிட்டது போல் அவை தோன்றும்!

ஈஸிசேரில் சாய்ந்தபடி இந்தக் காட்சியை அவர் ரொம்ப நேரமாக ரசித்துக் கொண்டிருந்தார். மனத்தைக் காயப்படுத்தாத காட்சிகளை அவர் கொஞ்ச நேரமேனும் காண வேண்டும். முந்தைய சம்பவங்கள் காயப்படுத்திய ரணம் இன்னும் ஆறவில்லை.

ஒரு தவறைச் சுட்டிக் காட்டியதற்கு மாறுதல் உத்தரவைப் பரிசாகக் கொடுத்து விட்டனர். ஒரு பெண்ணிடம் தகாத முறையில் நடந்து கொள்வதென்பது எவ்வளவு பெரிய குற்றம்? அதைத் தட்டிக் கேட்டதற்குத் தண்டனையா? குற்றம் செய்தவர்களுக்குக் கிடைக்க வேண்டிய தண்டனைகள், குற்றம் சுமத்தியவர்கள் மீதல்லவா சுமத்தப்படுகின்றன!

பியூன் முனிசாமி உள்ளே நுழைந்தான்!

''ஐயா... இது தண்ணியில்லாத காடுன்னு சொல்லி நிறையப் பேரை கவர்மெண்ட்டு இங்கே மாத்தியிருக்கு... 'பனிஷ்மெண்டு'



ஏரியான்னு இந்த ஊரைச் சொல்லுவாங்க... புதுசா மாத்தி வந்த உங்க மேல நம்ம ஆபீசு ஆளுங்க ஒரு மாதிரியாத்தான் பார்க்கிறாங்க... ஒரு மாதிரியாத்தான் பேசிக்கறாங்க..."

"இத பாரு முனிசாமி... யாரு என்ன பேசினா எனக்கென்ன? இந்த மாதிரி அவங்க இவங்க பேசின விஷயமெல்லாம் எனக்கு வேண்டாம்; பிடிக்காது. ஒட்டுக் கேக்கற உன் பழக்கத்தை இன்னியிலிருந்து விட்டுடு.... உன் வேலையை நீ செய்; என் வேலையை நான் செய்யறேன்..."

முனிசாமி காவிப் பற்களைக் காட்டிச் சிரித்துக் கொண்டான். தலையை வேறு

சொறிந்து கொண்டான்.

முனிசாமிக்கு இவரைப் பிடிக்கும் இவரை என்றால், இவருடைய நேர்மையை, சொன்ன பேச்சு மாறாத நாணயத்தை, தொழிலில் உள்ள கண்டிப்பை... தீமைக்கு அஞ்சாத வீரத்தை... எல்லாம் பிடிக்கும்!

ஆனால், மடியில் தீயைக் கட்டிக் கொண்டதைப் போலத்தான் முனிசாமிக்கு இருந்தது! எவ்வளவு பெரிய குடும்பம் அவனுடையது? அதைக் காப்பாற்ற வேண்டிய பெரும் பொறுப்பு இருக்கிறதே! பியூன் வேலையில் கிடைக்கும் சம்பளம் ஆறு ஏழு வயிறுகளுக்குப் போதுமானதாக இருக்க முடியாதே. எனவே, அவனும் தலையைச் சொறிந்து, பல்லைக் காட்டிக் கையை நீட்ட வேண்டித்தானிருந்தது!

ஆர். ஐக்களும் (ரோடு இன்ஸ்பெக்டர்கள்), முக்கிய சேவக்குகளும் அவனுக்கு அவ்வப் போது 'அழுது' விடுவார்கள்! காண்ட்ராக்டர்கள் என்றால் இன்னும் கொஞ்சம் தாராளமாகப் பொழிவார்கள். ஒவ்வொரு சிமெண்ட் பர்மிட்டுக்கும் இன்ஜினியர் காட்டும் தாராளம், பள்ளியில் படிக்கும் பிள்ளைகளின் புத்தகங்களுக்குப் போதுமானதாக இருந்தது! அவ்வப்போது 'அக்ரி' வேறு உரங்களாகவும், விதைகளாகவும் இவனைக் கண்டு கொள்ளுகிறார்...

சத்துணவு ஆர்கனைஸர்கள் என்றால் கேட்கவே வேண்டாம். போடப்பட்ட செக்குகள் ஒவ்வொன்றுக்கும் அவர்கள் இவனுக்குச் சில்லறைகளாக அபிஷேகம் செய்து விடுகிறார்கள்....

"ஸார் வணக்கம்!" — நிமிர்ந்தார் பழனியப்பன்!

"ஸார்... நான் இந்த ஊரு தலைக்கட்டு... பரம்பரை பரம்பரையாக் காண்ட்ராக்ட் வேலை பார்த்து வருகிறோம்... 'ஏழெருமைப் பாலம்'னு ஒண்ணு வடகிழக்கே அஞ்சு மைல் தள்ளி இருக்கு... அது பாழடைஞ்சு போயி புதுசா பாலம் கட்ட டெண்டர் கேட்டிருந்திங்க... பத்திரிகையிலே விளம்பரம் பார்த்தேன்..."

"இப்ப அதுக்கென்ன...!"

"டெண்டரிலே நானும் கலந்திருக்கேன்... நம்ம இஞ்சினியர் சாரைச் சரிக்கட்டிட்டேன்... ரோட் இன்ஸ்பெக்டர்கள் நாலு பேரும் நம்ம பக்கம்.... அதை எனக்கே நீங்க தரணும்... அதாவது கிடைக்கிற மாதிரி செய்யணும்..."

மிரட்டுகிற மாதிரியும் இல்லாமல், கெஞ்சுகிற மாதிரியும் இல்லாமல், தான் ஒரு பெரிய புள்ளியாக்கும் என்ற தோரணையைக் காட்ட முயன்றார் அந்தக் காண்ட்ராக்டர்!

பழனியப்பனின் கண்களில் கனல் கொப்புளித்தது!

"ஓகோ! புரிகிறது... புரிகிறது... முறை தவறி நடக்க வேண்டும். அப்படித்தானே? அதுதான் என்னால் முடியாது. எது நியாயமோ, எது முறையோ அதுப்படி எல்லாம் நடக்கும்...

வந்தவர் தம் கடைசி அஸ்திரத்தைப் பிரயோகப்படுத்தத் துவங்கினார்!

"ஐயா...! நீங்க தப்பா நெனச்சுக்கப்படாது... இந்தப் பையிலே பதினைந்தாயிரம் ரூபா இருக்கு... வித்தியாசமா எடுத்துக்காம இதை நீங்க தயவு பண்ணி வாங்கிக்கணும்... இங்கே, வழக்கமா கவனிக்கிற கவனிப்புத்தான் இது... வித்தியாசமா நினைக்கப்படாது நீங்க....

பையை வாங்கிக் கொண்டார்! ரொம்பவும் கனமாக இருந்தது! இழுத்து விசிறி எறிந்தால் முகத்தைப் பிய்த்துக் கொண்டு போகும். தம் பலம் கொண்ட மட்டும் ஓங்கி விசிறி எறிந்தார். அது அந்தக் காண்ட்ராக்டரின் கன்னத்தில் மோதி, கண்களைக் காயப்படுத்தி விட்டுக் கீழே வாய் திறந்து உள்ளே இருந்த பாவச் சின்னங்கள் சிதறின...!

சிங்கம் போல் சீறி விட்டு வெளியேறினார் காண்ட்ராக்டர்!

பஸ் போய்க் கொண்டிருந்தது... முனிசாமி 'அவர'ருகே சமமாக அமர்ந்திருந்தான்!

"முனிசாமி... அந்தப் பையை இப்படிக் கொடு. அது என்னிடமே இருக்கட்டும்..."

"இருக்கட்டும் ஐயா....

"இல்லை; நான் என் சொந்த வேலையாகப் போவது போல, நீயும் உன் சொந்த வேலையாகப் போகிறாய்... இந்தப் பொது இடத்தில் நான் பி.டி.ஓ.வாக இல்லை... நீ நீயாகவும், நான் நானாகவும் இருப்பதுதான் நல்லது... அந்தப் பையில் என் அழுக்குத் துணிகள்தான் உள்ளன... அதை நீ ஏன் சுமக்க வேண்டும்?"

முனிசாமிக்கு எதுவுமே பேச வரவில்லை. அந்த இடத்தில் என்ன பேசுவது? கோழிகளைப் போல அடைத்துக் கொண்டு செல்லும் பஸ்ஸில் ஒரு சாதாரண பிரஜை போல பி.டி.ஓ. பயணிக்கிறார். இவருக்கென்று கொடுத்திருக்கும் ஜீப் என்ன செய்கிறது? சும்மாதானே கிடக்கிறது? மனுஷன் ஜம்மென்று எடுத்துக் கொண்டு போகக் கூடாதா? இவர் நினைத்தால் அப்படிச் செய்யலாம். ஆனால், அவர் அப்படி நினைப்பாரா என்பதுதான் பிரச்னை....

ஒரு காட்டுப் பாதையில் பஸ் நின்றது. ரயில் ஒன்று குறுக்கே பாதையைக் கடந்து செல்ல வேண்டியிருந்தது.

அப்போதுதான் அது நிகழ்ந்தது!

பஞ்சாயத் யூனியன் ஜீப் வந்து, அவர் முன்னால் நின்றது. அவருடைய அலுவலகத்துக்குச் சொந்தமானதல்லவா அது? ஓட்டி வந்த டிரைவர் ஓடி வந்து இவருக்குச் 'சல்யூட்' அடித்தான்!

"என்ன ராமசாமி.... என்ன ஆச்சு? ஜீப்பை ஏன் வெளியே எடுத்தே? உள்ளே யார் இருக்காங்க...?"

தயங்கியபடியே சொன்னான் டிரைவர் ராமசாமி:

"ஐயா... சேர்மன் ஐயா உள்ளே இருக்

அருள்வாக்கு

மெடிகல் ஸயன்ஸுக்கு உரிய பூர்ண லக்ஷணத்தோடு தேஹத்தின் தன்மை, வியாதிகளின் தன்மை, அவை எப்படி ஏற்படுகின்றன, ஏற்படாமலே எப்படித் தடுப்பது, ஏற்பட்டு விட்டால் அப்புறம் எப்படிக் குணப்படுத்துவது, மருந்துச் சரக்குகளின் தன்மை என்ன என்றெல்லாம் தீர்க்கமாய் அலசி உண்டான நம் ஆயுர்வேதம் அவசியம் ரக்ஷிக்கப்பட வேண்டியதாகும். தேஹ ரக்ஷையைத் தருகிற அந்த சாஸ்திரமே வியாதி பிடித்து மெலிந்து விடக் கூடாது. மெடிகல் ஸயன்ஸாகப் பூர்ண ரூபத்தில் இருப்பதோடு மட்டுமின்றி, மற்ற ஸயன்ஸ்களும் இதில் கலந்திருப்பதை உத்தேசித்தும், இத்தனை ஸயன்ஸ்கள் இருந்த போதிலும், ஸயன்ஸ் என்றால் ஸமயாசாரத்துக்கு விரோதமாகத்தான் போக வேண்டுமென்றில்லாமல் நம் ஆசாரத்துக்கு ஏற்றதாகவும் ஆயுர்வேதம் இருப்பதால் அதன் ஆயுர் விருத்தியை நாம் உண்டாக்கித் தரவேண்டும்.

"நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்", "சுவரை வைத்துத்தான் சித்திரம் எழுத வேண்டும்" என்ற பழமொழிகள் ஆரோக்யமாயிருக்க வேண்டியதன் அவசியத்தைச் சொல்கிறவையே. கிராம வாழ்க்கையின் ஸுகாதாரமான காற்றோட்டமும் எளிமையும் அநுஷ்டானங்களும் போய் நகர வாழ்க்கையின் பலவித நெரிசல்கள் ஏற்பட்டு விட்ட பின் வியாதிகள் அபரிமிதமாகப் பரவி வருகின்றன. வைத்யத்தோடு ஈசுவரனைப் பிரார்த்தித்துத்தான் ஸரி செய்யணும். தெய்வ ஸம்பந்தமான பாராயண நூல்கள் பலவற்றிலும் "பலச்ருதி"யில் "ரோகார்த்தீ முச்யதே ரோகாத்" என்பது போல ரோக நிவிருத்தியை ஒரு பலனாகச் சொல்லியிருப்பதால் மத ரக்ஷணைக்காகவே தேஹ ரக்ஷணையும் நம் நிலையில் அவசியந்தான் என்று தெரிகிறது. நம்முடைய கலாசாரத்தோடு ஒட்டிப் போகிற நம்முடைய பிராசீன வைத்திய சாஸ்திரப்படியே இந்த ரக்ஷணையைப் பெற்று எல்லோரும் ஸௌக்யமாய் வாழ வேண்டும்.

— ஜகத்குரு காஞ்சி காமகோடி ஸ்ரீ சந்திரசேகரேந்திர சரஸ்வதி சங்கராச்சாரிய சுவாமிகள்.



கார்.....''

''அப்படியா...? எங்கே போகிறார்?''

தயங்கினான் மறுபடியும்!

''என்னப்பா, என்ன விஷயம்? சும்மா சொல்லு....''

''டவுனில் ஒரு நல்ல இங்கிலீஷ் படம் போட்டிருக்காம்.... அதான் அப்படியே ஒரு ரவுண்ட் போயிட்டு வரலாம்னு சேர்மன் ஐயா அபிப்பிராயப்பட்டாரு...''

இவரால் உட்கார்ந்திருக்க முடியவில்லை. எழுந்து ஓடி வந்து அந்த மனுஷனைக் கட்டிப் பிடித்து உருட்டி அருவியில் தள்ளி விட வேண்டும் போல், கோபம் பொங்கியது. ஆனால் அப்படியெல்லாம் செய்து விட முடியாமல் போகிற கையாலாகாத் தனத்தை எண்ணி நொந்து கொண்டார்!

இது குறித்து கலெக்டருக்கு எழுதலாம்; என்கொயரி நடக்கும். ஆனால், ஓர் அரசியல் கட்சியின் பலத்தில் இருக்கும் மனிதரைச் சாதாரண ஊழியன் என்ன செய்து விட முடியும்? பதவிகளின் பலம் மனிதர்களின் நேர்மைகளால் மட்டும் கணிக்கப் படுவதில்லை, அவர்களின் அத்து மீறிய செயல்களால் கூட அந்தப் பதவிகளுக்கு அதீத பலம் கூடிவிடுமோ என்னவோ?

''சரி... நீ போ....'' என்று பஸ்ஸின் கிழிந்த இருக்கையில் சாய்ந்து கொண்டார், பி.டி.ஓ. பழனியப்பன்!

''ரேகா...'' என்று உள்ளே நுழைந்ததும் மனைவியை அழைத்தார் பழனியப்பன்.

''உங்களுக்குத் தெரியுமா? மாதவிங்கிற சத்துணவு அமைப்பாளரை நீங்க சஸ்பெண்ட் பண்ணிட்டீங்களாம்...''

''ஆமாம்... அரிசி, பருப்பு, எண்ணெய் எல்லாம் எங்கெங்கோ போவதைக் கண்டு பிடித்தோம்...''

ரேகா குழைந்தாள்.

''நீங்க இந்த முறை அவளை மன்னிக்க வேணும்... அவளுக்குக் கீழே ஆறு தம்பிகள், நாலு தங்கைகள்... மிகவும் ஏழைப்பட்ட குடும்பம்... இப்போ அத்தனை பேரும் பட்டினி கிடந்து சாகறாங்க... தெரியாமல் தப்புப் பண்ணிட்டாளாம்.. மன்னிக்கும்படி மிகவும் கெஞ்சிக் கேட்டுக் கொண்டாள்... கதறி அழுதாள்... பாவம்....''

ஒரு வினாடி யோசித்தார். வாஸ்தவம் தான். மாதவியை மன்னிக்கத்தான் வேண்டும். அவளுடைய ஏழைக் குடும்பச் சூழலை முன்னிட்டாவது அதைச் செய்துதான் ஆக வேண்டும்.. அவள் செய்த தப்புக்கு, மற்றவர்கள் ஏன் பசியால் வாட வேண்டும்?

உடனே, ஒரு காகிதத்தை எடுத்து எழுதத் துவங்கினார்....

மறுநாள், ஓர் 'உண்மை விளம்பி' தன் செலவில் அச்சிட்டு ஒட்டியிருந்த வால் போஸ்டரை அவர் கண்டார்!

''அநியாயம்... சத்துணவுப் பருவ மங்கை மாதவியின் மையலில் மயங்கிய பி.டி.ஓ. ஒழிக! லஞ்சம் வாங்கிக் கொண்டு மாதவியின் சஸ்பெண்ட் ஆர்டரை ரத்து செய்த பி.டி.ஓ.வை மன்னிக்கலாமா? ஊர் மக்களே! நீங்களே தீர்ப்புக் கூறுங்கள்!''

ஒரு சூப்பர் தாத்தா!



● சூப்பர் தாத்தா

தம் பெண் வயிற்றுப்பேத்தியின் பேத்தியைப் பார்க்கிற பாக்கியம் பெற்ற ஒரு சூப்பர் தாத்தாவைப் பற்றிக் கேள்விப்பட்ட போது ஆச்சரியத்தால் நமக்குக் கண்கள் விரிந்தன. அவரைக் காண ஆவல் கொண்டு புறப்பட்டோம்.

திருச்சி மாவட்டம் குளித்தலையிலிருந்து பஸ்ஸிலும் சைக்கிளிலுமாகச் சென்று ஸ்ரீரங்கரெட்டியூரை அடைந்து விசாரித்துக் கொண்டு, ஓடு போட்ட ஒரு கொட்டகையை அடைந்தோம். ஒரு கயிற்றுக் கட்டிலில் நாம் சந்திக்கச் சென்ற 'சூப்பர் தாத்தா' தூங்கிக் கொண்டிருந்தார்.

உச்சி முதல் உள்ளங்கால் வரை கருக் கமேரசுருக்கம். அப்படி ஒரு சுருக்கம். ஒல்லியான தேகம். கட்டிலின் ஒரு பகுதியில் சாய்த்து வைத்திருந்த கைத்தடியைப் பிடித்துக் கொண்டு எழுந்திருந்தார். நம்முடன் வந்திருந்த அவருடைய பேத்தியின் கணவர், தாத்தாவிடம் நம்மை அறிமுகப்படுத்திய படியே, கைத்தாங்கலாகத் தாத்தாவைக் கொட்டகையின் வெளியே அழைத்து வந்தார்.

''யாரு?'' என்று தெலுங்கில் கேட்க, பேத்தியின் கணவர் தாம் இன்னார் என்று சொன்னவுடன் தாத்தா, 'ஓ'வென அழ ஆரம்பித்து விட்டார்.

நமக்கு ஒன்றும் புரியவில்லை. ''ஏன் அழுகிறீர்கள்?'' என்று நாம் கேட்க, ''என் சம்பந்தி வீட்டுக்காரரைப் பார்த்து நான் யாருன்னு கேட்டுட்டேனே!'' என்று சொன்னார் அழுகையை நிறுத்தாமல்.

ஒருவழியாகச் சமாதானப்படுத்தியபின், ''ஒரு வாரமாய் எனக்குப் பார்வை சரியில்லை! மெட்ராஸ்லேயிருந்து வந்திருக்கீங்களே! என் கண் பார்வைக்கு ஒரு வழி பண்ணக் கூடாதா? 'இதுங்களை எல்லாம் நான் பார்க்க முடியலையே!'' என்றார் உணர்ச்சிவசப்பட்ட குரலில், சுற்றி நின்று கொண்டிருந்த அவர் குடும்பத்து நண்டு சிண்டுகளைத் தடவிப் பார்த்து அணைத்துக் கொண்டு.

தாத்தாவின் பெயர் பாப்புரெட்டியார். தம் வயது என்ன என்று சரியாய்த் தாத்தா

வால் சொல்ல முடியவில்லை என்றாலும், குடும்பத்தினர் சொன்ன கணக்குப்படி தாத்தாவின் குறைந்தபட்ச வயது 120. அப்பா பெயர் ராமசாமி. அவர் ஐம்பது வயதிலேயே இறந்து விட்டார்.

தாத்தாவுடன் ஒரு மினி பேட்டி:

''தாத்தா! ஸ்கூலுக்குப் போய்ப்படிச்சீங்களா?''

''நான் பள்ளிக்கூடத்துப் பக்கமே போனதில்லை.''

''சின்ன வயசில என்ன செஞ்சீங்க?''

''மாடு மேய்ச்சேன்! பயிர் வேலை பார்த்தேன்!''

''எத்தனை வயசுல கல்யாணம்?''

''இருபதோ, இருபத்தைஞ்சோ... அவளும் போய்ச் சேர்ந்துட்டா!''



குடும்பத்துடன் சுப்பா தாத்தா.

''உங்களுக்கு எத்தனை பெண்கள்? எத்தனை ஆண்கள்?''

''நாலு பொம்பளைப் புள்ளைங்கதான்!''

''நீங்க உடம்பு சௌகரியப்படாமல் படுத்ததுண்டா?''

''இல்லை... இப்பத்தான் பார்வை குறைஞ்சு போச்சு. நான் நோவுன்னு டாக்டராண்ட போனதுமில்லை; கைவைத்தியமும் பார்த்ததில்லை.''

''உங்க ஆரோக்கியத்துக்குக் காரணம் என்ன?''

''காலைல கஞ்சி சாப்பிடுவேன். மத்தியானம் நல்லாச் சாப்பாடு. ஆட்டுக் கறி நல்லாச் சாப்பிடுவேன். அந்தக் காலத்துல எதுவும் சுத்தமா இருக்கும்; சத்தும் அதிகமாயிருக்கும். எதிலேயும் கலப்படம் கிடையாது.''

குடும்பத்தினர் சொன்ன கணக்குப்படி தாத்தாவுக்கு இருபத்தைந்துக்கும் அதிகமான பேரன், பேத்திகள் இருக்கிறார்கள். பேரன் பேத்திகளுக்கெல்லாம் சேர்ந்து சுமார் ஐம்பதுக்கும் அதிகமான பேரன், பேத்திகள்!

இளையவயதில் திருச்சி பகுதியில், தாத்தா மிகப் பிரபலமான மாட்டு வியாபாரியாம். திருச்சியிலிருந்து கோயம்புத்தூர் வரை கூட மாடுகளை ஓட்டிக் கொண்டு, நடந்தே போய் வியாபாரம் செய்வாராம். அந்தக் காலத்துல நடந்த நடைதான் இன்றைக்கும் உடம்பு தெம்பாய் இருப்பதற்குக் காரணம் என்று தாத்தா பல முறை சொல்லுவாராம்.

இதையெல்லாம்விட ஆச்சரியமான விஷயம் — தாத்தா இன்னும் ஒரு சினிமா கூடப் பார்த்ததே இல்லை என்பது!


— எஸ். சந்திரமௌலி.

வண்ணப்படங்கள்: 'சுபா' ரவிசங்கர்



துப்பறியும்
சூர்யா–கிரண்
நவின் பிரதாப் முல்லிக்
ஜோஷியைச் சந்தித்துத் திரும்பிய சூர்யா எல்லாவிவரங்களையும்கிரணுக்குக்கூறினான்.
மறுநாள் கிரண் விமான நிலையம் சென்றான்.
விமான உபசரணைப் பெண் அவளை வரவேற்றாள்.
விமானம் கிளம்பி மேலே உயர்ந்தது.
சில மணி நேரத்துக்குப் பிறகு உபசரணைப் பெண் அறிவித்தாள்...
துபாயை இன்னும் பத்து நிமிஷங்களில் அடைந்து விடுவோம்...
© INDIAN FEATURES SYNDICATE Bombay-400092
அப்போது ஓர் அதிகாரக் குரல்......
எச்சரிக்கை! யாரும் அசையக் கூடாது!
கடத்தல்காரர்கள் விமானத்தைக் கைப்பற்றினர்...
எல்லோரும் அமைதியா யிருந்தால் யாருக்கும் ஆபத்தில்லை......
விமானியின் அறைக்குக் கடத்தல்காரர்கள் சென்றனர்.
ஜெட்டாவில் உள்ள பழைய விமான நிலையத்துக்கு விமானத்தைச் செலுத்துங்கள். அல்லது சாகத் தயாராகுங்கள்!
5

(தொடரும்)



போயே போச்சு!



வலியும் வேதனையும் மாயமாய் மறைகின்றன!

பத்து இயற்கை மூலப்பொருட்களின் இதம் தரும் கலவை- இதுவே அமிர்தாஞ்சன். 90 ஆண்டுகளுக்கும் மேலாக மக்களின் பரிபூரண நம்பிக்கைக்குப் பாத்திரமானது.

தலைவலி, உடல்வலி, சுளுக்கு — எதுவாக இருந்தாலும் லேசாகத் தேய்த்தாலே போதும். நீங்கள் உணரும் முன்னரே உங்கள் வலியும் வேதனையும் மறைந்தே போய்விடும்!

அமிர்தாஞ்சன்

மீண்டும் புன்னகை மலரச் செய்கிறது — விரைவாக!

அமிர்தாஞ்சன் லிமிடெட்

பொன்னியின் செல்வன்



அத்தியாயம் 34
தீவர்த்தி அணைந்தது!

அமாவாசை முன்னிரவு. நன்றாக இருள் சூழ்ந்து விட்டது. வடதிசையில் தோன்றி மேலே வந்த கரிய மேகங்கள் இப்போது வானவெளி முழுதும் பரவி மறைத்து விட்டன. ஆகாசத்தில் ஒரு நட்சத்திரம்கூடக் கண் சிமிட்டவில்லை. மரங்களின் மீதும் புதர்களின் மீதும் பறந்த மின்மினிப் பூச்சிகள் சிறிது வெளிச்சம் அளித்தன. அதன் உதவி கொண்டு வந்தியத்தேவன் குதிரையைச் செலுத்திக் கொண்டு போனான். எங்கே போகிறோம், எதற்காகப் போகிறோம், போவதினால் பயன் ஏதேனும் ஏற்படுமா என்பது ஒன்றும் தெளிவாகவில்லை. குந்தவைப்பிராட்டியின் அருமைத் தோழிக்கு ஆபத்து வந்திருக்கிறது. அவளைக் காப்பாற்ற முயலுவது தன் கடமை. அப்புறம் கடவுள் இருக்கிறார்!

அமரர் கல்கி

ஒரு நாழிகை நேரம் குதிரை ஓடிய பிறகும் பல்லக்கைக் கண்டுபிடிக்க முடியவில்லை. வெறும் பைத்தியக்கார வேலையில் இறங்கிவிட்டோமோ என்ற யோசனை வந்தியத்தேவன் மனத்தில் உதித்தது. குதிரையை நிறுத்தினான். அச்சமயம் சற்றுத்தூரத்தில் ஏதோ சத்தம் கேட்டது. கூர்ந்து கவனித்தான். குதிரைக் காலடிச் சத்தம் போலிருந்தது. ஆம், குதிரைதான்! ஒரு குதிரையா, பல குதிரைகளா என்று தெரியவில்லை. பல்லக்கைக் காவல் புரிந்துகொண்டு போகும் குதிரை வீரர்களாயிருக்கலாம். இனி, ஜாக்கிரதையாகப் போக வேண்டும். திடீரென்று பெருங்கூட்டத்தின் நடுவில் அகப்பட்டுக் கொள்ளக் கூடாது. அதனால் வானதிதேவிக்கும் பயன் இல்லை; தன் காரியமும் கெட்டுப் போகும்.

மெள்ள மெள்ள, நின்று நின்று குதிரையை விட்டுக் கொண்டு போனான். முன்னால் போவது ஒரே குதிரைதான் என்று ஒருவாறு நிச்சயித்துக் கொண்டான். சற்று நேரத்துக்கெல்லாம் அந்தக் குதிரை ஒரு மேட்டுப்பாங்கான கரையின்மீது ஏறுவது போலத் தோன்றியது. தான் பின்

தொடர்வது தெரியாமல் மறைந்து நிற்க விரும்பினான். சுற்றுமுற்றும் கூர்ந்து பார்த்தான். பாழடைந்த மண்டபம் ஒன்று இடிந்த சுவர்களுடன் பக்கத்தில் காணப்பட்டது. அதன் அருகே சென்று மொட்டைச் சுவர் ஒன்றின் மறைவில் குதிரையை நிறுத்திக் கொண்டான். முன்னால் சென்று மேட்டில் ஏறிய குதிரையைக் கண்கள் வலிக்கும்படியாக இருட்டில் உற்றுப் பார்த்துக் கொண்டிருந்தான்.

"யார் அங்கே?" என்ற குரல் வந்தியத் தேவனைத் திடுக்கிடச் செய்தது. அது அவனுக்குப் பழக்கப்பட்ட மனிதரின் குரலாகத் தோன்றியது.

"மகாராஜா! அடிமை, நான் தான்!" என்ற மறுகுரலும் கேட்டது.

ஒரு நிமிட நேரத்துக்கெல்லாம், குரல்கள் கேட்ட இடத்தில் ஒரு தீவர்த்தி வெளிச்சம் தோன்றியது. மரத்தின் மறைவிலிருந்து கையில் தீவர்த்தியுடன் ஒருவன் வெளிவந்தான். அதன் வெளிச்சத்தில் குதிரை தெரிந்தது. குதிரையின்மேல் ஓர் ஆள் வீற்றிருப்பதும் தெரிந்தது. குதிரை மேலிருந்தவர் மதுராந்தகர்தான் என்பது உறுதியாயிற்று.

தரையில் நின்றவன் தீவர்த்தியைத் தூக்கிப் பிடித்தபோது இளவரசர் ஏறியிருந்த குதிரை மிரண்டது. முன்னங்கால்களை அது மேலே தூக்கி ஒரு தடவை சுழன்றது. பின்னர் சடால் என்று பாய்ந்து ஓடத் தொடங்கியது.


அந்தக் குதிரை நின்ற இடம் ஒரு அகன்ற வாய்க்காலின் கரை. அந்த மேட்டுக் கரையிலிருந்து குதிரை வாய்க்காலின் வெள்ளத்தில் பாய்ந்தது.

தீவர்த்தி பிடித்த மனிதன் "மகாராஜா! மகாராஜா!" என்று கூவிக் கொண்டே குதிரையைப் பின் தொடர்ந்து வாய்க்காலில் குதித்தான். குதித்தவன் இடறி விழுந்தான். தீவர்த்தி வாய்க்காலின் வெள்ளத்தில் அமிழ்ந்தது.

மறு கணம் முன்னைவிடப் பன்மடங்கு கனாந்தகாரம் சூழ்ந்தது.

அதே சமயத்தில் இலேசாகத் தூறல் போடத் தொடங்கியது.

காற்றினால் மரங்கள் ஆடிய சத்தத்துக்கும் மழைத் தூறலின் சத்தத்துக்கும் மண்டூகங்களின் வறட்டுக் கத்தல்களுக்கும். இடையே மனிதர்களின் அபயக் குரல்களும் குதிரைகளின் காலடிச் சத்தமும் குழப்பமாகக் கேட்டன.



இளவரசர் மதுராந்தகர் அவ்வளவீரத் தைரியத்துக்குப் பெயர் போன மனிதர் அல்ல என்பதை வந்தியத் தேவன் அறிந்திருந்தான்.

மிரண்ட குதிரையின் மேலிருந்த மதுராந்தகருக்கு என்ன ஆபத்து விளையுமோ என்று அவன் உள்ளம் திடுக்கிட்டது. குதிரை அவரைச் சுமந்து கொண்டே தெறி கெட்டு ஓடினாலும் ஓடலாம். அல்லது அவரை வாய்க்கால் வெள்ளத்திலேயே தள்ளியிருந்தாலும் தள்ளியிருக்கலாம். அல்லது சற்றுத் தூரம் அவரைச் சுமந்து கொண்டு சென்று வேறு எங்கேயாவது தள்ளி விட்டுப் போயிருக்கவும் கூடும்.

தீவர்த்தியுடன் வந்த மனிதனால் குதிரையைத் தொடர்ந்து போய் அவரைக் காப்பாற்ற முடியுமா? அவனே தான் வாய்க்கால் வெள்ளத்தில் தடுமாறி விழுந்து விட்டானே?

அச்சமயம் தான் செய்ய வேண்டியது என்ன? வானதியைத் தேடிப் போவதா? மதுராந்தகரின் உதவிக்குச் செல்லுவதா? என்ற போராட்டம் ஒரு நிமிடம் அவன் உள்ளத்தில் நிகழ்ந்தது.

வானதி தேவி போன இடமே தெரியவில்லை. ஆனால் மதுராந்தகர் தன் கண் முன்னால் ஆபத்துக்கு உள்ளானார். அவருக்கு உதவி செய்வது எளிது. அவரைத் தேடிப் பிடித்து அபாயம் ஒன்றுமில்லை என்று கண்டால், பிறகு வானதியைத் தேடிப் போவது இருக்கவே இருக்கிறது! கடவுளே! சம்பந்தமில்லாத வேறு எந்தக் காரியத்திலும் தலையிடுவதில்லை என்றுதான் சற்று முன்னால் தீர்மானித்துக் கொண்டு கிளம்பியது என்ன? இப்போது நடப்பது என்ன?

மண்டபச் சுவரின் மறைவிலிருந்து குதிரையை வெளியில் கொண்டு வந்தான் வந்தியத்தேவன். இருட்டிலும் தூறலிலும் உள்ளுணர்ச்சியினால் வழி கண்டுபிடித்து வாய்க்காலில் இளவரசரின் குதிரை இறங்கிய இடத்தை நோக்கிச் சென்றான் வாய்க்காலில் அவனும் இறங்கினான். சுற்றுமுற்றும் நன்றாகப் பார்த்தான். ஒன்றும் தென்படவில்லை. எங்கேயோ தூரத்தில் 'ஆஆஆ!' 'ஓஓஓ!' 'ஈஈஈ!' 'டடபடா டடபடா' 'கடகட கடகடா!' என்பவை போன்ற விவரம் தெரியாத சத்தங்கள் கேட்டன.

வாய்க்காலின் அக்கரையில் ஏறினான். கரை மேட்டுக்கு அப்பால் உற்றுப் பார்த்தான். நெடுகிலும் நெல் வயல்களாகக் காணப்பட்டன. வயல்களில் சேற்றிலும் பச்சைப் பயிரிலும் குதிரையை நடத்திச் செல்வது இயலாத காரியம். கரையோடு போய்த்தான் தேடிப் பார்க்க வேண்டும்.

வாய்க்காலின் கரையிலோ செடி கொடிகளும் முட் புதர்களும் அடர்ந்திருந்தன. அவற்றின் நடுவே சென்ற குறுகிய ஒற்றையடிப் பாதை வழியாகக் குதிரையைச் செலுத்திக் கொண்டு சென்றான். மேலே மழை; கீழே சறுக்கும் சேற்றுத் தரை; ஒரு பக்கத்தில் வாய்க்கால்; இன்னொரு பக்கத்தில் நெல் வயல்கள்; சுற்றிலும் முட்புதர்கள்.

குதிரை மெள்ள மெள்ளச் சென்றது.

நேரமோ ஒரு நிமிஷம் ஒரு யுகமாகச் சென்றது.

தூறல் மழையாக வலுத்துக் கொண்டிருந்தது!

இருட்டு மேலும் இருண்டு கொண்டிருந்தது!

வந்தியத்தேவனுடைய உள்ளம் சிந்தனையில் ஆழ்ந்தது.

மதுராந்தகத்தேவர் தனியாகக் குதிரை மீது ஏன் வந்தார்? எங்கே செல்வதற்காகப் புறப்பட்டு வந்தார்? அவரை எதிர் கொண்டு வந்த மனிதன் யார்?

வானதியைச் சிலர் பிடித்துக் கொண்டு சென்றதற்கும் இதற்கும் ஏதேனும் சம்பந்தம் உண்டா?

வானதியின் கதி இப்போது என்ன ஆகியிருக்கும்?

நாம் எதற்காக இந்தச் சங்கடத்தில் அகப்பட்டுக் கொண்டு விழிக்க வேண்டும்?

நம்முடைய காரியத்தை நாம் பார்க்கலாமே? இராஜ பாட்டையைத் தேடிப் பிடித்து அடைந்து, காஞ்சியை நோக்கிப் போகலாமே?

அதுதான் இந்த மழைக்கால இருட்டில் எப்படிச் சாத்தியமாகும்?

இந்தக் காரியங்கள் எல்லாம் நமக்குச் சம்பந்தம் இல்லையென்று எப்படித் தீர்மானிக்க முடியும்?

கடம்பூர் சம்புவரையர் அரண்மனையில் நமக்குச் சம்பந்தமில்லாத காரியத்தைக் கவனித்ததினால் பிற்பாடு எவ்வளவு உபயோகம் ஏற்பட்டது?

ஆனாலும் இன்றிரவு இந்த இருட்டில் இந்த வாய்க்காலின் கரையோடு போய்க் கொண்டிருப்பதினால் ஒரு பயனும் ஏற்படப் போவதில்லை. சொட்ட நனைவதுதான் பயன்! குதிரை எங்கேயாவது இடறி விழுந்து காலை ஒடித்துக் கொண்டால், பிரயாணமே தடைப்பட்டு விடும்.

திரும்பிச் சென்று அந்தப் பாழும் மண்டபத்தை அடைய வேண்டியது தான். மழை விட்ட பிறகுதான் மறுபடி புறப்பட வேண்டும்.

பளிச்சென்று ஒரு மின்னல். அதன் கணநேர வெளிச்சத்தில், சிறிது தூரத்தில், களத்து மேடு ஒன்றில், குதிரை நின்றது போலத் தெரிந்தது.

வந்ததுதான் வந்தோம்; இன்னும் கொஞ்ச தூரம் சென்று, அதையும் பார்த்து விட்டுத்தான் போகலாமே! இளவரசர் மதுராந்தகருக்கு ஆபத்துச் சமயத்தில் கை கொடுத்து உதவினால், அதன் மூலம் பிற்பாடு எவ்வளவோ காரியங்களுக்குச் சாதகம் ஏற்படலாம்.

குதிரையை வாய்க்காலின் கரையிலிருந்து பக்கத்து வயல் வரப்பில் வந்தியத் தேவன் இறக்கினான்.

குதிரை நின்றதாகத் தோன்றிய களத்து மேட்டை நோக்கிச் செலுத்தினான்.

களத்து மேட்டின் சமீபத்தை அடைந்த போது அது ஒரு பெரிய கரிய பூதத்தைப் போல் காட்சி அளித்தது.

இன்னொரு மின்னல்.

மேட்டின் மீது குதிரை நின்றது ஒரு கணம் தெரிந்தது. குதிரையின் பேரில் ஆள் இல்லை என்பதை வந்தியத் தேவன் கவனித்துக் கொண்டான்.

இடி இடித்தது!

இடிக்கும் மின்னலுக்கும் பயந்து தானோ என்னமோ அந்தக் குதிரை மறுபடியும் தெறிகெட்டுப் பாய்ந்து ஓடத் தொடங்கியது. அதைத் தொடர்ந்து போவதில் இனி ஒரு பயனுமில்லை.

பக்கத்தில் எங்கேயாவது குதிரை மேலிருந்து விழுந்த மதுராந்தகத் தேவர் ஒரு வேளை இருக்கக் கூடும்.

ஆகையால், வந்தியத் தேவன் பல முறை குரல் கொடுத்துப் பார்த்தான். "ஜிம் ஜிம்" "ரிம் ரிம்" என்னும் மழை இரைச்சலை மீறி அவனுடைய இடி முழக்கக் குரல் "அங்கே யார்?" "அங்கே யார்?" என்று எழுந்தது. நாலாபுறத்திலிருந்தும் "அங்கே யார்?" "அங்கே யார்?" என்ற எதிரொலிதான் கேட்டது.

மழை மேலும் வலுத்துக் கொண்டிருந்தது. வாடைக் காற்று விர் என்று அடித்தது. காற்றின் வேகத்தினால் மழைத் தாரைகள் பக்கவாட்டில் திரும்பித் தாக்கின. குதிரை உடம்பைச் சிலிர்த்துக் கொண்டது. வந்தியத்தேவனுடைய உடம்பும் மழையினால் தாக்கப்பட்டுக் குளிரினால் நடுங்கத் தொடங்கியது.

இனி அங்கே நிற்பதில் ஒரு பயனுமில்லை. வந்தியத்தேவன் குதிரையை வந்த வழியே திருப்பினான். தன்னுடைய அறிவீனத்தை எண்ணி வருத்தப்பட்டுக் கொண்டே வந்தான். இனிமேலாவது இத்தகைய அசட்டுக் காரியங்களில் இறங்காமலிருக்க வேண்டும். நம்முடைய காரியம் உண்டு, நாம் உண்டு என்று பார்த்துக் கொண்டு போக வேண்டும்......

குதிரை தன்னுடைய உள்ளுணர்ச்சியைக் கொண்டு வழி கண்டு பிடித்து இடிந்த மண்டபத்துக்கு அருகில் வந்து நின்று ஒரு கனைப்புக் கனைத்தது; அப்போதுதான் வந்தியத் தேவன் சிந்தனா உலகத்திலிருந்து இந்த உலகத்துக்கு வந்தான். குதிரை மீதிருந்து இறங்கினான். அவன் உடுத்தியிருந்த துணிகள் சொட்ட நனைந்து போயிருந்தன. அவற்றை உலர்த்தி யாக வேண்டும். அன்றிரவு அந்த இடிந்த மண்டபத்தில் தானும் குதிரையும் தங்கியிருப்பதற்கு இடியாத பகுதி ஏதேனும் இருக்கிறதா என்று சுற்று முற்றும் பார்த்தான்.

வெட்ட வெளியில் கொட்டுகின்ற மழையில் காலிலே நெருப்புச் சுட்டால் எப்படியிருக்கும்? அவ்வாறு வந்தியத் தேவன் துள்ளிக் குதிக்க நேர்ந்தது. அதற்குக் காரணம் வேறொன்றுமில்லை. பேயில்லை, பிசாசில்லை; ஒரு சின்னஞ்சிறு குழந்தையின் குரல்தான்!

"அம்மா! அம்மா!"

பேயில்லை, பிசாசில்லை, என்று எப்படிச் சொல்ல முடியும்? அந்த வேளையில் அந்த மண்டபத்தில், குழந்தைக் குரல் எப்படிக் கேட்க முடியும்?

அது பேய் பிசாசின் குரல் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும்?

சீச்சீ! பேயும் இல்லை; பிசாசும் இல்லை! பேயும் பிசாசும் பயப் பிராந்தி கொண்ட பேதைகளின் கற்பனை!

"அம்மா! அம்மா! ஊம்! ஊம்!" இது மனிதக் குழந்தையின் குரல்தான்! தாயைப் பிரிந்த சேயின் பயங் கலந்த அழுகைக் குரல்தான்!

இடிந்த மண்டபத்தின் இருளடைந்த பகுதியிலிருந்து வருகிறது.

குழந்தை மட்டுந்தான் இருக்கிறதா? வேறு யாரும் இல்லையா?

"அம்மா! அம்மா! ஊம்! ஊம்!"

குரல் வந்த இடத்துக்குச் சமீபத்தில் சென்று வந்தியத் தேவன் "யார் அங்கே?" என்றான்.

"யார் அங்கே?" என்று குழந்தை

யின் குரல் எதிரொலித்தது.

"நான்தான்! நீ யார்? இருட்டில் என்ன செய்கிறாய்! வெளியே வா!"

"வெளியில் மழை பெய்கிறதே?"

"மழை நின்று விட்டது; வா!"

"என் அம்மா எங்கே?"

"அம்மா உனக்குப் பால் வாங்கிக் கொண்டு வரப் போயிருக்கின்றாள்."

"இல்லை; நீ பொய் சொல்கிறாய்!"

"நீ வெளியில் வருகிறாயா? நான் உள்ளே வரட்டுமா!"

"உள்ளே வந்தால் என் கையிலே கத்தியிருக்கிறது; குத்தி விடுவேன்!"

"அடே அப்பா! பெரிய வீரனாயிருக்கிறாயே? வெளியில் வந்துதான் குத்தேன்!"

"நீ யார்? புலி இல்லையே?"

"நான் புலி இல்லை; குதிரை!" என்றான் வந்தியத்தேவன்.

"நீ பொய் சொல்லுகிறாய்; குதிரை பேசுமா?"

"புலியாயிருந்தால் பேசுமா?"

"வெளியில் வந்தால் புலி இருக்கும், ஒரு வேளை மேலே பாய்ந்து விடும் என்று அம்மா சொன்னாள்."

"நான் புலி இல்லை; உன் பேரில் பாயவும் மாட்டேன்; ஆகையால் பயப்படாமல் வெளியே வா!"

"பயமா? எனக்கென்ன, பயம்?" என்று சொல்லிக் கொண்டே ஒரு சின்னஞ்சிறு குழந்தை இருண்ட மண்டபத்திலிருந்து வெளியே வந்தது.

இதற்குள் மழை நன்றாகவிட்டுப்போயிருந்தது. மேகங்கள் சிறிது விலகி நட்சத்திரங்களும் தெரிந்தன.

நட்சத்திர வெளிச்சத்தில் அக்குழந்தையை வந்தியத்தேவன் பார்த்தான்.

சுமார் நாலு வயதிருக்கும்.

தெரிந்த வெளிச்சத்தைக் கொண்டு வெகு இலட்சணமான குழந்தை என்று தெரிந்து கொண்டான்.

இடுப்பில் ஒரு சிறிய பட்டுத் துணி உடுத்தியிருந்தது. கழுத்தில் ஒரு ரத்தின மாலை அணிந்திருந்தது.



பெரிய குலத்துக் குழந்தையாகவே இருக்க வேண்டும். இதை இங்கே தனியாக விட்டுவிட்டுப் போன தாய் யார்? இங்கே எதற்காக வந்தாள்? ஏன் குழந்தையை விட்டுவிட்டுப் போனாள்?

இதற்குள் குழந்தையும் வந்தியத்தேவனை உற்றுப் பார்த்துவிட்டு, நீ குதிரையில்லை; மனிதனைப் போல் தான் இருக்கிறாய்!" என்றது.

"அதோ குதிரையும் இருக்கிறது, பார்!" என்றான் வந்தியத்தேவன்.

குழந்தை குதிரையைப் பார்த்தது.



"ஓகோ! எனக்காகத்தான் கொண்டு வந்திருக்கிறாயா? பல்லக்கு வரும் என்றல்லவா சொன்னார்கள்?"

சிறுவனின் மறுமொழி வந்தியத்தேவனுடைய மனத்தில் பற்பல முரண்பட்ட எண்ணங்களை உண்டாக்கின. இந்தக் குழந்தை யார்? இவன் ஏன் இங்கே தனியாயிருக்கிறான்? இவ்வளவு சின்னஞ்சிறு பிள்ளை இப்படிச் சற்றும் பயப்படாமல் இருக்கிறானே, இது ஆச்சரியமல்லவா? இவனுக்காக யார் பல்லக்கு அனுப்புவதாகச் சொல்லியிருந்தார்கள்? அது ஏன் வரவில்லை? இவனை விட்டு விட்டுப் போன இவன் அம்மா யார்? அவள் எங்கே போயிருக்கிறாள்?

"குழந்தை! உன்னை ஏன் உன் அம்மா விட்டுவிட்டுப் போய் விட்டாள்?" என்று கேட்டான்.

"அம்மா என்னை விட்டு விட்டுப் போகவில்லை; நான்தான் அவளை விட்டுவிட்டு வந்துவிட்டேன்!" என்றான் அந்தச் சிறுவன்.

"ஏன் விட்டுவிட்டு வந்தாய்?"

"குதிரை ஒன்று ஓடி வந்தது. அதைப் பிடித்து அதன் மேல் ஏறிக் கொண்டு வரலாம் என்று நான் சொன்னேன். அம்மா கூடாது என்றாள். நான் அவளுக்குத் தெரியாமல் குதிரையைப் பிடிக்க ஓடி வந்தேன். அந்தக் குதிரை தானா இது?"

"இல்லை; இது வேறு குதிரை! அப்புறம், எப்படி இங்கே வந்தாய்?"

"குதிரை அகப்படவில்லை. அம்மாவையும் காணவில்லை. மழை அதிகமாக வந்தது. அதற்காக இந்த மண்டபத்துக்குள் வந்தேன்."

"இருட்டில் தனியாக இருக்க உனக்குப் பயமாயில்லையா?"

"பயமென்ன? தினம் தினம் இந்த மாதிரிதானே இருக்கிறேன்?"

"புலிக்குக் கூட பயமில்லையா?"

"அம்மாவுக்குத்தான் பயம். எனக்குப் பயமில்லை. நான் மீன். புலியை விழுங்கி விடுவேன்."

"அடே, மீன் புலியை விழுங்குமா?"

"நான் சாதாரணச் சின்ன மீன் இல்லை! பெரிய மகர மீன்; திமிங்கிலம்! புலி, சிங்கம், யானை எல்லாவற்றையும் விழுங்கி விடுவேன்!......"



"ஹூம்... புதிய கல்விக் கொள்கையினால், நமக்கொண்ணும் இலாபமில்லை....?"

"ஏன் அப்படிச் சொல்றே...?"

"முப்பத்தஞ்சு மார்க்குக்கு மேலே எடுத்தால்தான், பாஸ்ங்கிற பழைய திட்டம் இன்னும் மாறலையே?"

— கரடிகுளம் ஜெயாபாரதிப்ரியா.

வந்தியத்தேவன் மனத்தில் என்னவெல்லாமோ எண்ணங்கள் தோன்ற ஆரம்பித்தன. புலியை விழுங்கும் மீன் அதிசயமான மீன் அல்லவா! இப்படி யார் இந்தப் பிள்ளைக்குச் சொல்லிக் கொடுத்திருப்பார்கள்?

"அதோ அங்கே என்ன சத்தம்?" என்று கேட்டான் சிறுவன்.

வந்தியத்தேவன் பார்த்தான். தூரத்தில் ஒரு கூட்டம் வந்து கொண்டிருந்தது. கூட்டத்தில் சிலர் தீவர்த்திப் பந்தங்களை வைத்துக் கொண்டிருந்தார்கள். அவர்களுக்கு நடுவில் ஒரு பல்லக்கும் தெரிந்தது. எல்லாரும் பரபரப்புடன் ஓடி வந்து கொண்டிருந்தார்கள். அவர்களில் ஒரு பெண் பிள்ளையும் இருந்ததாகத் தோன்றியது. "அங்கே!" "இங்கே!" "அதோ!" "இதோ!" என்ற கலவரமான குரல்கள் கேட்டன.

இடிந்த மண்டபத்தைக் கூட்டத்தில் ஒருவன் பார்த்துச் சுட்டிக் காட்டினான். அவ்வளவுதான்; எல்லாரும் அம் மண்டபத்தை நோக்கி ஓட்டம் பிடித்து ஓடி வந்தார்கள்.

"அதோ வருகிறார்கள். பல்லக்கும் வருகிறது. எனக்குப் பல்லக்கில் ஏறப் பிடிக்கவில்லை. என்னை உன் குதிரையின் மேல் ஏற்றிக் கொண்டு போகிறாயா?" என்று சிறுவன் கேட்டான்.

அந்தக் குழந்தையின் முகமும் தோற்றமும் பேச்சுக்களும் வந்தியத்தேவனுடைய மனத்தைக் கவர்ந்தன. அவனைக் கட்டி அணைத்துத் தூக்கிக் கொள்ளலாம் என்று தோன்றியது. ஆனால், மனத்திற்குள் ஏதோ ஒரு தடங்கலும் கூடவே ஏற்பட்டது

"எனக்கு வேறு அவசர வேலை இருக்கிறதே!" என்றான் வந்தியத்தேவன்.

"நீ எங்கே போகப் போகிறாய்?"

"காஞ்சிக்கு!"

"காஞ்சிக்கா! அங்கேதான் என்னுடைய முக்கிய சத்துரு இருக்கிறான்!"

வந்தியத்தேவனுக்குத் தூக்கிவாரிப் போட்டது. அவ்விடம் அந்தப் பிள்ளையின் அருகில்தான் நிற்பது கூடப் பிசகு என்று எண்ணினான். ஆனால் குதிரையின் மேல் ஏறிப் போவதற்கும் அவகாசம் இல்லை. கூட்டம் வெகு அருகில் வந்து விட்டது. ஓடினால் சந்தேகத்துக்கு இடமாகும். இவ்வளவுடன், என்னதான் நடக்கப் போகிறது என்று தெரிந்து கொள்ளும் ஆவலும் வந்தியத்தேவனைப் பற்றியிருந்தது. ஆகையால் சற்று ஒதுங்கிச் சென்று இடிந்த சுவர் ஓரமாக இருட்டில் நின்றான்.

"இதோ நான் இருக்கிறேன்" என்று முன்னால் போய் நின்றான் சிறுவன்.

வந்தவர்களிலெல்லாம் முதலில் வந்தவள் ஒரு பெண் பிள்ளை. அவளுக்கு ஓடி வந்ததினால் இரைத்துக் கொண்டிருந்தது. அதை அவள் பொருட்படுத்தாமல் தாவி வந்து குழந்தையை எடுத்து வாரி அணைத்துக் கொண்டு "பாண்டியா! இப்படிச் செய்து விட்டாயே?" என்றாள்.

அவளுக்கு அடுத்தபடியாக வந்தவன் ரவிதாஸன். அவன் சிறுவனின் பக்கத்தில் வந்து நின்று "சக்கரவர்த்தி! இப்படி எங்களைப் பயமுறுத்தி விட்டீர்களே?" என்றான்.

சிறுவன் சிரித்தான். "அப்படித்தான் பயமுறுத்துவேன். நான் குதிரை வேண்டும் என்று கேட்டேன். பல்லக்குக் கொண்டு வந்திருக்கிறீர்களே!" என்றான்.

நாம் முன்னம் பார்த்திருக்கும் சோமன் சாம்பவன், இடும்பன்காரி,

தேவராளன் முதலியவர்கள் சிறுவனை வந்து சூழ்ந்து கொண்டார்கள்.

''சக்கரவர்த்தி! ஒரு குதிரை என்ன? ஆயிரம் குதிரை, பதினாயிரம் குதிரை கொண்டு வருகிறோம். இன்றைக்கு இப் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றான் சோமன் சாம்பவன்.

''மாட்டேன்; நான் அந்தக் குதிரை மேலேதான் ஏறி வருவேன்'' என்று சிறுவன் கூறிச் சுவர் மறைவில் நின்ற குதிரையைச் சுட்டிக் காட்டினான்.

அப்போதுதான் குதிரையையும் அதன் அருகில் நின்ற வந்தியத்தேவனையும் அவர்கள் கவனித்தார்கள்.

ரவிதாஸன் முகத்தில், வியப்பும், திகிலும் குரோதமும் கொழுந்து விட்டு எரிந்தன.

இரண்டு அடி முன்னால் சென்று, ''அடே பாவி! நீ எப்படி இங்கே வந்து சேர்ந்தாய்?'' என்று கேட்டான்.

''அட பிசாசே! கோடிக் கரையிலிருந்து நீ எப்படி இங்கே வந்தாய்?'' என்று கேட்டான் வந்தியத்தேவன்.

ரவிதாஸன் 'ஹா ஹா ஹா' என்று சிரித்தான். ''நீ என்னை உண்மையாகவே பிசாசு என்று நினைத்துக் கொண்டாயா?'' என்று கேட்டான்.

''சிலர் செத்துப் போன பிறகு பிசாசு ஆவார்கள். நீ உயிரோடிருக்கும் பிசாசு!'' என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன், ''அவனோடு சண்டை போடாதே! அவனை எனக்கு ரொம்பப் பிடித்திருக்கிறது. இருட்டில் அவன் எனக்குத் துணையாயிருந்தான். புலி வந்தால் கொன்று விடுவதாகச் சொன்னான். அவனும் நம்மோடு வரட்டும்'' என்றான்.

ரவிதாஸன் சிறுவன் அருகில் சென்று, ''சக்கரவர்த்தி! அவசியம் அவனையும் அழைத்துப் போகலாம். தாங்கள் இன்றைக்கு ஒரு நாள் பல்லக்கில் ஏறிக் கொள்ளுங்கள்!'' என்றான்.

சிறுவன் அவ்வாறே பல்லக்கை நோக்கிச் சென்றான்.

ரவிதாஸன் வந்தியத்தேவனை மறுபடியும் நெருங்கி ''இப்போது என்ன செய்யப் போகிறாய்?'' என்று கேட்டான்.

''நீயல்லவா சொல்ல வேண்டும்?''

''எங்களுடன் வந்து விடு! எங்களுடைய இரகசியம் உனக்கு முன்னமே அதிகம் தெரியும். இப்போது இன்னும் அதிகமாகத் தெரியும். உன்னை விட்டு விட்டு நாங்கள் போக முடியாது. வந்து விடு!''

''உங்களுடன் நான் வர மறுத்தால்?.....''

''முடியாத காரியம். நீ பெரிய சூரன் என்பதை அறிவேன். ஆயினும் நாங்கள் இருபது பேர் இருக்கிறோம். எங்களைத் தப்பி நீ போக முடியாது.''

''உயிரோடு தப்ப முடியாது என்றுதானே சொல்கிறாய்?''

''நீ இளம்பிராயத்தவன். உலகத்தின் சுகங்கள் ஒன்றையும் அனுபவியாதவன். எதற்காக வீணுக்கு உயிரை விட வேண்டும்?''

''வீணுக்கு யார்தான் உயிரை விடுவார்கள்? உங்களுடன் வரச் சொல்கிறாயே? எங்கே கூப்பிடுகிறாய்? நீங்கள் எங்கே போகிறீர்கள்?''

''அப்படிக் கேள், சொல்கிறேன். பழுவூர் இளைய ராணியிடந்தான்!''

''ஓகோ! அப்படித்தான் நினைத்தேன். இளையராணி இன்று எங்கே இருக்கிறாள்?''

''இளையராணி இத்தனை நேரம் திருப்புறம்பயத்துக்கு வந்திருப்பாள். நீ வருவாயா, மாட்டாயா?''

''நானும் அந்தப் பக்கந்தான் போக வேண்டும். வழிகாட்ட யாரும் இல்லையே என்று பார்த்தேன். நல்ல வேளையாக நீ வந்து சேர்ந்தாய்! போகலாம், வா!'' என்றான் வந்தியத்தேவன்.

இதற்குள் சிறுவன் பல்லக்கில் ஏறிக் கொண்டான். பல்லக்கு நகர்ந்தது. அதைச் சுற்றிலும் தீப்பந்தங்களைப் பிடித்துக் கொண்டும் பலவித கோஷங்களை எழுப்பிக் கொண்டும் ரவிதாஸனுடைய கோஷ்டியார் சென்றார்கள்.

வந்தியத்தேவனும் அவர்களைத் தொடர்ந்து சென்றான். அவன் உள்



"யோவ் 116! இன்னைக்கு நம்ம ஊர்க் கோயிலுக்கு அமைச்சர் வர்றார்... நான் அவரோட கோயிலுக்குள்ளே போய் அவரைக் கவனிச்சுக்கறேன். நீ வெளியே நின்னு அவர் செருப்பைப் பார்த்துக்க...

— விக.

ளத்தில் பல்வேறு எண்ணங்கள் அலைபாய்ந்தன. வானதியின் கதி என்ன? தெரியவில்லை. மதுராந்தகர் என்ன ஆனார்? தெரியவில்லை. தன்னுடைய கதி இன்றிரவு என்ன ஆகப் போகிறது? அதுவும் தெரியவில்லை.

கடம்பூர் மாளிகையில் அன்று கண்டறிந்த சதிச் செயலைவிடப் பன்மடங்கு பயங்கரமான சதிச் செயலைப் பற்றி இன்று நேர்முகமாக அறிந்துகொள்ளப் போகிறோம் என்பதில் சந்தேகமில்லை. அந்த வரையில் பிரயோஜனகரமானதுதான். ஆனால் அதற்குப் பிறகு என்ன நடக்கும்? தன்னை உயிரோடு தப்பிச் செல்ல இவர்கள் விடுவார்களா? இவர்களோடு சேர்ந்து விடும்படி தன்னையும் கட்டாயப்படுத்துவார்கள். மாட்டேன் என்று சொன்னால், பலியிடத்தான் பார்ப்பார்கள். ஒருவேளை மறுபடியும் நந்தினியின் தயவினால்.........

பழுவூர் இளையராணியின் பெயரை ரவிதாஸன் கூறியதும் அவர்களுடன் போகத் தான் இணங்கி விட்டதை வந்தியத்தேவன் நினைத்துப் பார்த்தான். அது அவனுக்கே வியப்பை அளித்தது. 'மாயை' என்றும், 'மோகம்' என்றும் பெரியோர்கள் சொல்வது இதைத்தான் போலும். அவள் எவ்வளவு பயங்கரமான சதிச் செயல்களில் ஈடுபட்டிருக்கிறாள் என்பது அவனுக்குத் தெரிந்துதானிருந்தது. ஆயினும் அவளைச் சந்திப்பதற்கு ஒரு சந்தர்ப்பம் கிடைத்தது என்றால், அதைப் பயன்படுத்திக் கொள்ள அவன் மனத்தில் ஓர் ஆர்வம் எழுந்தது. அடக்க முடியாமல் தன்னை மீறி எழுந்தது. யோசித்துப் பரர்ப்பதற்கு முன்னால் அவன் வாய் 'வருகிறேன்' என்று பதில் சொல்லி விட்டது..... ஆனால் வேறு வழிதான் என்ன? ரவிதாஸன் கூறியது போல் இத்தனை பேருடன் தன்னந் தனியாகச் சண்டையிடுவது சாத்தியமில்லை. சிறிது அவகாசம் கிடைத்தால் தப்பிச் செல்வதற்கு ஏதேனும் ஓர் உபாயம் தென்பட்டாலும் தென்படலாம். அத்துடன், இந்தச் சதிகாரக் கூட்டத்தைப் பற்றியும் இன்னும் தெளிவாக அறிந்து கொள்ளலாம்.

"காஞ்சிக்கா போகிறாய்? அங்கே தான் என்னுடைய முக்கிய சத்துரு இருக்கிறான்!" என்று அந்தச் சின்னஞ்சிறு குழந்தை மழலை மொழியில் கூறியது அடிக்கடி வந்தியத்தேவனுக்கு நினைவு வந்து கொண்டிருந்தது. அந்தச் சிறுவன் யார்? அவனைச் "சக்கரவர்த்தி" என்று இவர்கள் அழைப்பதேன்? "முக்கிய சத்துரு" என்று அச் சிறுவன் யாரைக் குறிப்பிட்டான்? இந்தக் கேள்விகளுக்ெல்லாம் அவனுடைய மனத்தில் பதில்களும் தோன்றிக் கொண்டிருந்தன. நினைக்க, நினைக்க, பயங்கரம் அதிகமாகிக் கொண்டிருந்தது. கடவுளே! இவற்றுக்கெல்லாம் முடிவு எப்போது? "வெகு சீக்கிரத்தில்" என்று அவனுக்குள் ஒரு குரல் சொல்லியது.

அந்த் அதிசய ஊர்வலம் போய்க் கொண்டேயிருந்தது. வயல்கள், வாய்க்கால்கள், வரப்புகள், காடு மேடுகளைத் தாண்டி ஒரு கணமும் நிற்காமல் போய்க் கொண்டிருந்தது. கடைசியாக, வெள்ளப் பெருக்கெடுத்து ஓடிய மண்ணி நதியையும் தாண்டி அப்பால் திருப்புறம்பயம் எல்லையை அடைந்தது. பள்ளிப் படையைச் சுற்றிலும் மண்டியிருந்த காட்டுக்குள்ளும் பிரவேசித்தது.

(தொடரும்)


"தினமும் மூணு வேளை கேரமில்க் கொடுங்க, சரியாயிடும்!"
Parry's
கேரமில்க்
CARAMILK
"குழந்தைகளே... இன்னிக்கு
கேரமில்க் சாப்பிட்டிங்களா!"
PARRY'S
பாரிஸின் தரமான தயாரிப்புகள்
கேரமில்க் · சாக்லேட் எக்ளேர்ஸ் · டிரை-மி
கோகனட் கிரீம் · சாக்ளேர்ஸ் · லாலிபாப்ஸ் · காஃபி பைட்
Parry's
The King of Sweets
HTA 7077

தொடுவான உறவுகள்

டிபன் பாக்ஸை நீட்டின அம்மா கொஞ்ச நேரம் வெறித்துப் பார்த்தாள். ஹேண்ட்—பாக்கிற்குள் பாக்ஸை வைக்கும் வரை இமை அசையாமல் பார்த்தாள்.

''மறந்திடாதே காயத்ரி... எப்படியும் ஒண்ணு ஒன்றரைக்கு வந்திடு. ஆபீஸ்ல மத்தளம் அடிக்காதே. ஃபாமிலி பங்க்ஷன்னு சொல்லிட்டு வா.''

காயத்ரி பதில் பேசாமல் முன்னறைக்கு வந்து செருப்பை மாட்டினாள். ஈஸிசேரில் உட்கார்ந்து எட்டு மணி நியூஸைக் கேட்டுக் கொண்டிருந்த அப்பா நிமிர்ந்தார்.

''அரைநாள் லீவு போட்டுட்டு வந்திடு காயத்ரி. விளையாட்டுத்தனமா மறந்திடாதே.''

'சரி' என்கிற மாதிரி தலையசைத்து விட்டு நடந்தாள். நாக்கு நுனி வரை சிரிப்பு எட்டிப் பார்த்தது. அடக்கிக் கொண்டாள். சிரிப்பை மீறிக் கொண்டு உள் மனசில் பயம் தோன்றிற்று.

என்ன செய்யப் போகிறேன்? இவர்கள் சொல்வதற்குச் சரி என்று சொல்லி என்னை நானே அடிமைப்படுத்தப் போகிறேனா?

பெண் பார்க்கிற வழக்கத்தை யார் கண்டுபிடித்தது? எதற்காக இந்தத் திருமணங்கள் — அவரவரின் தனித்தன்மையை அடகு வைத்துக் கொண்டு!

வெயில் சுள்ளென்று அடித்தது. குடை எடுத்து வந்திருக்கலாம். 'மறந்திடாதே, மறந்திடாதே' என்று ஆளுக்காள் இரைந்ததில் குடை எடுக்க மறந்து விட்டது.

ஏன் ஒரு மணிக்கு 'மறக்காமல்' வர வேண்டும்? — கல்யாணம் செய்ய. எவனோ ஒரு முன்பின் தெரியாதவன் பெண் பார்த்து விட்டு மூக்கணாங்கயிறு மாதிரி தாலி கட்ட. கடவுளே!

இனிமேல் என் அந்தரங்கம் அழிந்து விடும். நான் என்கிற தனித்துவம் மறைந்து விடும். இது நிச்சயம். எனக்கென்று தனிச் சிந்தனை இருக்காது. இருக்கக் கூடாது. என் கவிதை நிலைக்காது. டைரி முழுக்க இருக்கும் என் உள்மனக் குமுறல்கள், இனி புஸ்வாணம்.

'என் ரத்தத்தில்
ஒரு வரிப்புலி ஜாடை.
அண்ணாந்து பாருங்கள் —
ஆகாயத்தின் மேல்
என் பாதம்.'

கவியரங்கத்தில் கை தட்டப்பட்ட கவிதை. தாலி கட்டுகிறவனுக்கு இந்தக் கவிதை அந்நியமாய்ப்படும். கவிதைக்கு ரசிகனாய் இருந்தாலும் கவியரங்கத்தில் தன் மனைவி நாலு ஆண்களுக்கு நடுவில் நின்று மைக் பிடித்துப் பேசுவது அசிங்கமாய்த் தோன்றும். 'கவிதையாம்... மண்ணாம். வீட்ல ஒழுங்காப் பொங்கிப் போடு' என்று சண்டை மண்ணைக் கிளறும்.

எதற்காக இத்தனையும்? கல்யாணம் செய்யாமல் வாழ முடியாதா? என் ரத்தத்தில் இருக்கும் வரிப் புலியின் ஜாடையை நான் ஏன் மாற்ற வேண்டும்? ஆகாயத்தின் மேலிருக்கும் என் பாதத்தை ஏன் கீழே கொண்டு வர வேண்டும்?

பஸ் பிடித்து ஆபீஸுக்குள் நுழையும் போது, சரியாகப் பத்து மணி. மானேஜரின் கோபப் பார்வையைத் தவிர்த்து, ரிஜிஸ்தரில் அவசரமாய்க் கையெழுத்துப் போட்டு விட்டு, சீட்டில் உட்கார்ந்த போது மூச்சு வாங்கியது.

பக்கத்து சீட் சாவித்ரி ஸ்நேகமாய்ச் சிரித்து ''குட்மார்னிங்'' என்றாள். இந்த



செக்‌ஷனுக்கு மாற்றப்பட்டதில் கிடைத்த நல்ல சிநேகிதி. சிநேகத்துக்கு மட்டுமே மனசைப் புல்லரிக்க வைக்கிற சக்தி இருக்கிறது. மனசிற்குள் நேசச் சாமரம் வீசி ஜீவன் பிறக்க வழி வகுக்கிறது.

சாவித்ரியின் புன்னகை மனசை நீவி விடுகிற மாதிரி இருந்தது.

"என்ன காயத்ரி... லேட்?"

"என்னோட 'டெப்யூ' இன்னைக்கி."

"என்ன சொல்றே?"

காயத்ரிக்கு அம்மா சொன்னது ஞாபகம் வந்தது. "ஆபிஸ்ல மத்தளம் அடிக்காதே. ஃபாமிலி பங்க்‌ஷன்னு சொல்லிட்டு வா." குரலைக் கீழ்ஸ்தாயிக்கு மாற்றிக் கொண்டு மெல்லிசாய்ச் சாவித்ரிக்கு மட்டும் கேட்கிற மாதிரி காயத்ரி கிசுகிசுத்தாள்.

"இன்னைக்குச் சாயந்தரம் என்னைப் பொண்ணு பார்க்க வர்றாங்க."

சாவித்ரி சந்தோஷமாய்க் கண்கள் மின்னச் சிரித்தாள்.

"ஹிர்ரே.... ஆல் த பெஸ்ட்."

சட்டென்று காயத்ரிக்குள் எரிமலை கழன்றது. இந்த விஷயத்திற்கு இத்தனை சந்தோஷம் தேவையா? மூளை வரை சிலிர்த்துப் போய் வாழ்த்துச் சொல்ல வேண்டுமா? கல்யாணம் என்றால் சந்தோஷம் என்று தீர்மானிக்கப்பட்டு விட்ட விஷயம் என்பதால் வரும் சிலிர்ப்பு இது. கல்யாணத்தின் இருட்டுப் பக்கத்தை யாரும் யோசிப்பதில்லை. அந்த வெளிச்சப் பகுதி இவர்களை இழுக்கிறது!

"எத்தனை மணிக்குக் கிளம்புறே?"

"எனக்குப் பிடிக்கலே சாவித்ரி இதெல்லாம்."



தமயந்தி

"எல்லாப் பொண்ணுகளும் சொல்றது தான் — வெட்கம்."

ஹெல் வித் திஸ் வெட்கம்! பெண் என்றால் வெட்கப்பட வேண்டும் என்று இதென்ன டைம்–டேபிள். கல்யாணத்திற்கு எதற்காக வெட்கப்பட வேண்டும்? இந்த வெட்கம் வெறும் நாடகம். தலைமுறை தலைமுறையாய்ப் பெண்ணின் மேல் திணிக்கப்பட்ட விஷயம்.

"இல்லை சாவித்ரி. நிஜமாச் சொல்றேன். சத்தியமாச் சொல்றேன் — எனக்குப் பிடிக்கலை."

"அதெல்லாம் மாப்பிள்ளையைப் பார்த்துட்டாச் சரியாயிடும். அது சரி... மாப்பிள்ளை பேர் என்ன? எங்கே வேலை பார்க்கிறார்? உள்ளூரா வெளியூரா?"

"தெரியலை. கேக்கலை சாவித்ரி."

சாவித்ரி கண் விரித்துப் பார்த்தாள். இமை விளிம்பு வரை ஆச்சரியம் தேங்கி நின்றது.

"ஏன் கேக்கலை? எதனால?"

காயத்ரி அவளைக் கூர்ந்து பார்த்தாள். காரணமே இல்லாமல் கண்ணுக்குள் நீர் பொங்கிப் பார்வையை மங்கலாக்கியது.

"தெரியலே சாவித்ரி. எனக்கும் கேக்கணும்னு தோணலை."

பியூன் வந்து மானேஜர் கூப்பிடுகிறார் என்று சாவித்ரியைக் கூப்பிட்ட பின், நோட்ஸ் எடுத்து முடித்து, வெளியே வந்த போது, மணி ஒன்றாகியிருந்தது. லீவ் லெட்டர் எழுதிச் சாவித்ரியின் மேஜை மேல் வைத்து விட்டு — காயத்ரி போயிருந்தாள்.

பஸ்ஸில் ஓர சீட் கிடைத்தது. காயத்ரி ஜன்னல் கம்பி மேல் முகத்தைச் சாய்த்துக் கொண்டாள். 'கலோசன முதலியார்' பாலம் தாண்டும் போது திடீரென்று நேற்றுச் சாயங்காலம் பெண் பார்க்க வந்த முகம் ஞாபகம் வந்தது.

'ஐயாம் பாலசந்திரன். ப்ரீதா நர்சிங் ஹோம்ல அசிஸ்டெண்ட் பிசிஷியனா இருக்கிறேன். ஹாஸ்பிடல் கலோசன முதலியார் பாலம் கிட்டத்தான்.'

ரொம்பச் சாதாரணமாய்த் தன்னைத் தானே அறிமுகப்படுத்திக் கொண்டான். காயத்ரி உதட்டைக் கடித்தாள். உங்களுக்கும் கவிதை பிடிக்குமா என்று கேட்கலாமா? பிடிக்கும் என்று இப்போது சொல்வான். கல்யாணத்துக்குப் பிறகு உண்மை நிறம் என்னவோ? இப்போது பிடிக்கும் கவிதை அப்போது எரிச்சலைக் கூடத் தரலாம். நம்பாதே காயத்ரி. இந்தப் பசுத்தோலுக்குள் புலி பதுங்கிக் காத்திருக்கும். உன்னை அழிக்கப் போகும் புலி.

'உங்க ஆபீஸ் எங்கே இருக்கு? பஸ்ஸா? எத்தனை மணிக்குக் கிளம்புவீங்க? வரவா



"மொய் எழுதுற இடத்தில் கவலையா ஒருத்தர் உட்கார்ந்திருக்காரே! யாருங்க அது?"

"என் தூரத்து உறவுக்காரர்தான். மொய்ப் பணத்தில் திருப்பித் தர்ரேன்னு அவர்கிட்டேதான் கல்யாணச் செலவுக்குப் பணம் வாங்கினேன்!"

— மணியன் தர்மலிங்கம்.

வெயில் ரொம்ப ஜாஸ்தி... தண்ணி நல்லா வருதா....? சீர் நீங்க என்ன செய்யணுமோ செய்யுங்க. ஒண்ணுமே செய்யலைன்னாக் கூட நாங்க ஒண்ணும் சொல்லப் போறதில்லை. பாலாக்கும் இந்தச் சம்பிரதாயம் பிடிக்காது. உங்க பொண்ணுக்கு நீங்க நகை செஞ்சு போட ஆசைப்பட்டாப் போடுங்க. இல்லைன்னா... எல்லாத்தையும் நாங்க பார்த்துக்கிறோம்...?' இத்யாதி இத்யாதிகள்.

காயத்ரி தனக்குள் சிரித்துக் கொண்டாள். சீரும் வரதட்சணையும் தாலி கட்டும் நேரம் தேவைப்படும் இவர்களுக்கு. 'சீர் கொடுங்க. கொடுத்தாத்தான் எம் பையன் தாலி கட்டுவான். நாங்க வேண்டாம்னுட்டா பெத்தவங்க செய்யாமலே இருந்திடறதா?' எனப்படும். அப்பா, செஞ்சுவார். அடுத்த தீபாவளிக்குள் தருவதாய்ச் சொல்லப்பட்டு மூன்று முடிச்சு கழுத்திலேறும். அந்தத் தாலி தேவையா? அதில்லாமலேயே கழுத்து அழகாய் இருக்கிறதே!

அவர்கள் கிளம்பின பிறகு அம்மாவும் அப்பாவும் விரல் நுனி வரை சந்தோஷப்பட்டார்கள்.

'நல்ல வரன். சீக்கிரம் தேதியை வச்சிடலாம்னு சொல்லிட்டாங்க.'

'ஆனா.... எனக்குப் பிடிக்கலையே.'

அப்பா அவசரமாய் எழுந்தார். சந்தோஷம் மறைந்து பதற்றம் தெரிந்தது.

'ஏன் பிடிக்கலே... ஏன் பிடிக்...'

'அவர் யார்? இதுவரைக்கும் எனக்கு அவரைத் தெரியாது. எப்படி திடும்னு அவரை நேசிக்க முடியும்? குடும்பம் நடத்த முடியும்? கணவர்னு சொல்லிட்டா நேசிக்க முடிஞ்சிடுமா? என்னை எந்த அளவு பாதுகாப்பார்! என்னை — என் சுயத்தை அழிக்காமல் பாதுகாப்பாரா? என் கவிதையைப் பாதுகாப்பாரா?'

'இது நல்ல இடம்மா.'

காயத்ரி அப்பாவை நேராகப் பார்த்தாள். கண்ணில் ஆக்ரோஷம் இருந்தது. உறுதி நிலைத்திருந்தது.

'எனக்கு இப்பக் கல்யாணம் வேணாம்ப்பா... ப்ளீஸ்... என்னை விட்டுடுங்க. விட்டுடுங்க...'

அப்பா திக்பிரமை பிடித்துப் போய்ச் சுவரில் சரிந்து அழுகிற காயத்ரியைப் பார்த்தார். காலையில் ஆபீஸ் கிளம்பும் வரை யாரும் யாரோடும் பேச முடியாமல் அசாத்திய மௌனம் சுவர் எழுப்பியிருந்தது.

"ஜங்ஷன் இறங்குங்க... ஜங்ஷன்."

காயத்ரி சுதாரித்துக் கொண்டு அவசரமாய் இறங்கினாள். ஆபீஸ் சீட்டில் உட்கார்ந்த போது சாவித்ரி கண்ணைச் சிமிட்டிக் கொண்டு 'குட்மார்னிங்' சொன்னாள்.

"என்னாச்சு ரிஸல்ட்? பழம்தானே?"

"ம்ஹூம்."

நிமிஷத்தில் சாவித்ரி முகம் மாறினாள்.

"காயா?"

"தெரியாது! பழத்துக்கும் காய்க்கும் நடுவில் உள்ளதாகக் கூட இருக்கலாம்!"

"ஏய்.... என்ன சொல்றே? நிஜமாத்தான் பேசுறியா?"

காயத்ரி நகப்பாலீஷைச் சுரண்டினாள். காரணத்தைச் சொன்னால் சாவித்ரியும் அந்த பாலசந்திரனுக்காகப் பரிந்து கொண்டு வருவாளா? இல்லை — 'நீ செய்தது சரிதான்' என்பாளா?

"என்னாச்சு காயத்ரி?"

சாவித்ரி திரும்பவும் கேட்டாள். கலக்கம் மாறாத குரல் தொண்டையில் சிக்கிக் கொள்ளக் கேட்டாள்.

"ம். நான் வேணாம்னு சொன்னேன் சாவித்ரி."

"ஏன்?"

"கல்யாணம் ஒரு தேவையில்லாத பந்தம் சாவித்ரி. ஒரு சுமை. ஏன் நான் இப்ப சம்பாதிக்கலையா? வாழலையா? அதே மாதிரி இருந்திட்டுப் போறேன். எதுக்காக இந்தக் கல்யாணம்? என்னை, என் தனித்தன்மையை அழிக்கிற எதுவும் எனக்கு வேணாம். வேண்டவே வேணாம்."

"கல்யாணம் உன்னை அழிக்காது காயத்ரி."

"யார் சொன்னது அழிக்காதுனு? தாலி கட்டியவனுக்கு என் மேல ஆதிக்கம் செலுத்தத் தோணும். அடிமை மாதிரி நடத்தத் தோணும். நான் கிழிஞ்சு போயிடுவேன். நான், என்னோட தனித்தன்மை, என் கவிதை, என் ரசனை... இதெல்லாமே அடுத்தாளோட ஈகோவுக்கு அடங்கிப் போய்க் கிடக்கணும். எதுக்காக இந்தச் சுய பலி?"



"இப்போதைக்குத் தேர்தல் நடக்கவேணாம்னு தலைவர் சொல்லிட்டாரா, ஏன்?"

"தேர்தல் நடந்துட்டா அப்புறம் தேர்தல் நிதி வசூலிக்க முடியாதே!"

— கீழை. அ. கதிர்வேல்.

சாவித்ரி லெட்ஜரை மூடி வைத்து விட்டுச் சிரித்தாள். "வா... காயத்ரி, உன்னோட பேசணும்" என்று வெளியே கூட்டி வந்தாள்.

"உன்னோட தனித்தன்மை அழிஞ்சிடும்னு சொல்றியே, அவ்வளோதானா உன் தனித்தன்மை மேல நீ வச்சிருக்கிற நம்பிக்கை? எதுக்காகப் பயப்படுறே நீ? அடுத்தாளோட ஈகோவுக்கா? சத்தியமா இல்லை. உனக்குப் பயப்படுறே. உன்னை நீயே அழிச்சிப்பியோன்னு பயப்படுறே!"

"இல்லே சாவித்ரி. நீ என்னை ப்ரெயின் வாஷ் பண்ண முயல்றே."

"நான் சும்மாதான் பேசுறேன். நீ ஏன் ப்ரெயின் வாஷ் அது இதுங்கிறே? ஆனா நீயும் உன் கவிதையும் அழிஞ்சிடுவீங்களோன்னு பயப்படுறே. அப்கோர்ஸ்... அப்படியும் ஆகிறதுண்டு. ஆனா... அப்படி ஆனா — அது உன் தனித்தன்மையோட தோல்வி காயத்ரி."

சாவித்ரி பேசுவதை நிறுத்தி விட்டுக் காயத்ரியைப் பார்த்தாள். அண்ணாந்து மேலே பறக்கும் பறவைகளை, சூரிய வெளிச்சத்தை மீறிக் கண் சுருங்கக் காயத்ரி பார்த்துக் கொண்டிருந்தாள்.

"எதுக்காக நீ தோத்துப் போகணும்? உன் புருஷன்கிட்ட நீ பேசிப் புரிய வைக்கணும். எந்த மனுஷனுமே புரியாததால தான் தப்புப் பண்றான் காயத்ரி... புரிய வை. உன்னால புரிய வைக்க முடியும்ங்கிற நம்பிக்கையோட இதில இறங்கு. அதை விட்டுட்டுக் கல்யாணமே வேணாம்னு சொல்றதுதான் உன்னோட முழுமையான தோல்வி. இப்பத்தான் நீ நிஜமா தோத்துக்கிட்டு இருக்கறே. போராடித் தோத்துப் போறது தோல்வி இல்லை. போராடாம இருக்கறதுதான் தோல்வி காயத்ரி. ஆத்துல இறங்காமலேயே வெள்ளத்தை ஜெயிச்சிட்டேன்னு சொல்றதுக்குப் பேர்தான் தோல்வி காயத்ரி."

"......"

"நாம பிறக்கறப்போ நமக்கு என்ன தெரியும்? இந்த உலகம் எப்படி, எந்த மாதிரி இருக்கும்னு தெரியுமா என்ன? ஏன் உன் அம்மாவுக்கு நீ பையனா, பொண்ணான்னு தெரியுமா? ஆனாலும் அவள் உன்னைப் பத்து மாசம் சுமக்கலையா? மனுஷ வாழ்க்கைல எதிர்காலம்தான் நம்பிக்கை காயத்ரி. நம்பிக்கைகளை எதிர்த்துக்கிட்டு யாராலேயும் வாழ முடியாது. ஏன் உன் புருஷன் உன் தனித்தன்மையை அழிச்சிடுவான்னு நினைக்கிறே? உன் தனித்துவத்தை அவன் அதிகரிக்கிறவனாக் கூட இருக்கலாமே. செத்துப் போனா எனக்கு ஸ்வர்க்கம் கிடைக்கும்னு நினைக்கிறது வரை மனுஷ வாழ்க்கை நம்பிக்கை மேல்தான் ஓடுது காயத்ரி. இதெல்லாம் சொல்லிட்டேன். உனக்கு உன் மேலயும் எதிர்காலத்து மேலயும் நம்பிக்கை இருந்துச்சுன்னா... கோ அஹெட். இல்லைன்னா.... தோல்வியை ஒத்துக்கோ.

நீளமாய்ப் பேசியதில் சாவித்ரிக்கு மூச்சு வாங்கிற்று. காயத்ரி கண் மூடி இருந்தாள்.

சாயங்காலம் சுலோசன முதலியார் பாலத்தில் இறங்கிய காயத்ரி, ப்ரீதா நர்ஸிங் ஹோம் போனாள். பாலசந்திரனைக் கூப்பிட ஆள் அனுப்பி விட்டு, ரிஸப்ஷனில் காத்திருந்தாள். ஐந்து நிமிஷத்தில் பாலசந்திரன் வந்தான். காயத்ரியைப் பார்த்ததும் முகம் விரிய ஆச்சரியப்பட்டான்.

"ஹாய்... வாட் எ ப்ளெசண்ட் சர்ப்ரைஸ். என்ன விஷயம்?"

"ஏன் — விஷயமில்லாம வரக் கூடாதா?"

பாலசந்திரன் நம்ப முடியாமல் கண் விரியப் பார்த்தான்.

"நேத்து வீட்டுக்கு வந்தப்போ உர்ருன்னு இருந்தே. இப்ப... தேடி வந்திருக்கிறியே, சும்மா சொல்லக் கூடாது. இந்தக் காலத்துப் பொண்ணுங்களுக்குத் தைரியம் ஜாஸ்தி. பாஸிட்டிவ் சென்ஸ்ல நான் சொல்றேன். தே ரியலி ஹேவ் த ரியல் கட்ஸ்."

ஆஸ்பத்திரி பின்பக்கம் இருந்த புல்வெளியில் நடந்து ஓரமாய் உட்கார்ந்தார்கள். காயத்ரி மௌனமாய் உட்கார்ந்திருக்க, பாலசந்திரன் கண்ணை உயர்த்திச் சன்னமாய் மனசைத் தொடும் இதத்தோடு பார்த்தான்.

"என்னை நிஜமாவே உனக்குப் பிடிச்சிருக்கா காயத்ரி?"

கண்ணை ஒரு தடவை உயர்த்தி அவனைப் பார்த்து விட்டுச் சட்டென்று தலையைக் கவிழ்த்துக் கண் மூடி, நெஞ்சு சிலிர்க்கக் காயத்ரி — வெட்கப்பட்டாள்.

5

நீரில் மிதக்கும் நிலா

சுபா

ஷில்பாவிற்குத் தன் பின் பக்கத்தை நெருப்புக் கையால் யாரோ தேய்த்து விட்ட மாதிரி இருந்தது. ஆபத்து நேரத்தில் தன்னைப் பாதுகாத்துக் கொள்ளத் திரும்பும் தேள் போல் திரும்பினாள்.

அஸ்வின் குமாரை முறைத்தாள். உடன் அவனை அடையாளம் தெரிந்து கொண்டாள். திரையில் ஸ்ப்ரிங்கால் ஆன கழுத்தைப் பொருத்திக் கொண்டவன் போலத் தலையை ஆட்டி ஆட்டிப் பாட்டுக்கு வாயசைப்பவன். பெரும்பாலான படங்களில், ஹீரோயினுக்கு உடம்பு வலிக்கும் அளவு, நெருங்கி, மிக நெருங்கி, அழுந்தி மிக அழுந்தி டூயட் பாடுபவன். ஒவ்வொரு நாளும் கிசுகிசு. ஒவ்வொரு கிசுகிசுவிலும் வேறு வேறு நடிகையின் பெயர். இவனா? இவனா என்னைத் தொட்டவன்?

ச்சே!

ஷில்பா காலால் தரையில் ஒருமுறை உதைத்தாள். தூரத்தில் அடர்த்தியான நிழலுடன் ஒரு மரம் அவளை அழைத்தது. மரத்திற்குப் பக்கத்தில் போடப்பட்டிருந்த தற்காலிகமான கான்வாஸ் டென்ட் அவளை அழைத்தது.

ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்கள் அத்தனை பேரும் தயார் உடைகளில் நின்று கொண்டு அவளையே பார்த்துக் கொண்டிருக்க, இளங்குமரன் பார்த்துக் கொண்டிருக்க, அஸ்வின் குமார் லேசான வியப்புடன், வெகு லேசான அவமானத்துடன் பார்த்துக் கொண்டிருக்க, பிருத்விராஜ் மஹா டென்ஷனுடன் நகத்தைக் கடித்துக் கொண்டே பார்த்துக் கொண்டிருக்க, ஷில்பா அந்த இடத்தை விட்டு விலகினாள். டென்டை நோக்கி ஓடினாள்.

''பாப்பா...'' என்றார் ஜூபிடர் ரத்தினம்.

''மதுமதி'' என்றான் பிருத்விராஜ்.

ஷில்பா அவன் குரலைக் கேட்டு ஒரு வினாடி நின்று திரும்பிப் பார்த்தாள். கண்களில் நீருடன், புகையாய்த் தெரிந்த பிருத்விராஜைப் பார்த்தாள். பதில் பேசாமல் மறுபடி திரும்பி ஓடினாள்.

''பாப்பா...'' என்று இரண்டடி எடுத்து வைத்த ஜூபிடர் ரத்தினத்தை அஸ்வின்குமார் கை நீட்டித் தடுத்தான்.

''ஜூபிடர் ரத்தினம்... யாருய்யா அது?''

''எம் பொண்ணுங்க'' என்றார் ஜூபிடர் ரத்தினம் பெருமையுடன்.

''கண்ல காட்டவேயில்லியே இத்தனை நாளா... ஃபர்ஸ்ட் பிக்சரா?''

''ஆமாண்ணே...''

''இத பார்... அண்ணே, கிண்ணேன்னு கூப்பிடாதே... கால் மீ அஸ்வின்குமார்... இல்ல... அஸ்வின்... ஓ.கே...''

''ஓ.கே. அஸ்வின்.''

''எங்க ஸ்டே பண்ணியிருக்கீங்க...?'' அஸ்வின் குமார் இன்னும் ஷில்பாவையே பார்த்துக் கொண்டிருந்தான்.

ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்ங்களோட... ரேஸ் கோர்ஸுக்குப் பக்கத்திலே ஒரு லாட்ஜ்ல...''

''ரேஸ் கோர்ஸ் பக்கத்தில குதிரை லாயம்தான் இருக்கு... ஏன் டைரக்டர்? ஹீரோயின் அங்கேயா ஸ்டே பண்ணியிருக்கு....''

''ஆமா... அஸ்வின்.''

''ஷேம்... அவ ரூமை உடனே மாத்துய்யா... என் ரூமுக்குப் பக்கத்து ரூமை ஒதுக்குங்க... புதுப் பொண்ணு... ஏற்கெனவே மிரண்டிருக்கு... காமிராவுக்கு முன்னால எப்படி மூவ்மென்ட் குடுக்கணும்னு நான் ட்ரெய்னிங் குடுக்கறேன்... திவ்ய ஜோதி கூட வந்த புதுசில இப்படித்தான்... அந்த குதிரை மூஞ்சியையும், தெத்துப் பல்லையும் வெச்சிகிட்டே மூஞ்சைத் தூக்கித் தூக்கி வெச்சிகிட்டா... இன்னிக்குப் பாரு... தண்ணி... ரெண்டு நாள் ட்ரெய்னிங்தான்... என்ன டைரக்டர்... இன்னிக்கு அவ்வளவுதானா? பேக்—அப்பா?''

அஸ்வின் குமார் கேட்டு விட்டுச் சிரித்தான். இடது கையை நீட்டினான். அஸ்வின் குமாருடன் காரில் வந்து இறங்கிய ஓர் இருபது வயதுப் பையன் அஸ்வின் குமாரின் உள்ளங் கையில் ஒரு ட்ரிபிள் ஃபைவ் சிகரெட்டை வைத்தான். ஜப்பானிலிருந்தோ, ஜெர்மனியிலிருந்தோ இறக்குமதி செய்யப்பட்ட லைட்டரை வைத்தான்.

''பாப்பாவை நான் போய்க் கூட்டிகிட்டு வந்துடறேண்ணே... அது ஃபீல்டுக்குப் புதுசு... ரெண்டு வார்த்தை சொன்னா சரின்னு ஒத்துக்கிட்டுப் பசு மாடு மாதிரி எம் பின்னாடியே வந்துடும்'' என்றார் ஜூபிடர் ரத்தினம்.

''யோவ் ஜூபிடர் ரத்தினம்... நீ போகாதய்யா.. காரியத்தைக் கெடுத்துக் குட்டிச் சுவராக்கிடுவே... பிருத்விராஜ்... எங்கேய்யா பிருத்விராஜ்... பிருத்விராஜ்...''

''இங்க இருக்கேன் சார்'' என்றான் இளங்குமரனுக்குப் பின்னால் நின்று கொண்டிருந்த பிருத்விராஜ்.

''போ... நீ போ... பஸ் ஸ்டாண்ட் வரைக்கும் ஓடிப் போய் நீதான, மதுமதி மதுமதின்னு அடிச்சுக்கிட்டு கூட்டிட்டு வந்தே... நீதான அவளைத் தாங்காத குறையா ரயில்ல ஏத்திவுட்டே... நீன்னா அவ கேப்பா... அவ ஒன்னைப் பாக்கற பார்வையிலேயே அது தெரியுது. ஓடு.... ஓடு... உன் மதுமதியைக் கூட்டிக்கிட்டு வா.... நீ அவளோட வரலை... நீயும் கெடையாது.,, உன் மதுமதியும் கெடையாது... எல்லாம் கான்ஸல்... என்று இளங்குமரன் பொறிந்தான்.

பிருத்விராஜ் ஷில்பாவை நோக்கி ஓடினான்.

''அஸ்வின், நீங்க வாங்க... ஸன்லைட் இருக்கறப்பவே, நாலஞ்சு க்ளோஸ்–அப் எடுத்துக்கலாம்... அதுக்குள்ள அந்தப் பொண்ணு வந்துடும்... என்னம்மா ஜூனியர் ஆர்ட்டிஸ்ட்டுங்களே... என்னவோ ஆளுக்கொரு கிரீடத்தைத் தலையில வெச்சிக்கிட்ட மாதிரி தெனாவட்டா நிக்கறீங்க...? போங்க... போய்ப் புல்வெளியில படுங்க... ஒரு காலு தூக்கி இருக்கணும்... ஒரு காலு தரையில் இருக்கணும்... டான்ஸ் மாஸ்டர் சொல்லிட்டாரு இல்ல... போய்ப் படுங்களேன்...'' இளங்குமரன் திரும்பினான்.

''அஸ்வின்.... ப்ளீஸ்... கோச்சிக்காதீங்க... நீங்க ஹீரோயினைப் பார்த்து ஓடிவரீங்க... வரும் போதே ஒவ்வொருத்தியோட வயிறையும் தாண்டிக் குதிச்சி வர்ரீங்க... ஃபேஸ்ல உங்க மாஜிக் சிரிப்பு... ஓ.கே.யா... காஸ்ட்யூம்ஸ் எங்கய்யா....?'' இளங்குமரன் உச்சஸ்தாயியில் கத்தினான்.

கூடான்வாஸ் டெண்ட்டில் ஏகப்பட்ட வண்ண வண்ண உடைகள் இறைந்து கிடந்தன. ஏதோ ஒரு மேக்கப் பெட்டி மூலையில் டெல்லி மோடாவின் மேல் உட்கார்ந்திருந்தது.

ஷில்பா இறைந்திருந்த துணிகளின் மீது படுத்திருந்தாள். அணிந்திருந்த மிடி சற்று மேலேறி இருந்தது. முகத்தைத் துணிகளுக்கிடையில் புதைத்திருந்தாள்.





பிருத்விராஜ் அந்த டென்டின் நுழை வாசலில் நின்றான்.

''ஷில்பா'' என்றான் பிருத்விராஜ்.

ஷில்பா நிமிர்ந்தாள். பிருத்விராஜைப் பார்த்து அவசர அவசரமாக மிடியைக் கீழே இறக்கி வெளியில் தெரிந்த பளீர் காலை மறைத்தாள். எழுந்து உட்கார்ந்தாள்.

''ஏன் ஷில்பா?'' என்றான் பிருத்விராஜ்.

ஷில்பா அவனை நேரடியாகப் பார்த்தாள். அவள் பார்வையை நேருக்கு நேராகச் சந்திக்க முடியாமல் பிருத்விராஜ் தன் பார்வையைத் தழைத்தான்.

''உங்களுக்குத் தெரியாதா பிருத்விராஜ்?''

பிருத்விராஜ் பதில் சொல்லவில்லை.

''அத்தனை பேர் நடுவுலயும் அவன் என்னை எங்கே தட்னான்னு பாத்தீங்கல்ல? எனக்கு இந்த வாழ்க்கை தேவையில்ல பிருத்வி. நான் ஒரு ஆஃபீஸ்ல கூட்டிப் பெருக்கறவளா வேலைக்குச் சேர்ந்தாலும் சந்தோஷப் படுவேன். ஆனா தெனம், தெனம் இந்த மாதிரி என்னை யாராவது கேவலப்படுத்தறதை என்னால் சகிச்சிக்க முடியாது.

''அப்படின்னா ஸ்க்ரீன் டெஸ்டுக்கு வந்திருக்கக் கூடாது. சான்ஸ் கேட்டு டைரக்டரைப் பார்க்க வந்திருக்கக் கூடாது'' என்று முணுமுணுத்தான் பிருத்விராஜ்.

''ஐயோ... நானா வரல்ல பிருத்வி. எங்க அப்பா, எங்க குடும்பம்... அதனாலத்தான் வந்தேன். எனக்கு இந்த மொதல் அனுபவமே போதும். நான் இனிமே நடிக்கப் போறதில்லே. சாப்பாடு கெடைக்காம எங்க வீட்ல இருக்கற மொத்தப் பேருமே செத்துப் போனாலும் சரி...''

''நான் செத்துப் போனாக் கூட பரவாயில்லையா ஷில்பா?''

''என்ன சொல்றீங்க...?''

''நீ நடிக்கல்லேன்னா, என் கதையும் வேணாம், நானும் வேணாம்னு டைரக்டர்

சொல்லிட்டாரு ஷில்பா. நீதான் என் மதுமதின்னு உன்னை பஸ்லேர்ந்து கீழே எறக்கினேனே ஞாபகம் இருக்கா? என்னுடைய மதுமதி அப்படியே ஒன்னை மாதிரித்தான் இருப்பா. நீ அந்த மதுமதியா மாறலேன்னா, இந்த பிருத்விராஜ் அப்புறம் வாழறதில அர்த்தமே இல்லை. ஒன்னைத் தவிர வேற யாரையும் என் மதுமதியா கற்பனை செய்ஞ்சி பார்க்க முடியல்லே..."

ஷில்பா கண்களில் பெருகிய நீரைக் கட்டுப்படுத்த முடியாமல் தவித்தாள்.

"இந்தக் கதையைப் பத்தி ஒனக்குத் தெரியுமில்ல ஷில்பா? இதுவரைக்கும் நான் சொன்ன கதையை நீயுந்தானே கேட்டுக்கிட்டு இருந்தே? அது ஒரு... அது ஒரு... அது ஒரு.... என்ன சொல்லுவேன். எங் கதையைப் பத்தி எப்படிச் சொல்லுவேன்... எங் கதையில ஹீரோ கடைசி வரைக்கும் அனுமதியில்லாம ஹீரோயினோட சுண்டு வெரலைக் கூடத் தொட மாட்டான். அது ஒரு ஐடியல் லவ். ஒன்னை அசிங்கமாக் காட்ட முடியாது. அசிங்கமாத் தொட முடியாது."

ஷில்பா பதில் பேசாமல் அவனையே பார்த்துக் கொண்டிருந்தாள்.

"பஸ்ல போறப்ப மேல எவனாவது இடிச்சிடறதில்லையா... பூ வாங்கறப்ப பூக்காரன் கை நம்ப மேல படறதில்லையா... ட்ரீட்மெண்ட் குடுக்கறச்சே டாக்டர் நம்பளைத் .தொடறதில்லையா... அதையெல்லாம் நம்ப தப்பாவா எடுத்துக்கறோம்... நாங்கூட ஒன் கையைப் பிடிச்சித்தானே ஒன்னைப் பஸ்லேர்ந்து எறக்கினேன். நீ தப்பாவா எடுத்துக்கிட்டே? இது ஒரு தொழில் ஷில்பா. இந்தத் தொழில்ல இது கொஞ்சம் சகஜம். இதைப் போய்ப் பெரிசா எடுத்துக்கிட்டா எப்படி ஷில்பா? ப்ளீஸ்... நான் என் மதுமதியோட கதையை ஒனக்கு சொல்றேன்... அதைக் கேளு. ஒனக்குப் பிடிச்சிருந்தா நீ என் மதுமதியா மாறு. ஒனக்குப் புடிக்கும். நீ என் மதுமதியா நிச்சயம் மாறுவே... கேளு ஷில்பா... ப்ளீஸ்..."

மதுமதி மிகவும் சந்தோஷமாயிருந்தாள்.

இன்றைக்குத்தான் புதன் கிழமை. இன்றைக்குத்தான் 'சிவா' வருகிறான். அதுவும் வீட்டோடு. அதுவும் பெண் கேட்டு.

மதுமதி மேஜையில் இறைந்து கிடந்த புத்தகங்களை எடுத்து அலமாரியில் அழகாய் அடுக்கினாள். அப்பாவின் சிம்னி விளக்குக் கண்ணாடியில் கறுப்பு. அதைத் துடைத்தாள். துடைக்கும் போது அந்த டேபிள் லாம்ப்பைப் பார்த்தாள்.

தேக்கு யானை. அதன் நீண்டு வளைந்த தந்தங்கள். இரு தந்தங்களுக்கும் இடையில் தொங்கிய அலங்கார லாம்ப் ஷேட். சிவாவின் பரிசுகளில் ஒன்று. மதுமதி சுற்று முற்றும் பார்த்து விட்டு அந்த டேபிள் லாம்ப் யானைக்கு ஒரு முத்தம் கொடுத்தாள்.

"மது..." என்ற குரல் பாய்ந்து வந்து பிம்பங்களைக் கலைத்தது.

"சந்து முனையில கார் வந்திருக்கு... ஃபியட்" என்று மூச்சிரைத்தாள் மீரா.

மதுமதி கடைசியாய்க் கண்ணாடியைப் பார்த்து, காது மடல்களின் அதிகப் பவுடரைச் சமனப்படுத்தி விட்டு அவசரமாய்த் திரும்பினாள். வாசலை நோக்கிப் பாய்ந்தாள். அவள் ஸாரியின் தலைப்பு சரேலெனப் பறந்து எதிலோ படர்ந்து....

சிலீர்.

மதுமதி திடுக்கிட்டு நின்று திரும்பிப் பார்த்தாள்.

ஸாரியின் தலைப்பு டேபிள் லாம்ப்பைத் தரையில் இழுத்து விட்டிருந்தது. அதன் அலங்காரமான லாம்ப் ஷேட் நொறுங்கியிருக்க, தந்தங்கள் இரண்டும் தனித்தனியாய்க் கிடந்தன. மதுமதிக்குத் திக்கென்றது.

ரோகிணிதான் மதுமதியை நிலைக்குக் கொண்டு வந்தாள்.

"துடைப்பத்தை எடு. மொதல்ல இதைக் கூட்டிடறேன். நீ வாசலுக்குப் போய் அவங்களை வாங்கன்னு ஒரு வார்த்தை கூப்பிடு."

பதற்றம் குறையாமல் மதுமதி வாசலை நோக்கி ஓடினாள். பின் கதவு இறந்த ஐம்பது வயது மனிதர் ஒருவர் இறங்கினார். பின்னாலேயே நாற்பது வயதில் அந்தப் பெண்.

சிவாவின் அம்மா, அப்பா!

காரின் முன் கதவைத் திறந்து டிரைவர் இறங்கினான்.

மதுமதியின் கண்கள் பரபரவென்று அலைந்தன. கார்க் கதவு சாத்தப்பட்டது.

சிவராமன்?

அவன் எங்கே? இறங்கவில்லையே?

சிவராமனின் பெற்றோர் விளையாடிக் கொண்டிருந்த ஒரு பையனைப் பிடித்து வழி கேட்கு முன் மதுமதி அவர்களை நெருங்கினாள்.

"வாங்க... வாங்க" என்றாள். "சிவா வரலை?" என்று சிவராமனின் அம்மாவிடம் கேட்டாள்.

ஜகதா — சிவராமனின் அம்மா, மதுமதியை ஏற இறங்கப் பார்த்தாள். அவள் முகத்தில் இறுக்கம் இருந்தது. மதுமதியின் கேள்விக்குப் பதில் இல்லை.

மதுமதி சிவராமனின் அப்பாவைப் பார்த்தாள். அவர் முகத்திலும் இறுக்கம்.

கொஞ்சம் மௌனமாய் உணர்ந்து மதுமதி மறுபடியும், "சிவா வரலை?" என்று துடிப்புடன் கேட்டாள்.

"நீதான் மதுமதியா?"

மதுமதி தலையை மௌனமாக மேலும் கீழும் அசைத்தாள்.

"சிவா வரலை?" என்று லேசான குரல் தழுதழுப்புடன் மறுபடி கேட்டாள் மதுமதி.

"சிவாவைப் பத்தி உள்ளே போய்ப் பேசலாமே..."

(தொடரும்)



இப்போது ஹார்லிக்ஸ்
கூடுதல் கால்ஷியத்துடன்
Great Nourisher
"வளரும் குழந்தைகளுக்கு கூடுதல் கால்ஷியம் தேவைப்படுகிறது."
ஹார்லிக்ஸ் இப்போது கூடுதல் கால்ஷியத்துடன் செறிவூட்டப்பட்டிருக்கிறது—வளரும் குழந்தைகளின் வலுவான பற்களுக்கும், ஆரோக்யமான எலும்புகளுக்கும், குடும்பத்தினர் அனைவரின் ஆரோக்யத்திற்கும் மிகவும் முக்கியமானது.
ஹார்லிக்ஸ் முழுவதும் இயற்கை ஊட்டச்சத்துக்கள் நிறைந்தது—புரோட்டீன், விட்டமின்கள், மினரல்கள் மற்றும் கார்போஹைட்ரேட்டுகள்—இவை சக்தியும், ஊட்டமும் அளிக்கின்றன. இப்போது கூடுதல் கால்ஷியத்தினால், கூடுதல் ஆரோக்யம்.
சிறந்த ஊட்டச்சத்துமிக்க பானம்
Horlicks
WITH EXTRA CALCIUM
The Great Nourisher
HTA-6037 TAM

என் சின்னக் குருவியின் சங்கீதம்

— வையவன் —

ஆராவமுதனின் ஆஸ்பத்திரி தவம் போன வாரமே முடிந்து விட்டது. மயோகார்டியல் இஸ்கீமியாவில் அவன் மனைவி மல்லிகா ஆறாம் நெம்பர் வார்டில் காலமானது, போன வெள்ளிக் கிழமை. இன்றோடு எட்டு நாள். இனிமேல் அவனுக்கு விடுதலைதான் இந்த ஆஸ்பத்திரியிலிருந்து. இப்படி நிவேதிதா எண்ணியது பிழையாயிற்று.

விஸிட்டர்ஸ் பெஞ்சில் அவன் உட்கார்ந்திருந்தான். பேஷண்ட்ஸ் ரிஜிஸ்தர் எழுதிக் கொண்டிருந்த நர்ஸ் நிவேதிதா ஒருமுறை நிமிர்ந்த போது அதை மனசில் குறித்துக் கொண்டாள்.

அவன் திரும்பவும் வந்திருக்கிறான்.

என்ன விஷயம்?

இன்னொரு பேஷண்டின் பெயர் தகப்பனார் பெயர் வயது என்று விவரம் எழுதி முடித்த போது நிவேதிதா தன்னையறியாது திரும்பினாள். அவள் பார்வை பெட் நம்பர் 24—க்குச் சென்றது.

படுக்கைக்குப் பக்கத்தில் ஸ்டூலின் மீது சுமி உட்கார்ந்திருந்தாள்.

நிவேதிதா பார்வையை மீட்டு ஆராவமுதனைக் கவனித்தாள்.

லேசான தாடி. சிவந்த முகத்தில் துயரத்தின் காலடிச் சுவடு கனமாகப் பதிந்தது போலக் கண்களைச் சுற்றிய கருவளையம்.

'மாண்டவளுக்கென்ன.... போய் விட்டான்!' என்று நிவேதிதா நினைத்தாள்.

தொடர்ந்து ஆறு மாதங்கள் ஆஸ்பத்திரிக்கும் வீட்டுக்கும் ஆபீஸுக்குமாக அவன் அலைந்த அலைச்சல் ஞாபகம் வந்தது.

எவ்வளவு நேசித்தவன் இவன்!

அவன் கொண்டு வந்த பழக் கூடைகள், ஏந்தி வந்த ஊசி மருந்துகள், விஸிட்டர்ஸ் பெஞ்சில் உறங்கி வழிந்து, சிலிர்த்து விழித்த இரவுகள். கட்டிலருகில் ஸ்டூலின் மீது கழிந்த பகல்கள். சாயங்காலங்கள். சின்னச் சலிப்பு கூடத் தெரியாத மிருதுவான புன்னகைகள். மல்லிகாவை மென்மையாகத் தூக்கி உட்கார வைத்துப் புகட்டிய ஆரஞ்சுச் சாறு.... அவள் விரல்களைப் பற்றித் தலையை மெல்ல நீவிய வருடல்கள்.

அந்த ஆறாம் நம்பர் வார்டை விட்டு அவை முழுக்க இன்னும் வெளியேறாதது போல் நிவேதிதா உணர்ந்தாள்.

நோயாளி மனைவியை மரணத்தின் சில்லிப்புத் தாக்கிவிடாத வண்ணம், தன் நேசத்தின் சிறகுச் சூட்டில் போர்த்திப் போர்த்திப் பாடுபட்டவன்.

ஒரு நர்ஸாக உயிர்ப்புக்கும் சாவிற்குமிடையே பல போராட்டங்களை அவள் பார்த்திருக்கிறாள். ஒவ்வொன்றும் ஒரு மாதிரி. ஒரு நோயாளி உயிர்த்திருக்கக் கோரும் ஒவ்வொரு பிரார்த்தனையும் விழைவும் ஒரு மாதிரி.

இது வேறு. உயிர் பிழைத்து உடன் வாழ ஒரு மனைவி வேண்டும் என்ற எண்ணமின்றி மரணத்தின் காளவாயிலிருந்து தன் நேசக் குருத்தைப் பிரித்தெடுக்கச் செய்த முயற்சி.

"**நி**வேதி" என்று கூப்பிட்டவாறே படபடவென்று வந்தாள் பூர்ணிமா. அவளுக்கு எல்லாம் பரபரப்பு. எப்பவும் பரபரப்பு.

"சொல்லு" என்று ரிஜிஸ்தரிலிருந்து தலையைத் தூக்காமல் கேட்டாள் நிவேதிதா.

"பெட் நம்பர் 24—க்கு இஞ்செக்ஷன் கொடுக்கணுமே."

நிவேதிதா இடது கையைத் திருப்பிக் கடிகாரத்தைப் பார்த்துக் கொண்டே சொன்னாள்.

"ஞாபகம் இருக்கு! இன்னும் அஞ்சு நிமிஷம் போகணும்.

"கேஸ் தப்பிச்சுக்குமா?"

"டவுட்ஃபுல். மூணு நாளுக்கு முன்னாடியே கிரிட்டிகல். டாக்டர் மிருத்யுஞ்சன் உதட்டைப் பிதுக்கிட்டார். மூணு நாளா இந்த இழுபறி. ரியலி வொண்டர்ஃபுல், பேஷண்டுக்கு நல்ல வில் பவர்."

"பாவம் அந்தப் பொண்ணு, சுமி! நைஸ் லிட்டில் டார்லிங்."

பூர்ணிமா வாயிலிருந்து தற்செயலாக வெளிவந்த அந்த அபிப்பிராயம், குறிப்பாக சுமி பற்றியது நிவேதிதாவுக்கு வியப்பளித்தது.

'நைஸ் லிட்டில் டார்லிங்'. இப்படிக் கூட உன்னால் உணர முடியுமா என்கிற மாதிரி கண்களை விரித்து அவளைப் பார்த்தாள் நிவேதிதா.

அதற்குள் அவள் குனிந்து ஒரு கையால் நிவேதிதாவின் தோளை அணைத்தவாறு

கெகிகத்து. "ஏய்... அதோ பாரேன் ஹீரோ வந்திருக்கான்" என்றாள் பூர்ணிமா. அவள் குறிப்பிட்டது ஆராவமுதனை.

"பார்த்தேன்."

"நான் சொன்னா என்னமோ கற்பனைன்னு சொன்னாயே. பாரு கரெக்டா ஹீரோயினைத் தேடி வந்துட்டான்" என்றாள் பூர்ணிமா.

"ஒன் நாக்கிலே 'ஆஸிட்' வச்சுச் சுடணும்டீ! பாவம் அந்த மனுஷன். மனைவி போன துக்கத்திலே என்னமா இளைச்சிருக்கான் பாரு."

"ஏது ரூட் திரும்புது? என்னம்மா கண்ணு புதுசா ஏதாவது அசௌக்கியமா?" என்று அர்த்தபுஷ்டியாகச் சிரித்தாள் பூர்ணிமா.

யாருமில்லாதிருந்தால் அவள் காதைப் பிடித்து நிவேதிதா நறுக்கென்று ஒரு நட்டுக் நட்டுவாள்.

பூர்ணிமா வாயாடி. பட்டாம் பூச்சி. அரட்டை ஆனாலும் சமயத்தில் ஏதாவது சொன்னால் குறி தப்பாது தைத்து விடுவாள்.

அவள்தான் சுமிக்கும் ஆராவமுதனுக்கும் ஜோடிப் பொருத்தம் செய்து ரசித்தவள். அந்த இருவர் மட்டுமில்லை, வேறு எவரும் அறியாது அவளும் இவளும் மட்டும் பிணைத்த பிணைப்பு அது.

சுமியின் கணவன் சுரேந்திரனுக்கு மைட்ரல் ஸ்டெனோசிஸ். இதயத்தில் சிறு துவாரம். நாள் எண்ணுகிற வியாதி. ஆபரேஷன் சாத்தியமில்லை. நிறையக் 'காம்ப்ளிகேஷன்ஸ்'.

"இது மனுஷத் தன்மையே இல்லே பூர்ணிமா. அவங்க ரெண்டு பேரும் மரணத்தோட போராடிக்கிட்டிருக்காங்க."

"இப்ப நான் என்ன சொல்லிட்டேன்? சுமிக்கும் அவனுக்கும் நல்ல பொருத்தம்னேன். இழுத்துட்டுப் போயி டைவர்ஸ் வாங்க வச்சி ரிஜிஸ்தர் ஆபீஸுக்கா தொரத்தினேன். இட்ஸ் ஜஸ்ட் எ மென்டல் கேம். அவனைப் பாரு ஹீரோ மாதிரி இருக்கான். சுமியப் பாரு ஹீரோயின் கெட்டா!"

"இட்ஸ் நன் ஆஃப் அவர் பிஸினெஸ்."

இடுப்பில் அன்று இரண்டு கைகளையும் வைத்து கண்ணைச் சுருக்கிப் பூர்ணிமா சிரித்தாள்.

"நீ ஒரு குக்கூ. ஊறுகாய் ஜாடி. உள்ளேயே மூடி வச்சிருப்பே."

பூர்ணிமாவை எவராலும் திருத்த முடியாது. அவள் பாடுத்து விடுவாள்.

நிவேதிதா கைக்கடிகாரத்தைப் பார்த்தாள். இஞ்செக்ஷன் நேரம். பார்மஸியில் வாங்கி ஷெல்பில் வைத்திருந்த ஊசி மருந்தையும் ஸ்டெரிலைசரில் கொதித்த ஸிரிஞ்சையும் எடுத்துக் கொண்டு அவள் எழுந்தாள். 24—ஐ நெருங்கினாள்.

வாட்டமான சிரிப்புடன் அவளை வரவேற்றாள் சுமி. சட்டென்று பூர்ணிமாவின் வர்ணனை கவனம் வந்தது. நைஸ் லிட்டில் டார்லிங்! மிதமான உயரத்தில் துறுதுறுவென்று இமைகளும் கொஞ்சம் பேதைமையில் தோய்த்த குட்டித்தனமுமாக அவளைப் பார்க்கும் போது மனசு தளுதளுவென்று பசுமையாகிறது. லேசாகிறது. ஒரு குழந்தையாகிறது.

நிவேதிதா சுரேந்திரனை நெருங்கினாள்.

எலும்புக்குத் தோல் போர்த்திய மாதிரி ஒரு கூடாகக் கட்டிலில் படுத்திருந்தான் அவன்.



ஊசி இறங்கியது. கண் விழிக்கவில்லை. வலி புருவத்திலும் நெற்றியிலும் நெளிந்தது. ஒரு சிறு வேதனை. மீண்டும் சிலை போன்ற முகம்.

''சுமி சாப்பிட்டியா?''

''இல்லே ஸிஸ்டர். பசிக்கலே.''

''பொய்தானே.''

''ஐயய்யோ....''

''எனக்குப் பசிம்மா. நான் சாப்பிடணும்.''

''சாப்பிடுங்களேன்.''

''நீயும் கூட வந்து கொஞ்சம் 'ஷேர்' பண்ணிக்கிட்டா நல்லாருக்கும்.''

''நெஜம்மா எனக்குப் பசிக்கலியே.''

அவள் ஒரு நாளில் எத்தனை முறை சாப்பிடுவாள்? ஒரே ஒரு வேளையோ? அது கூட பன்னைப் பிய்த்துப் பாலில் நனைத்து மென்று விழுங்குகிறாளோ!

''கொஞ்சூண்டு... ப்ளீஸ்.... ஒன்னைப் பத்திப் பூர்ணிமா என்ன சொன்னா தெரியுமா?''

''என்ன சொன்னாங்க?'' சுமியின் முகத்தில் மருட்சி பரவிற்று. அந்தப் பெரிய விழிகளில் மருட்சி அற்புதமாய்ப் பொருந்துகிறது. ஒரு விரல் வட்டமளவு கண் அவளுக்கு.

''பயமா இருக்கா?''

''எதுக்கு?''

''ஏதாவது தப்பாச் சொல்லியிருப்பாளோன்னு.''

''ச்சீ.''

''சொல்லட்டுமா?''

''சொல்லுங்க.''

''சொல்லிடுவேன்.''

பயமுறுத்தினான் நிவேதிதா. வாடிச் சோர்ந்திருந்த அந்த முகத்தில் ஒரு வருத்தி வரவழைத்த மலர்ச்சி. சோகம் கூட ஒரு சௌந்தர்யம்தான். இவ்வளவு பிரியத்திற்கு நான் தகுதியா என்று கேட்கிற மாதிரி நொய்வாகச் சுமி சிரித்தாள்.

''எ நைஸ் லிட்டில் டார்லிங்.''

குப்பென்று அவள் முகம் சிவந்தது. என்ன சிவப்பு!

''ஆகையினாலே'' என்று நிறுத்தினான் நிவேதிதா.

''சொல்லுங்க.''

''ஹலோ மை நைஸ் லிட்டில் டார்லிங்! நீ இன்னிக்கு என்னோட சாப்பிடறே.''

சுமி திரும்பிச் சுரேந்திரனைப் பார்த்தாள். அவன் கண்கள் விழிக்கவில்லை.

''டோன்ட் ஒரி! சீக்கிரமா வந்துடலாம். அதுவரைக்கும் அவர் முழிக்க மாட்டாரு.''

''எனக்கு வேண்டாமே ஸிஸ்டர்!''

''ப்ளீஸ்...''

இந்தப் பெண் இன்று ஒருவேளையாவது மனமாரச் சாப்பிடட்டும்.

அவள் தயங்கிக் கொண்டே எழுந்து வந்தாள்.

''பூர்ணிமா கொஞ்சம் விட்ல உட்காரு. நாங்க சாப்பிட்டுட்டு வந்துடறோம்.''

இருவரும் விஸிட்டர்ஸ் பெஞ்சைக்



''மாப்பிள்ளைக்கும் பத்து விரலுக்கும் மோதிரம் போட்டும், என்ன கோபம்?''

''அவருக்கு ஒரு கையில், 'ஆறு விரல்' இருக்காம்!''

— ஆர். வசந்தகுமார்.

கடக்கும் போது ஆராவமுது எழுந்து நின்றான்.

முதலில் நிவேதிதாவையும் பிறகு சுமியையும் பார்த்து விட்டு அவன் கேட்டான்.

''இப்ப அவரு எப்படியிருக்காரு?''

''பரவாயில்லே'' என்று சொல்லி விட்டுப் பளிச்சென்று பார்வையைத் தாழ்த்திக் கொண்டாள் சுமி.

''அவரைப் பார்க்கவா வந்தீங்க?''

''ஆமாங்க ஸிஸ்டர்! டாக்டர்ஸ் ரவுண்ட் வர நேரமாச்சே. அதுக்காகத்தான் பெஞ்சிலே காத்திருந்தேன்.''

''சாப்பிட்டாச்சா?''

''ம்ம்ம்.... ஆச்சு''

''இல்லேன்னா வாங்க, நாங்க சாப்பிடத்தான் போறோம்.''

''நோ.... தாங்க்ஸ்.''

''போய்ச் சாப்பிட்டுட்டு வர்றதுன்னாலும் வாங்க. நாங்க உடனே வந்துடுவோம்.''

''சரி.''

அவனை அங்கேயே விட்டு விட்டு அவர்கள் ஸ்டாஃப் ரெஸ்டிங் ரூமிற்குப் போனார்கள். நல்லவேளை அங்கு கூட்டமில்லை.

அந்த மாடியறை ஜன்னலின் கீழே ஆஸ்பத்திரித் தோட்டம். நிவேதிதாவுக்கு அந்த ஜன்னலோர பெஞ்சில் அமர்ந்து சாப்பிடத்தான் பிடிக்கும். கீழே குரோட்டன்ஸ். அசோகக் கன்றுகள். பல வண்ணங்களில் ரோஜா. தண்ணீர்ச் செழிப்பில் களை கட்டி நிற்கும் பசுமை.

ஷெல்பில் இரண்டு தட்டுகள் கொண்டு வந்து டிபன் பாக்ஸைப் பிரித்தாள் நிவேதிதா.

ட்வீக்... ட்வீக்... ட்வீக்... டிவீக் என்று ஒரு மணிக் குரல் தோட்டத்திலிருந்து வந்தது. ஜன்னல் வழியே எட்டிப் பார்த்தாள். விரலளவு குருவி. வயிறு மேனி எங்கும் மஞ்சள். சின்னக் கண்கள். சின்னஞ்சிறு அலகு.

அவர்களைப் பார்ப்பது போல் ஒரு பார்வை.

பின்பு ஜிவ்வென்று எழுந்து ஓர் அசோகக் கன்றின் மீது உட்கார்ந்தது குருவி.

''அதைப் பார்த்தியா சுமி!''

சுமி குனிந்து பார்த்தாள். அந்த சின்னக்

குருவியின் வருகையில் உற்சாகத்தில் சுறு சுறுப்பில் அது பாய்ந்த பாய்ச்சலில் அவன் மனசு பங்கேற்றது. அதை நிவேதிதாவும் கவனித்தாள்.

"எனக்கு அந்தக் குருவியை ரொம்பப் பிடிக்கும் சுமி... உனக்கு?"

"இது என்ன கேள்வி ஸிஸ்டர்? யாருக் குத்தான் அதைப் பிடிக்காது?"

பரிமாறிக் கொண்டே தொடர்ந்தாள் நிவேதிதா.

"எங்க வீட்டுத் தோட்டத்திலும் இப்படி ஒரு குருவி உண்டு. தெனம் அது ட்வீக்... ட்வீக்னு பாடற சங்கீதம் கேட்பேன். சாப்பிடு."

சுமி ஒரு கவளத்தை வாயிலிடும் வரை காத்திருந்தாள். பின்பு தானும் தொடங்கி னாள்.

"அது ரொம்பச் சுதந்திரமான குருவி. மழையோ வெயிலோ எதுக்கும் பயப்படாது. சந்தோஷத்துக்குப் பயப்படவே பயப் படாது."

மறு கவளத்தை வாயிலிட்ட சுமி நிமிர்ந்து வேறு ஏதோ ஒரு தொனி கேட்பது மாதிரி பார்த்தான்.

நிவேதிதா சிரித்தாள்.

"என்னோட நீ இப்போ சாப்பிடறது எவ்வளவு சந்தோஷம் எனக்கு! உனக்கு எப்படியோ?"

"எனக்கும்தான் ஸிஸ்டர்."

"இதுக்கு நீ பயப்படறே! ஒன் நிலையிலே நான் கூடப் பயப்பட்டிருப்பேனோ என் னமோ!"

"அது.... வந்து... அது பயமில்லே ஸிஸ்டர்."

"ஒரு குற்ற உணர்வு! தெரியறது. அது வேணுமா? உனக்கு இருக்கிற அன்பும் ஈடு பாடும் தெரியுதே. அப்புறம் எதுக்கு குற்ற உணர்வு?அதைப் பாரேன்..."

மீண்டும் நிவேதிதா குருவியைக் காட்டி னாள்.

இப்போது அது குதூகலம் தாங்காது அந்த வெயிலை லட்சியம் செய்யாது குதித் துக் குதித்து ஒரு கிளையிலிருந்து மறு கிளைக்குத் தாவி 'ட்வீக்... ட்வீக்'கென்று கூவிற்று.

சுமி அதன் பரவசத்தைப் [illegible]விட்டுக் கொண்டவன் போல் சிரி[illegible]என்ன பிரகாசம்! இந்த முகத்துக்கு[illegible]துதான் பொருத்தம் என்பது போல் என்ன ஒளி.

அவனைச் சுரேந்திரனின் கட்டிலிலி ருந்து இங்கு அழைத்து வந்த இடைவேளை யில் மரணத்திடமிருந்து, மன உறுத்தல்கள், கவலைகள், சஞ்சலங்கள், பயங்கள் என்று ஓடிய ஒரு நச்சுக் காற்றோட்டத்திலிருந்து பிரித்துக் கொண்டு வந்த மாதிரி நிவேதிதா உணர்ந்தாள்.

நீ அந்த ஆராவமுதனை நேசிக்கிறே தானே என்று ஒரு கேள்வி வாய் வரை வந்து நின்று விட்டது.

இவன் அவனை வேறெதற்குமல்ல, ஒரு மனிதன் ஒரு மனைவியை எவ்வளவு நேசிக்க முடிகிறது என்று அறிந்ததற்காகவே நேசிக்கிறான். ஆராவமுதன் – சுமி. மனசிற் குள் அந்த ஜோடிப் பொருத்தத்தை முன் மொழிந்த பூர்ணிமாவைப் பாராட்டினாள்..

அவள் சொன்ன போது அது குரூரமா கத் தென்பட்டது.

தப்பிக்க முடியாத மரணத்தோடு இரண்டு வாழ வேண்டிய ஜீவத் துடிப்புள்ள உயிர்கள் பின்னிப் பிணைக்கப்பட்டிருப் பது – அதற்காக முழு நேர்மையோடு போராடியது; போராடுவது. ஒன்று முடிந் தது.

ஆயிற்று. சுரேந்திரனுக்கு மூன்று நாட் களுக்கு முன்பே கெடு. இப்போது அவன் நாட்களை, மணிகளை... நிமிஷங்களை.. ஒருவேளை விநாடிகளையோ எண்ணு கிறான்.

பின்.... அதற்குப் பின்?

வயிற்றில் ஒரு குடல் முறுக்குவது போல் ஜிக்கென்று உணர்ந்தாள் நிவேதிதா.

சுமியின் கதி என்ன?

வெள்ளைப் புடைவையும் விதவைப் பட்டமுமா?

'எ நைஸ் லிட்டில் டார்லிங்!'

"அதைப் பாருங்களேன் ஸிஸ்டர்... அது குட்டிக்கரணம் போடறாப்பிலே மேலே போய்க் கீழே வந்து மேல போறதைப் பாருங்களேன்."

கண்களில் ஒளி துள்ள வேறோர் உயிரின் குதூகலத்தில் கரைந்து போய் அவன் சிரிக் கச் சிரிக்கப் பார்ப்பது எத்தனை அற்புத மாக இருக்கிறது.

"நிவேதி... நிவேதி" என்று தடதட வென்று ஓடி வந்தாள் பூர்ணிமா. சில சமயம் நிவேதிதாவுக்குள் ஓர் உட் குரல் கேட்கும். சரியாகச் சொல்லும். அது முடிந்து விட்டது.

உள்ளே ஓடி வந்த பூர்ணிமாவைப் பார்த்து, சுமி அறியாமல் முகம் திருப்பி, இடது கை ஆட் காட்டி விரலை வைத்துச் சொல்ல வேண்டாம் என்று தலையாட்டி எச்சரித்தாள் நிவேதிதா.

அவள் சைகை பூர்ணிமாவிற்குப் புரிந் தது. ஏன் சொல்லக் கூடாது என்றுதான் விளங்கவில்லை. ஓர் அற்புதமான கணத்தை இவ்வளவு குரூரமாகச் சிதைக்கக் கூடாது என்பதை விளக்கினால்தான் அவள் அறிவாள்.

"என்ன பூர்ணிமா?"

"ஒண்ணுமில்லே சாப்பிடறீங்களா... சாப்பிடுங்க... நான் அவசரமாப் போக ணும்னு பார்த்தேன்."

சுமிக்காக மளமளவென்று வழிந்த நிவேதிதாவின் கண்ணீரைப் பூர்ணிமா புரிந்து கொண்டாள். வியர்வையை வழிப் பது போல் அவள் வழித்துத் துடைக்கும் லாவகத்தையும் பார்த்தாள்.

வெளியே குருவி கத்திற்று. ட்வீக். ட்வீக். ட்வீக், ட்வீக். சிரித்தவாறே சுமி கூடச் சொன்னான். "ட்வீக், ட்வீக், ட்வீக்."



அன்னையர், அறிவர்: கேட்பரிஸ் போர்ன்விடா கோகோ, மால்ட், பால் மற்றும் அசல் சீனியின் ஊட்ட நலன்களைக் கொண்டது. போர்ன்விடா குழந்தைகள் மிக விரும்பும் அத் தனிச் சுவையை பாலின் குணத்துடன் அளிக்கிறது.

தினமும் போர்ன்விடா அளிக்கப்படும் குழந்தைகள் வேலையிலும் விளையாட்டிலும் கூர்மையோடிருக்கிறார்கள். அது, அவர்களுக்கு ஆரோக்கியத்தையும் சுறுசுறுப்பையும் அளிக்கிறது. அவர்களுடைய வளர்ச்சிக்கு எல்லா வகையிலும் நலன் அளிக்கிறது.

அதன் தனிச் சுவையுடன் இணைந்திட்ட இன்றைய வளர்ச்சி.

கேட்பரிஸ்
போர்ன்விடா



OBM/8987 TAM

• பி. ராமமூர்த்தி:



• ராஜாஜி: எதிரியின் யோசனையையும்......



ஏற்பார்!

5

எதிரியின் யோசனையையும் ஏற்பார்!

அரிசி ரேஷனுக்கான நீண்ட கியூ வரிசைகளை அடிக்கடி பார்த்து வந்த ஸி. ஆர். உணவுப் பொருள்கள் கட்டுப்பாட்டை அடியோடு நீக்கி விட வேண்டும் என்று அடிக்கடி எண்ணி வந்தார். பலமான மழை பெய்ததானது, தாம் யோசித்து வந்த திசையில் அடியெடுத்து வைக்க அவருக்குத் துணிவைத் தந்தது. கிராமப்புறங்களில் போதிய அளவு தானியக் கையிருப்பு உள்ளது என்று அவருக்கு உறுதியாகத் தெரிந்தது. மேலும் நல்ல மழை பெய்திருப்பதால் கையிருப்பு செலவானாலும் சீக்கிரமே அறுவடையாகி மீண்டும் கையிருப்புக் குவியும் என்ற நம்பிக்கையோடு இருந்தார். எனவே பதவி ஏற்ற ஒரு மாதத்துக்கெல்லாம் அரிசி விநியோகம், விலை ஆகியவற்றில் இருந்த கட்டுப்பாடுகளை நீக்கி விடத் துணிந்தார். ஆனால் இதற்கு மத்திய அரசின் ஒப்புதல் அவருக்குத் தேவைப்பட்டது. தில்லியில் புதிய உணவு அமைச்சராகப் பொறுப்பேற்றிருந்த ரஃபி அகமத் கித்வாய்க்கு அவர் எழுதினார்: "நாட்டின் இந்தப் பகுதியில் உணவு தானியக் கட்டுப்பாடுகளை வெற்றிகரமாக நீக்கி விடலாம். அதற்குரிய சூழ்நிலை இங்கு நிலவுகிறது. உடனே ஒப்புதலைத் தெரிவிக்கவும்." கித்வாய் ஒப்புக் கொண்டார். ஆனால் இரண்டாம் உலகப் போர் முதற்கொண்டே உணவு தானியக் கட்டுப்பாடுகளை அமுல்படுத்திப் பழகி விட்ட சென்னை மாகாண அதிகாரிகள் ரொம்பவும் கலங்கிப் போனார்கள். ஒரே குழப்பம் நிலவப் போகிறது என்று அஞ்சினார்கள். உணவுக் காரியதரிசியை அழைத்துப் பேசினார் ஸி. ஆர். முதலமைச்சரைச் சந்தித்து விட்டுத் திரும்பிய அவர், தமது துணைக் காரியதரிசியிடம், "நம்முடைய ஆட்சேபணைகளைக் கேட்டு விட்டுக் கிழவர் சிரிக்கிறார். 'இலாகாக் காரியதரிசிகளுக்குத் தைரியம் இல்லாவிட்டால் என்ன பிரயோஜனம்?' என்று கேட்கிறார்!" என்று கூறி அலுத்துக் கொண்டார். அன்று மாலையே அனைவரையும் அதிசயத்தில் ஆழ்த்தும் விதமாக ஸி. ஆர். உணவுக் கட்டுப்பாட்டை ரத்து செய்தார். ஓரிரு நாட்களுக்குள் அரிசி எல்லா இடங்களிலும் கிடைக்க ஆரம்பித்தது. கியூ வரிசைகள் மறைந்தன. ஸி. ஆரின் திட்டம் மாபெரும் வெற்றியானது. கம்யூனிஸ்டுகள் கூட அதனை எதிர்க்கவில்லை!

கம்யூனிஸ்டுகளைத் தமது முதல் எதிரியாகக் கருதிய போதிலும் அவர்கள் கூறுகிற நல்ல யோசனைகளை ராஜாஜி ஏற்கத் தயங்கியதேயில்லை. இதற்கு ஓர் உதாரணமாக, தஞ்சை விவசாயிகள் அவசரச் சட்டத்தைக் கூறலாம். மிகவும் பிரபலமாகி முதலமைச்சருக்குப் பெரும் புகழ் பெற்றுத் தந்த இந்த அவசரச் சட்டம், விரைவிலேயே சட்ட சபையிலும் கொண்டு வரப்பட்டு நிறைவேறியது. இந்தச் சட்டம் மூலம் தஞ்சை மாவட்டத்தில், சிறிய நிலக் குத்தகைதாரர்களும் விவசாயக் கூலியாட்களும் பயன் பெற்றனர். பண்ணையார்களுக்கும் குத்தகைதாரர்களுக்கும் இடையில் சண்டை பூசல்கள் வலுத்துப் பல நிலக் குத்தகைதாரர்கள் பண்ணையார்களால் வெளியேற்றப்பட்டிருந்தனர். புதிய சட்டமானது நிலத்திலிருந்து குத்தகைதாரரை வெளியேற்றுவதைத் தடை செய்தது; ஏற்கெனவே வெளியேற்றப்பட்டிருந்தால் அவர்களுக்கு குத்தகை நிலம் திரும்பத் தரப்பட வேண்டும் என்று விதி வகுத்தது. மேலும், விவசாயக் கூலியாட்களின் கூலியை அதிகரித்து, நிர்ணயம் செய்தது. பண்ணையார் — குத்தகைதாரர் சண்டைகள் ஆரம்பமான உடனேயே கம்யூனிஸ்ட் எம்.எல்.ஏ., பி. ராமமூர்த்தி, 'ஒரு அவசரச் சட்டம் பிறப்பிக்கப்பட வேண்டும்' என்று ஆணித்தரமாக வாதாடினார். ராமமூர்த்தியே வியந்து போகுமாறு ராஜாஜி அவர் கோரிக்கையை ஏற்று அவசரச் சட்டத்தைப் பிறப்பித்தார்.

மாகாணத்தில் மொத்தம் ஐம்பது லட்சம் பேர் கைத்தறியை நம்பி வாழ்ந்து வந்தார்கள். சுமார் பத்துப் பன்னிரண்டு லட்சம் குடும்பங்கள். இவர்களின் பரிதாப நிலை உணர்ந்து ஸி. ஆர். உதவினார். நிரந்தரப் பரிகாரம் இவர்களுக்குக் கிடைக்கவும் பாடுபட்டார். கரை போட்ட வேஷ்டி, புடைவை இரண்டையும் கைத்தறிக்கு மட்டுமே ஒதுக்கி விட வேண்டும் என்றும் இதற்குச் சட்டம் இயற்ற வேண்டும் என்றும் போராடினார். சட்டசபை ஏகமனதாக அவருக்கு இவ்

விஷயத்தில் ஒப்புதல் தந்து ஒத்துழைத்தது. ஆனால் மத்திய அரசு இந்தச் சட்டத்துக்கு அனுமதி வழங்காமல் நிராகரித்து விட்டது.

சுருக்கமாகக் கூறப் போனால் எம். ஜி. ஆரின் ஆட்சி மக்களுக்கு மனநிறைவைத் தரும் ஆட்சியாக விளங்கியது. அவர் எங்கு சென்றாலும் ஏராள எண்ணிக்கையில் மக்கள் தாமாகத் திரண்டு வந்தனர். தமது தற்போதைய பிராபல்யத்தைச் சாதகமாகப் பயன்படுத்தி, எம். ஜி. ஆர். தேர்தலைத் திடுமென்று சந்தித்துச் சுலபமாக வெற்றி பெறுவார் என்று கூட ஆதாரமற்ற செய்திகள் பரவின.

பதவி ஏற்ற சமயத்தில், "நான் ராமாயணக் கதாபாத்திரங்களுடன் வேறு வித்தியாசமான உலகில் இருந்து வந்தேன்; சட்டசபை நடைமுறைகள் பற்றியெல்லாம் அடியோடு மறந்தே போய் விட்டேன்" என்று எம். ஜி. ஆர். கூறியிருந்தார். ஆனால் சட்டசபை நடவடிக்கைகள், உண்மை இதற்கு நேர்மாறானது என்பதை உணர்த்தின. இதற்குப் பல உதாரணங்கள் தரலாம். ஆந்திரா மாநிலம் உருவாவது பற்றி எம். ஜி. ஆர். நேருவுக்கு எழுதியிருக்கிறார் என்பது வெளியே தெரிய வந்து விட்டது. உடனே எதிர்க் கட்சி அங்கத்தினர்கள், எம். ஜி. ஆர். என்ன எழுதியிருக்கிறார் என்று தெரிந்து கொள்ள விரும்பித் தட்டிக் கேட்டனர். "அது அந்தரங்கமான கடிதம்" என்றார் எம். ஜி. ஆர். "முதல்வர் பிரதமருக்கு எழுதும் கடிதம் அந்தரங்கமானது என்று எந்தச் சட்டம் சொல்கிறது? சட்டசபைக்கு அதனை அறியும் உரிமை உண்டு" என்று வாதிட்டார் எதிர்கட்சித் தலைவரான விசுவநாதம். எம். ஜி. ஆர். சொன்னார்: "இந்தக் கடிதம் ஒரு கனவான் மற்றொரு கனவானுக்கு எழுதியது. கனவான்கள் ஒருவருக்கு ஒருவர் எழுதும் கடிதங்கள் எப்போதும் அந்தரங்கமானவை. அவற்றை உளவறிய முயல்வது தனி மனிதர் உரிமையில் தலையிடுவதாகும்."

இன்னொரு சமயம், எம். ஜி. ஆர். தமக்கு வேண்டியவர்களுக்கு ஏதோ சலுகை காட்டி விட்டது போன்று தொனிக்கும்படி விசுவநாதம் பேசினார். புதிதாக உருவாக்கப்பட்ட சில பதவிகளில் அமர்ந்துள்ளவர்கள் அதற்குத் தகுதி உள்ளவர்கள்தானா என்று வினா எழுப்பினார். "இம்மாதிரியான கேள்வியை எப்போதும் எதற்கும் எழுப்பலாம்" என்று எம். ஜி. ஆர். பதிலளித்தார். "ஸீதை ஏன் அசோக மரத்தடியில் உட்கார்த்தி வைக்கப்பட்டாள்? வேறு ஒரு மரத்தினடியில் அவள் உட்கார்த்திருப்பதுதானே என்று கேட்பார்களா? ஏதோ ஒரு மரத்தடியில் அவள் அமர வேண்டும். அசோக மரத்தினடியாக அது அமைந்தது. அவளை எந்த மரத்தினடியில் அமரச் செய்திருந்தாலும் இதே போன்ற கேள்வியை எழுப்பலாம்!"

சட்டசபையில் பதிலளிப்பதில் மட்டுமின்றி ஃபைல்களைப் பார்க்கும் போதும் அவரது அறிவுக் கூர்மை பளிச்சிட்டது. சுற்றி வளைக்காமல் நேரடியாக விஷயத்தை அணுகுவார். அரசு ஊழியர்களின் நன்னடத்தை விதிமுறைகளில், அவர்கள் தனிப்பட்ட முறையில் கல்யாணம் போன்ற நிகழ்ச்சிகளுக்குப் போகும் போது கூட, நண்பர்களுடன் அளவளாவும் போது, அமைச்சர்களையோ உயர் அதிகாரிகளையோ குறை கூறிப் பேசக் கூடாது என்று ஒரு விதியைச் சேர்க்க நடவடிக்கை எடுக்கப்பட்டது. இந்தக் கோப்பு ராஜாஜியிடம் வந்தது. "தங்களது மேலதிகாரிகளையும் தங்களுக்குக் கீழே பணியாற்றுபவர்களையும் விமர்சிப்பது என்பது எல்லா மனிதப் பிறவிகளுக்கும் இயல்பாக உள்ள குணமாகும். இந்த இயற்கை வேகத்தை நாம் ஒப்புக் கொள்ள வேண்டுமே தவிர, அடியோடு நசுக்க முயல்வதில் பொருளில்லை. இதில் வெற்றி பெற முடியாது. எனவே இந்த விதிமுறையைச் சேர்க்க வேண்டியதில்லை" என்று கோப்பில் எழுதினார் எம். ஜி. ஆர்.

ஆபாசத் தடைச் சட்டத்தை அமுல் படுத்தும் முறை பற்றி அவர் எழுதிய கோப்புக் குறிப்பு இன்னும் சுவாரஸ்யமானது.

(தொடரும்)

அடுத்த இதழில்...



வாழ்வது உச்சியில்;
வாழ்க்கை பாதாளத்தில்......
— கவர் ஸ்டோரி

அடுத்த இலவச இணைப்பு —
அமரர் கல்கியின் குறுநாவல் 18.9.88
கல்கி இதழுடன் கிடைக்கும்.

முயற்சி + பயிற்சி = முன்னேற்றம்

நீங்கள் உங்களுடைய நண்பர்களுடன் உரையாடிக் கொண்டிருக்கும்போது அவர்களிடம் "உங்களில் எத்தனைபேர் வாழ்க்கையில் முன்னேற விரும்புகிறீர்கள்?" என்ற ஒரு கேள்வியைக் கேட்டுப் பாருங்கள். உடனே அனைவரும் கையை உயர்த்துவார்கள். ஏனென்றால் இவ்வுலகில் முன்னேற விரும்பாதவர்கள் எவரும் இல்லை.

அடுத்ததாக "உங்களில் முன்னேறுவதற்கான முயற்சியில் ஈடுபட்டுள்ளவர்கள் எத்தனைபேர்? என்று மற்றொரு கேள்வியைக் கேளுங்கள். முதற்கேள்விக்கு சட்டென கையை உயர்த்தியவர்கள் இப்பொழுது என்ன பதிலளிக்கலாம் என்று யோசிக்கத் தொடங்கி விடுவார்கள்.

பெரும்பாலானவர்கள் வாழ்க்கையில் முன்னேற வேண்டும் என்று விரும்புகிறார்கள் ஆனால் அதற்கான முயற்சியில் ஈடுபடுவதில்லை. உதாரணமாக நம்மில் பலர் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்று விரும்புகிறோம். விருப்பம் மட்டும் இருந்தால் போதுமா? அவ்விருப்பத்தை நிறைவேற்றும் வழி என்ன என்று யோசித்து, அதற்கான முயற்சியில் ஈடுபட்டு முறையான பயிற்சி பெறவேண்டுமல்லவா?

தமிழகத்தின் தலைசிறந்த கல்வி நிலையம் என்ற தனிப் புகழ் பெற்ற விவேகானந்தா கல்வி நிலையத்தைப் பற்றி நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

இக்கல்வி நிலையம் அளிக்கும் ஓர் எளிய பயிற்சியை மேற்கொண்டால் நீங்கள் தயக்கமின்றி ஆங்கிலத்தில் உரையாடவும் இலக்கண பிழையின்றி கடிதங்கள், கட்டுரைகள் எழுதவும் முடியும்.

வீட்டிலிருந்தபடியே ஓய்வு நேரத்தில் இப்பயிற்சியை மேற்கொள்ளலாம். "நேர்முகப் பயிற்சியும் உண்டு."

ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது விருப்பத்தை இன்றே ஒரு தபால் கார்டில் எழுதி "விவேகானந்தா கல்வி நிலையம் (Regd.) 9, மேட்லிரோடு, தி. நகர், சென்னை 17. என்ற முகவரிக்கு அனுப்புங்கள் உடனே நாங்கள் இப்பயிற்சி பற்றிய மற்ற தகவல்களை அனுப்பி வைக்கிறோம்.

உங்களது முயற்சியும் எங்களது முறையான பயிற்சியும் இணைந்தால் ஆங்கிலத்தில் பேசவேண்டும் என்ற உங்களது. நீண்ட நாளைய விருப்பம் நிச்சயம் நிறைவேறும்.

Ambition without Effort is Like a Bird without wings.





• கே. பி. ஜனார்த்தனன்





• பிரபாகரன் (சத்தியப்பிரியன்)

வில் ஒன்று முறிந்தது; கதை ஒன்று நிலைத்தது!

பரிசுக்குரிய கதைகளைத் தேர்ந்தெடுக்க இறுதிப் பரிசிலனைக்குக் கூடிய நடுவர்கள் ஒவ்வொருவரும் ஒவ்வொரு கதையையும் வாய்விட்டுப் படிக்க, மற்றவர்கள் கவனமாகக் கேட்டு வந்தார்கள். 'சங்கரன்' என்ற சிறுகதையைப் படிக்கும் வாய்ப்பு கல்கி ஆசிரியருக்குக் கிடைத்தது. படித்து வரும் போதே அவருக்குச் சில இடங்களில் தொண்டை அடைத்துக் கொண்டது. பிறரிடம் ஒரு கனத்த மௌனம் நிலவியது. படித்து முடித்த பிறகு சற்று நேரம் யாருமே பேசவில்லை. கடைசியில் மென்று விழுங்கி விட்டு, "அடுத்த கதை" என்று மட்டுமே ஒருவர் கூற, படிப்பது தொடர்ந்தது.

சங்கரனுக்குத்தான் முதல் பரிசு என்பதில் யாருக்குமே எள்ளளவும் சந்தேகம் இருக்கவில்லை. நடுவர்களின் ஏகமனதான தீர்ப்பு மிகவும் சரியானது என்பதற்கு எதிர்பாராத விதத்தில் ஓர் அழுத்தமான ஆமோதிப்பு கிடைத்தது. கோவையைச் சேர்ந்த வாசகர் வை. கை. துறையன் முதல் பரிசுக் கதையைப் படித்துவிட்டு, உருகிப் போய், பாராட்டுக் கடிதம் எழுதியதுடன் தமது சொந்த அன்பளிப்பாகக் கதாசிரியருக்கு ரூ. 100 அனுப்பி வைத்தார். கதாசிரியருக்கு மட்டுமின்றி நடுவர்களுக்கும் கூட இது மிகுந்த மனநிறைவை அளித்தது. கல்கி வாசகர்கள் பலரும் கலங்கிய கண்களுடன் கடிதம் எழுதியுள்ளனர்.

சங்கரனைப் படைத்த பிரபாகரன் (சத்தியப்பிரியன்) 1980 – இல் அமரர் கல்கி சிறுகதைப் போட்டி மூலமாக எழுத்துலகுக்கு அறிமுகமானவர். ஆனால் கல்கியில் சிறுகதைக்குப் பரிசு பெற அவர் எட்டு வருஷங்கள் காத்திருக்க நேர்ந்தது. ஒரு "சங்கரன்" உருவாக எட்டு ஆண்டுகள் ஏற்பட்ட ஏமாற்றங்களைத் தாராளமாகத் தாங்கிக் கொள்ளலாம் என்றே இப்போது திரும்பிப் பார்க்கும்போது தோன்றுகிறது. இதற்கிடையில் இவரது மூன்று குறுநாவல்கள் கலைமகள், கணையாழி ஆகிய இதழ்களில் பரிசுகளைப் பெற்று நம்பிக்கை இழக்காமல் இருக்க உதவியுள்ளன. சங்கரன் முதல் பரிசு பெற்றதை அறிந்தபோது அவர் மனநிலை எவ்வாறு இருந்தது? 'ஜனகன் வில்லை ரகுராமன் உடைத்த போது அவன் மனநிலை எப்படி இருந்திருக்குமோ அப்படி!' என்று கூறுகிறார் பிரபாகரன். சேலம் செவ்வாய்ப்பேட்டை கர்நாடகா வங்கியில் கணக்காளராக வேலை பார்க்கும் பிரபாகரனுக்கு வயது இருபத்தேழு. பி. எஸ்ஸி. பட்டதாரியான இவரது பூர்வீகம் பத்தமடை, திருநெல்வேலி. ஏராளமான புத்தகங்களைப் படிப்பதும் வாழ்க்கையை நுணுகி ஆராய்வதும்தான் என்னை ஓர் எழுத்தாளனாக்கியுள்ளன என்கிறார் பிரபாகரன்.

கே. பி. ஜனார்த்தனன், குமுதத்தில் பிரசுரமான ஒரு நகைச்சுவை நாடகம் மூலமாகத்தான் எழுத்தாளராக அறிமுகமா

ளார். இப்போது நகைச்சுவைக் கதைகளை மட்டுமின்றி சஸ்பென்ஸ் கதைகளையும், ஒரு கருத்தைச் சொல்ல வந்த கதைகளையும் கூட எழுதுகிறார். புதுக்கவிதைகள் எழுதுவதில் நாட்டம் உண்டு. அதிசய ராகம் என்ற திரைப் படத்துக்குக் கதை வசனம் எழுதிய அனுபவமும் உண்டு. நாயகன் விமர்சனப் போட்டியில் பரிசு பெற்று ஒரு நல்ல விமர்சகராகவும் தம்மை நிரூபித்துக் கொண்டிருக்கிறார். பி.காம். பட்டதாரியான இவர் பிறந்து வளர்ந்ததெல்லாம் நாகர்கோயிலில். வங்கியில் வேலை. இவர் இரண்டாம் பரிசு பெற்று, புதிய சுவடுகளை அடையாளம் காட்டியிருக்கிறார்.

கல்கி வாசகர்களுக்குத் தமிழினியன் ஏற்கெனவே நன்கு அறிமுகமானவர். சென்ற வருஷம் இரண்டாம் பரிசு பெற்ற இவர் இந்த ஆண்டு மூன்றாம் பரிசு பெறுகிறார். அடுத்த ஆண்டும் ஒரு பரிசைத் தட்டிச் சென்று ஹாட்ரிக் சாதனை நிகழ்த்தப் போகிறாரோ என்னமோ! தஞ்சை மாவட்டத்தைச் சேர்ந்த தமிழினியன் பி.காம் பட்டதாரி. திருச்சி கனரக மின் தொழிற்சாலையில் அலுவலகக் கண்காணிப்பாளராகப் பணிபுரிகிறார். எழுத்துத் துறையில் பிரவேசித்ததின் வெள்ளி விழாவை இன்னும் இரு ஆண்டுகளில் கொண்டாட இருக்கும் தமிழினியன், இதுவரை 450—க்கு மேற்பட்ட சிறுகதைகளைத் தமிழ் வாசகர்களுக்கு வழங்கியிருப்பதாகக் கணக்குச் சொல்கிறார். தவிர இரண்டு ரகசியங்களை, புத்தகமெழுதி அம்பலப்படுத்தியிருக்கிறார். அவையாவன: 'வெற்றியின் ரகசியம்'; 'கம்ப்யூட்டரின் ரகசியம்.'

மூன்றாம் பரிசு பெற்ற மற்றொருவரான சுசி கோபாலகிருஷ்ணன், வாழ்க்கையில் தாம் பல தோல்விகளைச் சந்தித்திருந்தாலும் அந்தத் தோல்விகளே வெற்றியின் அடிப்படை என்பதையும் புரிந்து கொண்டிருப்பதாகச் சொல்கிறார். பி. எஸ்ஸி. பட்டதாரியான இவருக்கு இன்று வயது முப்பத்தாறு. மேல் படிப்பில் சேர முயன்று தோல்வி; வேலை தேடி அலைந்து தோல்வி; சிறுகதைகள் பல எழுதியும் பிரசுரமாவதில் தோல்வி! அமரர் கல்கி நினைவுச் சிறுகதைப் போட்டியில் பரிசு பெற நாலு ஆண்டுகளின் படையெடுப்பு அடைந்தது தோல்வி! ஆயினும் என்ன? மேலே படிக்க முடியாததாலும் வேலை கிடைக்காததாலும் சொந்தத்தில் வியாபாரம் தொடங்கி இன்று வெகுவாக முன்னேறி விட்டிருக்கிறார். இப்போது எழுத்திலே மெருகேறியதில் சிறுகதைகள் பிரசுரமாவதோடு பரிசுகளும் பெறத் தொடங்கிவிட்டன. 83 — இல் தினமணிக் கதிர் பரிசு; 88 — இல் கல்கி பரிசு! எதிர்காலம் பிரகாசமாக அமையப் போகிறது என்பதைத்தானே இவை உணர்த்துகின்றன! அவருக்கு மட்டுமா? தமிழ் இலக்கிய உலகுக்கும் கூடத்தான்!

உங்கள் குழந்தைக்கு அளியுங்கள் ஸெரிலாக் அனுகூலம்



திட உணவின் தொடக்கத்திலிருந்தே

உங்கள் குழந்தைக்கு நான்காம் மாதத்திலிருந்தே பாலோடு திட உணவும் தேவை. அப்போது ஸெரிலாக் அனுகூலம் அளியுங்கள்.

போஷாக்கு அனுகூலம்: ஒவ்வொரு முறை ஸெரிலாக் ஊட்டும் போதும், புரதச்சத்து, கார்போஹைட்ரேட், கொழுப்பு, வைட்டமின், மற்றும் தாதுப் பொருட்கள் ஆகிய எல்லா போஷாக்குச் சத்துக்களும் சரியான விகிதத்தில் உங்கள் குழந்தைக்குக் கிடைக்கிறது.

சுவை அனுகூலம்: ஸெரிலாக் சுவையில் குழந்தைகளுக்குக் கொள்ளை ஆசை.

தயாரிப்பதில் அனுகூலம்: ஸெரிலாக் ஏற்கனவே பதமாக்கப்பட்டது: பாலும் சர்க்கரையும் கலந்தது. காய்ச்சி ஆறிய நீரில் கலந்தாலே போதும்

தேர்ந்தெடுக்க அனுகூலம்: இப்போது ஸெரிலாக், மூன்று வெவ்வேறு வகைகளில்!

சுகாதாரமான முறையில் தயாரிக்கவும், சரியான விகிதத்தில் போஷாக்கு கிடைக்கவும் டின்னில் தரப்பட்டுள்ள குறிப்புகளை தயவு செய்து பின்பற்றுங்கள்.



6 மாதங்களிலிருந்து

4 மாதங்களிலிருந்து

6 மாதங்களிலிருந்து

இலவசம்
ஸெரிலாக் பேபி கேர் புத்தகம்
எழுதுங்கள்: ஸெரிலாக்,
தபால் பெட்டி எண். 3
புது தில்லி-110008

Nestlé

ஸெரிலாக் பராமரிப்பு: முழுமையான போஷாக்கு, சிறப்பான சுவை

RK SWAMY/FSL/5112/TAM

21

காரில் திரும்பிச் செல்லும் போது அம்ருதா மௌனமாகவே வந்து கொண்டிருந்தாள். ராம்பிரகாஷ்தான் இடைவெளியில்லாமல் பேசினார்: ''உனக்கு எப்படிப் புரிய வைக்கறதுன்னே எனக்கு மலைப்பா இருக்கு அம்ரு. நானும் நீயும் சந்தோஷமா இருந்த நாட்களை வெச்சா, இல்லை நான் உன்னை எத்தனை விரும்பி உன்னைப் பற்றிக் கவிதையெல்லாம் எழுதி வெச்சிருக்கேனே அந்த நாட்குறிப்புக்களை வெச்சா, நீ உங்கப்பா கூட போயிருந்த போது தினம் லெட்டர் எழுதினேனே அதை ஞாபகப்படுத்தியா! அம்ரு, என்னுடைய ஆதாரமான விசுவாசத்தை நீ சந்தேகப்படவே கூடாது. ஒரு யூனிவர்ஸிட்டி ப்ரொபஸர் தன்னுடைய பொது வாழ்க்கையிலே, அலுவல்கள்ல பல பேரைச் சந்திச்சே ஆகணும். அதுவும் 'வர்ஷா' போன்றவர்களைச் சந்திக்கிறது தவிர்க்க முடியாத அம்சம். அதனால் ஆதாரமா உனக்கு உன் புருஷன் மேல் நம்பிக்கை தேவை. என்னைப் பாரு... எனக்கு உன்னை விட்டா யாரும் இருக்காங்களா, சொல்லு அம்ரு!''

அவள், ''ரோட்டைப் பார்த்து ஓட்டுங்கோ'' என்றாள்.

''மைகாட், அம்ரு. நீ அத்தனை மோசமானவன் இல்லை. நீ பாசாங்கு பண்றே!''

''எதுக்காக இந்தப் பீடிகையெல்லாம்?''

''கோர்ட்டிலே உன்னை அவமானப்படுத்துவா அம்ரு. அந்த வக்கீல் என்ன என்னவோ கேள்வி கேட்டு உன்னை...''

''நடுத் தெருவிலே, பொது இடத்திலே, நேரடியாகக் கற்பழிக்கப்பட்ட அவமானத்தையே தாங்கியாச்சு! கோர்ட்டில் அவமானம் எந்த மூலைக்கு...?''

ராம்பிரகாஷ் வாயடைத்துப் போய்ச் சற்றுநேரம் மௌனமாகி மெதுவாகச் சொன்னார்: ''இதுக்கு எங்கிட்டே பதிலே இல்லை... யூ ஆர் ஜஸ்ட் ஸ்டபர்ன். நடக்கறதுக்கெல்லாம் நீதான் ரெஸ்பான்ஸிபிள். அப்புறம் நான் எச்சரிக்கலேன்னு சொல்லாதே!''

''முன்னே நான் பைத்தியம்னீங்க. இப்ப ஸ்டபர்ன், பிடிவாதம்ங்கறீங்க. அந்த மட்டும் இம்ப்ருவ்மெண்ட்தான்.''

பால்குண்டுவும் பாபுவும் போலீஸ் கஸ்டடியில் வைக்கப்பட்டார்கள். போலீஸ் ஸ்டேஷன் பேஸ்மெண்ட்டில் இருந்த ஒரே அறையில் அடைக்கப்பட்டார்கள். அவர்களுக்குக் காப்பியும் ரொட்டியும் கொடுக்கப்பட்டது. பாபு ரொம்ப நேரம் வெற்றுப் பார்வை பார்த்துக் கொண்டு கான்க்ரீட் நீட்டலாக இருந்ததில் உட்கார்ந்திருந்தான். பால்குண்டுதான் இங்குமங்கும் நடந்தான்.

''குரு எல்லாம் உன்னாலத்தான் குரு. நான் தனியா இந்தக் காரியம் செய்திருக்கவே மாட்டேன்.''



''பேசாதே. நாமதான் அதைச் செஞ்சோம்னு யாரும் நிரூபிக்க முடியாது. வக்கீல் சொன்னார், கேட்டே இல்லை?''

''இப்ப என்ன ஆகும்?''

''மாஜிஸ்திரேட் கோர்ட்டுக்குக் கொண்டு போய் நிறுத்துவாங்க. கஸ்டடி கேப்பாங்க. ஜெயில் மாத்துவாங்க. நெறைய முறை ஆயிருக்கு. உனக்கு இது முதல் — புதுசு இல்லை? டேய் உங்கம்மாடா!''

''என் ராசாக்கண்ணு. நான் பெத்த மவனே'' என்று லட்சுமி கண்ணீரில்லாமல் அவனை நோக்கி அழுது கொண்டே வந்து கம்பி அருகில் நின்றாள்.

பாபு சுவர்ப் பக்கம் திரும்பிக் கொண்டான்.

''பாளாப் போற சினேகம் வேண்டாம்னு சொன்னேனில்லை?''

''தாயி! எம் மேல போடாதே. உம்மவன் தான் எம் பின்னால் அலைஞ்சான். பாபு, நான் பார்பர் சாப்பிலேயே சொன்னேனா இல்லையா, என் ரூட்டு வேற, எங்கூட சேர்ந்தா ஆபத்து. இதெல்லாம் சகஜம்னு?''

''போலீஸ்காரய்யா, எம்மவனுக்குப் பேல் பூரி வாங்கித் தரவா?''

''கொடு லட்சுமி, உம்மவனுக்கு இல்லாமயா?''

''எப்ப வுட்டுடுவாங்க?''

''அதெல்லாம் சொல்ல முடியாது.''

''பாபு, பாபு, என் செல்லம்!''

பாபு திரும்பவே இல்லை.

''எம்மேல கோவம்தானே! உனக்காகத் தானே நான் இந்த நாய்ப் பொழைப்புப் பொழைக்கறேன். எனக்கு உம்மேல பிரியம் இல்லைங்கறியா பாபு? உனக்கு பாங்கில உம் பேர்ல பணம் போட்டுச் சேர்த்து வெச்சிருக்கிறதைச் சொல்லவா, உன் படிப்புக்காக ட்யூசன் வெச்சுக்க, வாத்தியார் சோமப்பா ஒருக்கா என்னைப் பார்க்க வந்த போது...''

''புலம்பாதே நிறுத்து. உன்னையும் உள்ளே தள்ளிடுவாங்க!''

''பாபு, என்னைப் பார், பால்குண்டா சொல்லுரா, நான் என்னடா செய்தேன்? நான் என்னடா தப்புச் செஞ்சேன்?''

பாபு சட்டென்று திரும்பினான். ''நீ இருக்

றதே தப்புதான். நான் பொறந்ததே தப்பு தான். உன்னாலதான் நான் இந்த நெலைக்கு வந்தேன்.''

''எப்படி? சொல்லு. மாத்திக்கிறேன்.''

''உன்னை மாத்தவே முடியாது.''

''பாபு, பாரு கண்ணு. இதெல்லாம் அப்பவே வுட்டாச்சு. இப்ப ஐட்டிஐ ஆண்ட புல் வெட்டிக்கிட்டு இருக்கேன். தினம் பத்து ரூபா, காப்பி, டிபன் தர்றாங்க. பாபு அதெல்லாம் வுட்டுட்டேன் பாபு!''

''பொய்யி. நேத்துத்தான் உன்னையப் பார்த்தேன். ஆட்டோல போய்க்கிட்டிருந்தே.''

''அது நம்ம பூசாரிங்க போலீஸ் காரய்யா.''

''ஏதாவது வாய்க்கு வ ந் த தை த் சொல்லு.''

பாபு கண்ணீருடன், ''வெக்கமா இல்லை, உனக்கு?'' என்றான்.

லட்சுமி கண்ணைத் துடைத்துக் கொண்டவள், ''என்ன வேணும் உனக்கு? நான் செத்துப் போயிடணும். அவ்வளவு தானே!''

''அதெல்லாம் வேண்டாம் போ. எம்முன்னால நிக்காதே. உன்னைப் பார்க்கவே விருப்பமில்லை. அவ்வளவுதான் சொல்வேன்.''

''இன்னாடா இப்படி சொல்றான்? பால் குண்டு சொல்றா! இவன்கிட்ட 'அன்னையும் பிதாவும்'னு என்னவோ பெரியவங்கள்லாம் சொல்லியிருக்காங்களே சொல்லுரா! பெத்த தாய்டா. இவனுக்காக ஆஸ்பத்திரிலே என்னா பாடுபட்டேன். சின்ன வயசில காய்ரா வந்து எத்தினி நாளு இவனைக் கையிலேயே ஏந்தியிருக்கேன். மகமாயிக்காக எத்தனை விரதம் இருந்திருக்கேன். எத்தனை கோயிலு, எத்தனை குளம்...''

''எத்தனை ஆம்பிளைங்க!''

''நான் என்னடா செய்வேன்? எப்படிரா நான் பொறந்ததையும் வளர்ந்ததையும் எங்கப்பனே என்னை வித்ததையும் சொல்வேன், பாபு!''

''சொல்லாதே. என்னைத் தேடிக்கிட்டு செயிலுக்கு வராதே. அவமானமா இருக்குது.

கொஞ்ச நேரம் அவனையே முறைத்துப் பார்த்துக் கொண்டிருந்தவள் மேற்கொண்டு எதுவும் பேசாமல் மெல்லப் புறப்பட்டுப்

இருள் வரும் நேரம்

சுஜாதா



போக,

''குரு இவளை என்னா செய்வேன்?'' என்றான் பாபு.

''நானா இருந்தா அம்மான்னு பார்க்காம கண்ட துண்டமா வெட்டிப் போட்டிருப்பேன்!''

''ஒரு சில சமயம் அவ செய்யறது நிசமாத் தப்புத்தானான்னு யோசனை வருது குரு.''

''அதிலே என்னடா சந்தேகம்?''

''நாம செய்தது?''

''நாம செய்ததும் தப்புத்தான்!''

பாபு மௌனமாக இருக்க, ''நாம ஆம்பிளைங்க!'' என்றான் பால்குண்டு.

ராம்பிரகாஷுக்கு இரண்டாவது மெட்ரோபாலிட்டன் கோர்ட்டைக் கடைசியாக வந்தடைந்தபோது, பிரமிப்பாக இருந்தது. கட்டடம் நவீனமாகத் தோன்றினாலும் ஒரு ரெயில் நிலையத்துக்குச் சமானமாக ஜனப் புழக்கத்தின் சுவடுகள் அதன் மாடிப்படிகளிலும் லிப்ட்டு இடுக்கல்களிலும் காண்டீன் அகத்திலும் தெரிந்தன. எல்லோரும் எல்லாத் திசைகளிலும் நடந்து கொண்டிருந்தார்கள். கறுப்புக் கோட்டு லாயர்கள் காற்றில் உடை பறக்க வேகமாய்ப் போய்க் கொண்டிருந்தார்கள். மரத்தடியில் டாக்ஸிகளும் டைப்ரைட்டர்களும் நிழலுக்கு ஒதுங்கியிருந்தன. அம்ருவைப் பல பேர், இடத்துக்குப் பொருத்தமில்லாததைப் பிரமித்துப் பார்த்தார்கள். ஹெட்கான்ஸ்டபிள் கன்னடத்தில் எழுதியிருந்த பெரிய கத்தையான் காகிதங்களைச் சேகரித்து வைத்துக் கொண்டு, ராம்பிரகாஷையும் அம்ருவையும் கோர்ட்டின் அறையின் உள்ளே அழைத்துச் சென்று, இடது புறம் வரிசையாகப் போட்டிருந்த நாற்காலிகள் இரண்டில் உட்கார வைத்தார். அம்ரு லேசான நீல நிறத்தில் ஸாரி அணிந்து கறுப்புக் கண்ணாடி போட்டிருந்தாள். ராம்பிரகாஷ் சுற்றுமுற்றும் பார்த்தார். ஒரு சிப்பந்தி அவரிடம் வந்து, ''காலைக் குறுக்க போட்டுக்காதீங்க'' என்றார்.

எதிரே கோர்ட்டு மையத்தில் மாஜிஸ்திரேட்டுக்கு மேலே காந்தி தேசியப் புன்னகை செய்து கொண்டிருக்க, இடதுபுறம் சாட்சிக் கூண்டில் சத்தியப் பிரமாணம் பர்மனெண்டாக எழுதி ஆணி அடித்து வைத்திருந்தது.

மாஜிஸ்திரேட்டுக்கு நேர் எதிரே குற்றவாளிக் கூண்டுகள் இருந்தன.

சுற்று முற்றும் பார்த்த போது, எதிரே கோவர்த்தன் ராவ் கொஞ்ச நேரமாகவே டாக்டரின் கவனத்தைக் கவர முயற்சி செய்து கொண்டிருந்தார். பார்த்ததும் சிரித்துச் சௌக்கியமா? என்று சைகையால் கேட்டார்.

ஏதோ கேஸை யாரோ விசாரித்துக் கொண்டிருக்க, மாஜிஸ்திரேட் அவ்வப்போது ஒத்தி வைப்பதையும் கவனித்தார்.

தர்மராஜன் கோர்ட்டுக்குள் நுழையுமுன் விரைப்பாகச் சல்யூட் அடித்து விட்டு, டாக்டர் ராம்பிரகாஷிடம் வந்தார். ''கொஞ்சம் வரீங்களா? நீங்களும் வாங்கம்மா.''

மெதுவாகப் பக்கவாட்டில் அவர்கள் இருவரையும் கோர்ட்டுக்கு வெளியே அழைத்துச் சென்று, ''ப்ராஸிக்யூட்டர் கேக்கற கேள்விக்கெல்லாம் சுருக்கமாப் பதில் சொன்னாப் போதும்மா. அந்த ஆளு ராவ், எதுனாச்சும் கேட்டாத் தெரியாதுன்னே சொல்லிருங்க,'' என்று எச்சரித்தார்.

''இன்ஸ்பெக்டர் எனக்குப் பயமா இருக்கு'' என்றாள் அம்ரு.

''அம்ரு இப்பக்கூட போயிரலாம். வேண்டாம் இது.''

''இல்லை'' என்றாள்.

''அபாண்டமா எது சொன்னாலும் ரியாக்ட் பண்ணாதீங்க.''

''என்ன சொல்லப் போறான்?''

''அதான அன்னைக்குக் கோடி காட்டினாங்களே.''

அம்ரு முதன் முறையாகத் தன் கணவனின் கரத்தை இறுக்கமாகப் பற்றிக் கொண்டாள். ராம்பிரகாஷ் அதை அழுத்தினார். 'கவலைப்படாதே பெண்ணே' என்றார்.

ஏறக்குறைய மதிய உணவு நேரம் வரை காத்திருக்க வேண்டியிருந்தது. அதன் பின்தான் பாபுவும் பால்குண்டுவும் குற்றவாளிக் கூண்டில் கொண்டு வந்து நிறுத்தப்பட்டனர். ராம்பிரகாஷ் அவ்விருவரையும் பார்த்தார். தலை கலைந்து, அடர்த்தியாக வளர்ந்து, குப்பையாக இருந்தது. கண்களில் குற்றமோ வருத்தமோ இல்லாமல் இருந்தான் பால்குண்டு. பாபு மிரட்சியாகப் பார்த்துக் கொண்டிருந்தான். ''இவங்கதான் அம்ரு'' என்றார்.

கோவர்த்தன் ராவ் எழுந்து மாஜிஸ்திரேட் அருகில் சென்று பேசினார். அவர் குனிந்து கேட்டார். ''ஆர் தே ஹியர்?''

ப்ராஸிக்யூட்டிங் இன்ஸ்பெக்டர் எழுந்து ''இருக்கிறார்கள்'' என்றார். அவரும் மாஜிஸ்திரேட் அருகில் வந்து பேச, ''மிஸஸ் ராம்பிரகாஷ் ப்ளீஸ் கம்'' என்றார்.

ராம்பிரகாஷ் அவளுடன் சாட்சிக் கூண்டு வரை நடந்து அருகிலேயே இருந்த முதல் நாற்காலியில் உட்கார்ந்து கொள்ள, மாஜிஸ்திரேட் அவளை ''ப்ளீஸ் ரிமூவ் யுவர் ஸன் க்ளாஸஸ், உங்க பேரு?'' என்று கேட்டார்.

(தொடரும்)

பரதன் அச்சகத்தில் அச்சிடுபவர் வி. முரளி. பரதன் பப்ளிகேஷன்ஸ் பிரைவேட் லிமிடெட் சார்பாக வெளியிடுபவர் வி. வைத்தியநாதன். ஆசிரியர்: வி. ராஜேந்திரன்.
முகவரி: ரேஸ்கோர்ஸ் சாலை, கிண்டி, சென்னை — 600 032. போன்: நிர்வாகக் காரியாலயம்: 4 3154 3, 4 34 157; ஆசிரியர் குழு அலுவலகம்: 4 34 14 5.
ஆண்டுச் சந்தா — உள்நாடு: ரூ. 104/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 280/—; விமானத் தபால் ரூ. 680/—.
ஆறுமாதச் சந்தா — உள்நாடு: ரூ. 52/—; வெளிநாடு: கப்பல் தபால் ரூ. 140/—; விமானத் தபால் ரூ. 340/—.



மாடத்தேவன்
சுனை
அமரர் கல்
4-9-88 இதழ்
கல்கி
இலவச இணைப்
உமாபதி

முன்னுரை

ராமநாதபுரம் ஜில்லாவில் நடைபெற இருந்த ஓர் ஆண்டு விழாவுக்காக நான் ரயில் ஏறிப் பிரயாணம் செய்ய நேர்ந்தது. அப்போது நாடெங்கும் தண்டவாளம் நகர்ந்து ரயில் வண்டி கவிழ்ந்தது பற்றிச் செய்திகள் வந்து கொண்டிருந்த காலம். எனினும் நான் ஏறிய அதே ரயிலில் ஒரு கனம் மந்திரியும் ஏறியிருக்கிறார் என்ற தைரியத்தின் பேரில் கவலையற்றிருந்தேன்.

'தூங்காமை கல்வி துணிவுடைமை
இம்மூன்றும்
நீங்கா நிலனாள் பவற்கு'

என்னும் திருவள்ளுவரின் திருவாக்கைக் கடைப்பிடித்து நம் மந்திரிமார்கள் உறக்கமின்றி, தேச நிர்வாகத்தில் ஈடுபட்டிருக்கிறார்கள் அல்லவா? அவர்கள் விழித்துக் கொண்டிருக்கும் சமயத்தில் எந்த அரக்கன் வந்து தண்டவாளத்தைத் தொட்டுவிட முடியும்? யமன்தான் அணுகி வந்து விடுவானா?

இரண்டு பக்கமும் காடாயிருந்த பிரதேசத்தில் ரயில் நின்றது. காட்டுப் பாக்கம் ஸ்டேஷனுக்கு அப்பால் சிறிது தூரத்தில் நின்றதாக அறிந்தேன். காரணம், எதிரில் வந்து கொண்டிருந்த ஒரு வண்டி தண்டவாளத்திலிருந்து நழுவி விட்டதுதானாம். நல்ல வேளையாய்ப் போச்சு! எல்லாம் கடவுளுடைய செயல்தான்! எதிர்ப் பக்கம் வந்த ரயிலுக்கு நேர்ந்தது இந்த ரயிலுக்கு நேர்ந்திருந்தால்?... இவ்வுலகில் நம்மால் ஏதோ பெரிய காரியங்கள் நிறைவேற வேண்டுமென்பது கடவுளுடைய விருப்பம் போலும்! அன்றைக்கு 'லார்ட் கிளைவ்' என்னும் மகாவீரன் தன்னைத் தானே துப்பாக்கிக் குண்டால் சுட்டுக் கொள்ள முயன்ற போது அவனைச் சாகாமல் காப்பாற்றிய கடவுள்தான் நம்மையும் காப்பாற்றியிருக்க வேண்டும்! உலகில் எந்தப் பாகத்தில் எந்த சாம்ராஜ்யத்தை நாம் ஸ்தாபித்தாக வேண்டுமோ, அல்லது அழித்தாக வேண்டுமோ, யார் கண்டது?

காட்டுப் பாக்கத்துக்கு அருகில் நாலரை மணி நேரம் காத்திருந்த பிறகு எங்கள் ரயில் கிளம்பிற்று. அப்புறமும் கொஞ்சம் சாவகாசமாகவே சென்றது. அதன் பலன் என்னவென்றால், காலை எட்டு மணிக்கு மதுரைக்குப் போக வேண்டிய ரயில் மத்தியானம் 12.30-க்குப் போய்ச் சேர்ந்தது. (அங்கு இறங்கி விசாரித்த போது, கனம் மந்திரி அவர்கள், எழும்பூர் ஸ்டேஷனில் தூங்க ஆரம்பித்தவர், திண்டுக்கல்லில்தான் விழித்துக் கொண்டார் என்று அறிந்தேன்! நல்லவேளை, மந்திரியை மட்டும் நம்பியிராமல் கடவுளையும் நம்பியது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று!)

குறிப்பிட்ட ஆண்டு விழாவுக்குப் போய்ச் சேர வேண்டுமானால், பாக்கிப் பிரயாணத்துக்கு ரயிலை நம்பிப் பயனில்லை என்று ஏற்பட்டது. எனவே, மதுரையில் ஒரு மோட்டார் கார் பிடித்துக் கொண்டு புறப்பட்டோம். வழியில் காரின் என்ஜின் கொஞ்சம் தொந்தரவு கொடுத்தது. முன் பக்கத்துத் துவாரம் வழியாகவும், பின் பக்கத்து ஓட்டை வழியாகவும் பிரமாதமான புகை கிளம்பியது. "வேறொன்றுமில்லை; வண்டியின் கார்பரேட்டர் கொஞ்சம் தண்ணீர் கேட்கிறது!" என்றார் டிரைவர்.

"இந்த வறண்ட ஜில்லாவில் மனிதர்களுக்கும் பிராணிகளுக்குமே தண்ணீர் கிடைப்பது அரிதாயிற்றே! மோட்டார் என்ஜின் வேறு தண்ணீர் கேட்டால், தண்ணீர் எங்கே கிடைக்கப் போகிறது?" என்று நான் என் கவலையைத் தெரிவித்துக் கொண்டேன்.

"சீக்கிரத்தில் மாடத் தேவன் சுனை வரும். அதில் எப்படியும் தண்ணீர் இருக்கும்" என்றார் கூட வந்த பாண்டிய நாட்டு நண்பர்.

மாடத்தேவன் சுனை வந்தது. அது சாலைக்குப் பக்கத்தில் இருந்த ஒரு குட்டையான, கறுப்பான, பச்சை நிறமே காணாத பாறையின் உச்சியில் இருந்தது. அந்தப் பாறையின் அடிவாரத்தில் ஒரு பழைய கோட்டை ஒரு காலத்தில் இருந்து, பின்னால் இடிந்து தகர்ந்து போயிருக்க வேண்டும் என்பதற்கு அறிகுறிகள் காணப்பட்டன. கோட்டைச் சுவரில் ஒரு சிறு பகுதி கூட உருப்படியாக இல்லை. கோட்டையின் அஸ்திவாரங்கள், தகர்ந்து உருண்டு கிடந்த சிற்சில பகுதிகள் மட்டுமே காணப்பட்டன.

அத்தகைய கரிய பாறையின் உச்சியில், சுற்று வட்டாரத்தில் வெகு தூரத்துக்கு வறண்டு கிடக்கும் பிரதேசத்தில், அந்த இனிய, தெளிந்த நீர்ச்சுனை எப்படி ஏற்பட்டது என்பது ஒரு பெரிய மர்மமாகவே தோன்றியது. இங்கேதான் இயற்கையின் அதிசயமான சக்தியைக்காண்கிறோம். சுனையைப் பார்த்து அதிசயித்த பிறகு, அதன் கரையில் செங்குத்தாக நிறுத்தியிருந்த ஒரு கருங்கல்லின் மீது என் கவனம் சென்றது. கல்லுக்கு அருகில் ஒரு சிறிய வேல் நாட்டப்பட்டிருந்தது. கல்லுக்கும் வேலுக்கும் பூஜை நடப்பதுண்டு என்றும், சந்தனம், குங்குமம், புஷ்பம், வழிந்தோடியிருந்த எண்ணெய்,— இவற்றிலிருந்து தெரிந்து கொண்டேன்.

'மாடத் தேவன் சுனை'யைப் பற்றி ஏதேனும் ஒரு கதை இருக்க வேண்டும் என்பதில் சந்தேகமில்லை. ஆனால் சுனையின் கதையைப் பற்றி விசாரிக்க அப்போது அவகாசம் ஏது? ஆண்டு விழா அகோரமான குரலில் எங்களை அழைத்துக் கொண்டிருந்தது. மோட்டார் வாகனத்தின் தாகம் தீர்ந்ததும் புறப்பட்டுச் சென்றோம்.

பிறிதொரு சமயம் அவ்விடத்துக்குச் சென்று அக்கம்பக்கத்தில் விசாரித்துத் தெரிந்து கொண்ட கதையைக் கீழே எழுதியிருக்கிறேன்; கொஞ்சம் காது, மூக்கு வைத்திருக்கிறேன்; அவ்வளவுதான். காது, மூக்கு

உங்களுக்குப்பிடிக்காவிட்டாலும்கதைபிடித்திருந்தால் சரிதான்.

1

நூற்றைம்பது ஆண்டுகளுக்கு முன்னால் அந்த இனிய சுனையைப் பெற்றுள்ள அர்ச்சுனன் குன்றின் அடிவாரத்தில் ஒரு சிறிய கோட்டை இருந்தது. ஒரு சமயம் அர்ச்சுனன் தென்னிந்தியாவில் தீர்த்த யாத்திரை செய்தபோது இந்தக் குன்றின் மேல் ஏறி நின்று தவம் செய்தானாம். அப்போது அவனுக்குத் தாகம் எடுத்து விட்டதாம். அர்ச்சுனனின் தந்தையான இந்திரன் தன் மகனுடைய தாகத்தைத் தீர்ப்பதற்காகத் தேவலோகத்திலிருந்துஒருகுடம்தண்ணீரைக் கொட்டினானாம். அதில் அர்ச்சுனன் குடித்தது போக மிச்சமிருந்த தண்ணீர் சுனையாக நின்று விட்டதாம். ஆகையினாலேயே அதற்கு அர்ச்சுனன் குன்று என்று பெயர் வந்ததாம். இது பழைய கதை; குன்றுக்குப் பெயர் வந்த கதை. 'மாடத்தேவன் சுனை' என்னும் பெயர் எவ்விதம் ஏற்பட்டது என்பதையல்லவா இப்போது நாம் பார்க்க வேண்டும்?

அர்ச்சுனன் தவம் செய்து சில ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு அந்தக் குன்றின் சாரலில் பாண்டிய மன்னன் ஒருவன் ஒரு கோட்டை கட்டினான். அந்தக் கோட்டை நாளடைவில் பழுதுபட்டு நமது கதை நடந்த காலத்தில் இடிந்து தகர்ந்த நிலையிலேதான் இருந்தது. ஆகையால் அந்தக் கோட்டையைப் பற்றி யாரும் அவ்வளவாகக் கவனிக்கவில்லை. பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியக் கட்டபொம்மனைத் தூக்கிலிட்ட போது, பாண்டிய நாட்டிலுள்ள பாளையக்காரர்களின் கோட்டைகளையெல்லாம் தகர்த்துவிட வேண்டுமென்று கும்பினிக்கார வெள்ளையர்கள் கட்டளையிட்டார்கள். ஆனால் இந்தக் கோட்டையை இடிக்க வேண்டும் என்று அவர்கள் கட்டாயப்படுத்தவில்லை. ஏற்கெனவே அக்கோட்டை வேண்டிய மட்டும் இடிந்து தகர்ந்து இருந்தது. எந்தவிதமான சண்டைக்கும் அதை உபயோகப்படுத்திக் கொள்ள முடியாது. அதிகம் பேர் அதில் தங்கியிருப்பதும் அசாத்தியமான காரியம்.

அச்சமயம் அக்கோட்டையில் கருப்பையா சேர்வை என்ற கிழவனும், அவனுடைய செல்வப் புதல்வி வேலம்மாள் என்பவளும் வாழ்ந்து வந்தார்கள். வெகு காலத்துக்கு முன்பு அந்தப் பாறைக்குப் பக்கத்தில் கள்ளர் பயம் அதிகமாயிருந்த காலத்தில் வழிப்போக்கர்களுக்குப் பாதுகாப்பாக அக்கோட்டை கட்டப்பட்டது. சிவகங்கைப் பாளையக்காரர் அங்கே கருப்பையாவைக் குடும்பத்துடன் குடியேற்றி வைத்தார். அதற்காக அவனுக்கு மானியமும் கிடைத்து வந்தது. இளம் வயதில் கருப்பையா பெரிய வீரதீரனாயிருந்தான். கையில் தடியை எடுத்துக் கொண்டு கிளம்பினால், பத்துக் கள்ளர்களை அவன் ஒருவனாகவே சமாளித்து விடுவான். பிரயாணிகள் இரவு நேரங்களில் அந்தக் கோட்டையில் தங்குவதுண்டு. அப்படித் தங்கியதற்காகவும், கருப்பையா தங்களுக்கு அளிக்கும் பாதுகாப்புக்காகவும் பிரயாணிகள் அவனுக்குத் தக்க சன்மானம் கொடுத்துவிட்டுப் போவார்கள்.

அதெல்லாம் பழைய காலம். கும்பினிக்காரர்கள் வந்து ஆர்க்காட்டு நவாபுக்காக வரி வசூலிக்கத் தொடங்கியதிலிருந்து எல்லாம் ஏறுமாறாகப் போய்விட்டது. கருப்பையாவுக்குக் கிடைத்து வந்த மானியம் நின்று விட்டது. அவனுடைய அருமை மனைவி அவனையும் சின்னஞ்சிறு வேலம்மாளையும் அநாதையாக விட்டுவிட்டுக் காலமாகி விட்டாள். இப்போதெல்லாம் அந்தப் பக்கத்தில் கள்ளர் பயமும் அதிகம் கிடையாது. கும்பினிக்காரர்களின் படைகளே பட்டப் பகலில் எல்லாக் கொள்ளைகளையும் நடத்தி வந்தபடியால், கள்ளர்கள் யாரைக் கொள்ளை அடிப்பார்கள்? கருப்பையாவின் தயவை யார் தேடுவார்கள்? அவனும் அவனுடைய மகளும் வாழ்க்கை நடத்துவது தான் எப்படி?

இத்தகைய நிலைமையில் அர்ச்சுனன் குன்றின் உச்சியிலிருந்த சுனை நீர், தகப்பனும் மகளும் ஜீவித்திருப்பதற்குக் கொஞ்சம் உதவியாயிருந்து வந்தது. அந்தச் சுனையில் சாதாரணமாக மழைக் காலத்திலும் குளிர் காலத்திலும் தண்ணீர் ததும்பிக் கொண்டிருக்கும். அதிலிருந்து ஒரு சிறிய அருவியும் விழுந்து கொண்டிருக்கும். அந்த அருவி கோட்டைக்குள்ளே புகுந்து ஒரு பக்கத்துச் சுவர் ஓரமாக ஓடிச் சென்று வெளியில் வந்து கீழே அடிவாரத்துக்குச் செல்லும். அவ்விதம் குன்றின் அடிவாரத்துக்கு வரும் சுனை அருவி நீரை உபயோகித்து ஒரு வாலிபன் பயிர்த் தொழில் செய்து கொண்டிருந்தான். அவன் பெயர் மாடத் தேவன். சில சமயம் அவன் கேழ்வரகு பயிர் செய்வான். சில சமயம் வெள்ளரிக்காய் போடுவான். நல்ல உழைப்பாளி. ஆகையால் அவனுடைய தோட்டம் எப்போதும் குளுகுளுவென்றிருக்கும். அந்தப் பக்கமாகச் சாலையில் பிரயாணம் செய்கிறவர்கள் சற்று நின்று அந்தத் தோட்டத்தைப் பார்த்துவிட்டுத்தான் போவார்கள். அவர்களில் சிலர் மகிழ்ச்சியுடன் பார்ப்பார்கள்; சிலர் பொறாமையுடனும் பார்ப்பார்கள்.

அவ்வாறு பொறாமையுடன் பார்த்தவர்களில்கருப்பையா சேர்வையும்ஒருவன். மாடத்தேவனுடைய உழைப்பினால் அவனுடைய காணி நிலம் நாளுக்கு நாள் செழிப்படைந்து வந்தது கண்டு கிழவன் மனம் புழுங்கினான். அம்மாதிரி தானும் செய்யலாமென்றால், கைகளில் போதிய வலிவு இல்லை. உழைத்துப்பாடுபடக்கூடியபிராயம் போய்விட்டது. மூப்பும், வறுமையும், மதுவும் சேர்ந்து இரும்பு போன்ற உடம்பைப் பலவீனப்படுத்தியிருந்தன. தனக்கும் தன்



மகளுக்கும் அன்றாடம் பசி தீருவதே பெரும்பாடாயிருக்கும்போது, அவனுடைய கண்ணெதிரே, புதிதாக வந்து குடியேறியவன் ஒருவன், நாளுக்குநாள் செழிப்பாயிருந்தால், மனம் கஷ்டப்படத்தானே செய்யும்? எனவே, சுனைத் தண்ணீர் சம்பந்தமாகக் கிழவன் தகராறு செய்ய ஆரம்பித்தான். தன்னுடைய கோட்டையின் வழியாகச் செல்லும் சுனை அருவித் தண்ணீரைத் தடுத்து நிறுத்திவிடுவதாகச் சொன்னான். இதற்கு மாடத்தேவன் பயப்பட்டு விடவில்லை. ''சுனைநீர் உன்னுடையதா? அல்லது கோட்டைதான் உன்னுடையதா? சுனைநீர் கடவுள் அளித்தது; இந்தப் பாழடைந்த கோட்டையோ சிவகங்கைப் பாளையக்காரருடையது. நீ மட்டும் சுனை நீரைத் தடுத்து நிறுத்து, பார்க்கலாம். நான் பாளையக்காரரிடம் போய் உத்தரவு வாங்கி வருகிறேனா, இல்லையா, பார்!'' என்றான் அந்த வாலிபன்.

''பாளையக்காரனுக்கு இங்கே என்ன அதிகாரம்? அவன் எனக்குப் படி அளக்கிறானா? அந்தக் காலம் மலையேறிவிட்டது. ஆனானப்பட்ட வீரபாண்டியக் கட்டபொம்மனைக் கும்பினிக்கார வெள்ளையர்கள் புளியமரத்திலே தொங்கவிட்டுவிட்டார்கள்! இந்தப் பாளையக்காரன் என்னை என்ன செய்துவிட முடியும்? கோட்டை என்னுடையது. நான் இஷ்டப்பட்டால் அருவியைத் தடுப்பேன்!'' என்று கிழவன் கறுவினான்.

இதையெல்லாம் ஒட்டுக் கேட்டுக் கொண்டிருந்தாள் அவனுடைய மகள் வேலம்மாள். அன்று மாலை மாடத்தேவனுடைய தோட்டத்துக்குப் போனாள். ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டு சிறிது நேரம் நின்றார்கள். பேச்சு எளிதில் வருவதாயில்லை. வேலம்மாளின் நெஞ்சை அடைத்தது. அவளுடைய கண்களில் கண்ணீர் துளித்தது. அப்போது பூரண சந்திரன் கீழ்த் திசையில் உதயமானான். சந்திரகிரணங்கள் வேலம்மாளின் கண்ணீர்த் துளிகளைச் சுடர்விடும் முத்துக்கள் ஆக்கின.

அதைப் பார்த்த நிமிடத்திலேயே மாடத்தேவன் வேலம்மாளின் கொத்தடிமையானான்.

''பெண்ணே! இந்த நேரத்தில் இங்கே தனியாக ஏன் வந்தாய்? உன் அப்பன் பார்த்தால் என்ன சொல்வான்?'' என்றான்.

ஏற்கெனவே அவர்கள் ஒருவரையொருவர் பார்த்துக் கொண்டதுண்டு, எட்ட நின்று பேசியதும் உண்டு. ஆனால் மாடத்தேவனின் தோட்டத்துக்குள் வேலம்மாள் பிரவேசித்ததில்லை.

மாடத்தேவன் இப்போது கேட்டதற்கு, ''உன்னிடம் ஒன்று கெஞ்சிக் கேட்டுக்கொள்வதற்காக வந்தேன்!'' என்றாள் வேலம்மாள்.

''கெஞ்ச வேண்டாம்; உத்தரவு போடு!'' என்று கூறினான் மாடத்தேவன்.

''என் தகப்பனாருக்கு வயதாகி விட்டது. தள்ளாமை வந்துவிட்டது. இன்னும் சில காலந்தான் உயிரோடிருப்பார். அவர் இருக்கிற வரையில் இந்த இடிந்த கோட்டையும் மலைமேலுள்ள சுனையும் அவருடைய உடைமைகளாகவே இருக்கட்டும். அவர் போகும்போது இதையெல்லாம் கொண்டு போகப் போவதில்லை. அவருக்குப் பிறகு நான் இங்கே தனியாக இருக்க மாட்டேன். உற்றார் வீட்டுக்குப் போய்விடுவேன். அப்புறம் நீயே இதையெல்லாம் வைத்துக் கொள். நான் போட்டிக்கு வரவில்லை. கொஞ்ச நாட்கள் பொறுத்துக் கொண்டிரு!'' என்றாள்.

''பெண்ணே! கோட்டை, சுனை, இந்தத் தோட்டம், குடிசை, எல்லாம் உன்னுடைய உடைமை; நான் உன்னுடைய அடிமை. நீ என்னை இங்கே இருக்கச் சொன்னால், இருக்கிறேன். இல்லாவிட்டால் மறுபடியும் போய்க் கும்பினிக்காரன் பட்டாளத்தில் சேர்ந்துவிடுகிறேன்!'' என்றான் மாடத்தேவன்.

''கும்பினிக்காரன் பட்டாளத்தில் சேர்வதா? பாஞ்சாலங்குறிச்சி வீரபாண்டியனைத் தூக்கிலே போட்ட சண்டாளர்களுடைய படையிலே சேர்வதா? அந்தப் பேச்சை இன்னொரு தடவை சொல்லாதே! இங்கேயே இரு. உண்மையில் அப்பாவுக்கு உன்பேரில் ரொம்பப் பிரியம். கொஞ்சம் நல்லபடியாக அவருடன் பேசிப் பார்த்தால், இரண்டு பேரும் அன்னியோன்னியமாகி விடுவீர்கள்!'' என்றாள் வேலம்மாள்.

வேலம்மாளுடைய யோசனையை மறுநாளே மாடத்தேவன் கையாண்டு பார்த்தான். கருப்பையா சேர்வையிடம் சென்று, ''மாமா! அப்புறம் நான் யோசித்துப் பார்த்தேன். உங்களுடன் சண்டை பிடித்தது தப்பு என்று தெரிந்தது. நானோ அநாதை; உற்றார் உறவினர் யாருமில்லாதவன். இந்த அக்கம் பக்கத்திலும் நம்மைத் தவிர யாரும் கிடையாது. உங்களுக்கு நான் துணை; எனக்கு நீங்கள்தான் துணை; நாம் எதற்காகச் சண்டை போட்டுக் கொள்ள வேண்டும்? எனக்கு ஒரு யோசனை தோன்றியது. உங்கள் கோட்டை வழியாக வரும் அருவித் தண்ணீரை நான் வெள்ளாமைக்கு உபயோகிக்கிறேன் அல்லவா? அதற்குப் பதிலாக, என்னுடைய நிலத்தில் விளைவதில் நாலில் ஒரு பாகத்தை உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன், என்ன சொல்கிறீர்கள்?'' என்றான்.

''தம்பி! அப்படி வா வழிக்கு! இந்த

அறிவு உனக்கு முன்னாலேயே ஏன் இல்லாமல் போயிற்று?'' என்று கருப்பையா சேர்வை பெருமிதத்துடன் கூறினான்.

''போனது போகட்டும், மாமா! இனி மேல் நடக்க வேண்டியதைப் பார்க்கலாம். ஒரு நாள் என்னுடைய தோட்டத்துக்கு வந்துதான் பாருங்களேன்!'' என்று மாடத்தேவன் ஆவலோடு கூறினான்.

''அதற்கென்ன, வருகிறேன். எப்போதாவது உனக்குக் கூட மாட ஒத்தாசை செய்ய வேண்டுமானாலும் சொல்லு; நானும் வேலம்மாளும் எங்களால் முடிந்த ஒத்தாசை செய்கிறோம். என் மகள் எப்பேர்ப் பட்டவள் என்று உனக்குத் தெரியாது. அவள் கண் பார்த்ததை அவள் கை செய்யும்!'' என்றான் கிழவன்.

''நன்றாயிருக்கிறது, மாமா! தள்ளாத கிழவராகிய உங்களையும் உங்கள் மகளையும் நான் என் தோட்டத்தில் வேலை செய்யச் சொல்வேனா? நீங்கள் எப்போதாவது வந்து என்னைப் பார்த்துக் கொண்டிருந்தாலே போதும். நான்தான் ஏகாங்கி என்று சொன்னேனே? நீங்கள் என்னுடன் சிநேகமாயிருந்தால் அதுவே எனக்குப் பெரிய உதவி!'' என்றான் மாடத்தேவன்.

கிழவனும் மகளும் அன்றைக்கே மாடத்தேவனுடைய தோட்டத்துக்குப் போனார்கள். அதில் நாலில் ஒரு பங்கு வெள்ளாமை தனக்கு என்று ஏற்பட்டதிலிருந்து கிழவனுக்குப் பொறாமையெல்லாம் போய்விட்டது. தோட்டம் நன்றாயிருப்பதைப் பார்த்துப் பார்த்து மகிழ்ந்தான். தோட்டத்தை இன்னும் நல்ல செழிப்பாகச் செய்வதற்கு யோசனைகளும் சொன்னான்.

''நீ என்னை வேலை செய்யக் கூடாது என்று சொன்னாலும் நான் கேட்க மாட்டேன். அப்படி என்னை இன்னும் கைகாலை முடக்கிப் போட்டுவிடவில்லை. தண்ணீர் பாய்ச்சுகிறது, களை பிடுங்குகிறது எல்லாம் செய்வேன். வேலம்மாளுக்குத்தான் என்ன? கொஞ்சம் பழகிவிட்டால் எல்லா வேலைகளையும் செய்வாள். என்னுடைய குலத்தில் பெண் பிள்ளைகள் வெளியேறி வேலை செய்வது வழக்கமில்லைதான். ஆனால் அப்படியெல்லாம் பார்த்தால் சரிப்படுமா? காலம் ரொம்ப மாறிவிட்டது. ஆண்களாகட்டும், பெண்களாகட்டும், பிழைக்க வேண்டும் அல்லவா? கைப்பாடு படுவதில் கேவலம் ஒன்றும் இல்லை.....!''

மாடத்தேவன் இப்போது குறுக்கிட்டு, ''மாமா! உங்கள் மகள் தோட்ட வேலை செய்ய வேண்டிய அவசியமே இல்லை. நான் இரண்டு வேளையும் கையினால் பொங்கித் தின்ன வேண்டியிருக்கிறது. அந்த வேலையை மிச்சம் செய்தாலே எவ்வளவோ எனக்கு உதவியாயிருக்கும்!'' என்று சொன்னான்.

கிழவனுடைய மனம் பூரித்தது. அநேகம் தடவை இந்த மாதிரி கருப்பையா சேர்வை எண்ணமிட்டதுண்டு: வேலம்மாளை இந்தப் பையனுக்குக் கட்டிக் கொடுத்து விட்டால், எல்லாக் கவலையும் தீர்ந்து விடும். வேலம்மாளை வெளியூருக்கு அனுப்ப வேண்டியதில்லை. தான் சாகும் வரையில் அவளோடேயே இருந்து விடலாம். மாடத்தேவனின் வெள்ளாமையில் நாலில் ஒரு பங்குக்குப் பதில் நிலம் முழுவதுமே தனக்கு உரிமையாகப் போய்விடும்! அப்புறம்தான் வைத்ததுதானே சட்டம்? — இம்மாதிரி எண்ணினான் அந்தப் பேராசைக்காரக் கிழவன். ஆனால் வெளியில் கொஞ்சம் பிகுவாகவே பேசினான்.

''அதெல்லாம் அவ்வளவு சீக்கிரமாய் முடிவு செய்யக் கூடிய காரியமா, தம்பி! அது விஷயத்தில் வேலம்மாளின் இஷ்டந்தான் முக்கியம். அவள் இஷ்டத்துக்கு விரோதமாக நான் எதுவும் சொல்ல மாட்டேன்'' என்றான்.

வேலம்மாள் அவர்களுடைய பேச்சின் வெளிப்படையான பொருளை மட்டும் எடுத்துக் கொண்டு, ''இது என்ன அப்பா, பிரமாதம்? இரண்டு பேருக்குச் சமைப்பதற்குப் பதில் மூன்று பேருக்குச் சமைப்பதில் என்ன கஷ்டம்? இவர் வேணுமானால் தினம் நம் வீட்டுக்கு வந்து உன்னோடு சாப்பிட்டுமே? இவருக்கும் சேர்த்துச் சமைப்பதில் எனக்கு ஒரு சிரமமும் இல்லை!'' என்றாள்.

''உனக்குக் கஷ்டம் இல்லையென்றால் எனக்கு என்ன ஆட்சேபணை?'' என்றான் கிழவன் கருப்பையா சேர்வை.

2

பிறகு சில தினங்கள் அந்த மூன்று பேருடைய வாழ்க்கையும் மிக உற்சாகமாக நடந்து வந்தது. வேலம்மாளை எத்தனை நேரம், எத்தெந்த விதமாகப் பார்த்தாலும் மாடத்தேவனுடைய கண்களின் தாகம் தணிவதில்லை. வேலம்மாளும் அப்படியேதான். அவளுடைய கண்களுக்கு வானமும் பூமியும் புதிய புதிய வர்ணங்களைப் பூசிக் கொண்டு புதிய புதிய அழகுகளுடன் விளங்கின. அவள் காற்றிலே மிதந்தாள்; வானவெளியில் பறந்தாள்; நிலாக் கதிர்களை அருந்தி, நட்சத்திரங்களுடன் உறவாடினாள். இடிந்த பாழுங்கோட்டை, மன்னர்கள் வசிக்கும் மணிமாட அரண்மனையாயிற்று. மலைச்சுனை பொற்றாமரைக் குளமாகத் திகழ்ந்தது. அதன் கரையிலுள்ள வெள்வேல மரம் கற்பக விருட்சமாக மாறிவிட்டது. இந்திரனும் சந்திரனும் அவளுடைய அடிபணிந்து குற்றேவல் செய்தார்கள். ரதியும் மன்மதனும் அவளுக்கு ஆடை புனைந்து அலங்காரங்கள் செய்து விட்டார்கள். காட்டு மல்லிகைப்பூ தேவலோகத்து மந்தார புஷ்பம் ஆயிற்று. கேழ்வரகுக் கூழ் தேவாமுதமாக ருசித்தது.

இப்படி நாட்கள் ஆனந்தமயமாகப் போய்க் கொண்டிருக்கையில் அவர்களுடைய வாழ்க்கையில் ஒரு சங்கடமான சம்பவம் நிகழ்ந்து விட்டது. ஒருநாள் கும்பினிக்

காரர்களின் படை அந்த வழியே போயிற்று. படையின் முன்னணியில் குதிரைமேல் ஏறி ஒரு வெள்ளைக்கார மேஜர் வந்தான். மாடத்தேவனுடைய வெள்ளரிக்காய்த்தோட்டத்தின் மீது அவனுடைய கொடிய ஆசைப் பார்வை விழுந்தது. அச் சமயம் தோட்டத்தில் வேலை செய்து கொண்டிருந்த மாடத்தேவனைக் கையால் சமிக்ஞை செய்து, ''கம் ஹியர்; மேன், கம் ஹியர்!'' என்று அழைத்தான். மாடத் தேவன் அதன் கருத்தைத் தெரிந்து கொண்டு மேஜர் துரையின் பக்கத்தில் வந்தான்.

''வெள்ளரிக்காய் இருக்கிறதா, மேன்? காஸுக்கு எத்தனை?'' என்று கேட்டான்.

''வெள்ளரிக்காய் இல்லை, துரையே!'' என்றான் மாடத்தேவன்.

மேஜர் எட்டிப் பார்த்து, ''இருக்கிறதே, மேன்! ஏன் பொய் சொல்லுகிறாய்?'' என்றான்.

''நிஜமாக இல்லை, எஜமான்! எல்லாம் பிஞ்சுகள். முற்றுவதற்கு ஒரு வாரம் பிடிக்கும்!''

''பிஞ்சாய் இருந்தால் மெத்த நல்லது, மேன்! காயை விடப் பிஞ்சு 'ஸ்வீட்'டாயிருக்கும்! பத்து டஸன் பறித்துக் கொண்டு வா! ஜல்தி!''

''பிஞ்சைப் பறிக்கக் கூடாது, எஜமான்! பறிப்பது பாவம்! செய்த வேலையெல்லாம் வீண் போனதாகும்.''

''யூ டாம்! நான் ஆர்டர் போடுகிறேன். நீ மாட்டேன் என்றா சொல்கிறாய்.... ஜமேதார்! கம் ஹியர்!''

ஜமேதார் மேஜர் துரையின் அருகில் வந்தான். அவனிடம் மேஜர் ஏதோ சொன்னான். உடனே ஜமேதார் பதினைந்து சிப்பாய்களை அழைத்துக் கொண்டு வெள்ளரிக்காய்த் தோட்டத்தில் புகுந்தான். பூப்பிஞ்சு உள்பட எல்லா வெள்ளரிக்காய்களையும் அவர்கள் பறித்தார்கள். அதோடு கூட வெள்ளரிப் பாத்திகளையும் கொடிகளையும் கன்னா பின்னாவென்று மிதித்துத் துகைத்தார்கள். அவர்களைத் தடுக்கலாமா என்று முதலில் மாடத் தேவன் நினைத்தான். அதில் பயன் ஒன்றுமில்லையென்று பிறகு நிதானித்துக் கொண்டான். அவர்களுடைய அட்டூழியங்களைப் பார்த்து வயிறெரிந்து நின்றான்.

தோட்டத்தைத் நுவம்ஸம் செய்து விட்டுச் சிப்பாய்கள் வெளியேறிய போது மாடத்தேவன், மேஜர் துரையின் அருகில் சென்று, ''எஜமானே! இது தர்மமா? இந்த அநியாயம் கடவுளுக்குப் பொறுக்குமா?'' என்றான்.

''டாம் யுவர் கடவுள், மேன்! நீ இந்த வெள்ளரித் தோட்டம் போட்டிருக்கிறாயே, இதற்காகக் கும்பினிக்கு வரி கொடுத்திருக்கிறாயா?''

''வரியா? வரி யாரும் என்னைக் கேட்கவும் இல்லை; நான் கொடுக்கவும் இல்லை.''

''கேட்கவில்லையென்பது பொய் சால்ஜாப்பு. போனால் போகட்டும். நாங்கள் இப்போது பறித்துக் கொண்ட வெள்ளரிக்காயின் விலையை நீ கொடுக்க வேண்டிய வரிக்காக வரவு வைத்துக் கொள்கிறேன், தெரிந்ததா?''

இவ்விதம் சொல்லிவிட்டு மேஜர் துரை சிரித்தான். மற்றும் பல சிப்பாய்களும் சிரித்தார்கள். சிரித்துக் கொண்டே மேலே நகர்ந்தார்கள்.

இடிந்த கோட்டைக்கு அருகில் வந்ததும் மேஜர், ''இந்தக் கோட்டையை ஏன் இன்னும் தரைமட்டமாக்கவில்லை? பீரங்கியை இதன்மேல் திருப்பலாமா?'' என்று கேட்டான். பக்கத்தில் வந்த ஜமேதார், ''இந்தக் கோட்டையில் ஒன்றுமே இல்லை. பாழும் குட்டிச் சுவர்கள்தான் இருக்கின்றன. பீரங்கி மருந்து வீணாவதுதான் லாபம்!'' என்றான்.

''இதில் யாரும் குடியில்லையா?''

''ஒரு கிழவனும் அவன் மகளும் இருக்கிறார்கள். அவனிடம் வேட்டையாடுவதற்கு ஒரு பழைய துப்பாக்கியும், ஈட்டியும் வாளும் இருந்தன. அவற்றையெல்லாம் முன்னமே பிடுங்கிக் கொண்டு விட்டோம்.''

''அந்த ஓல்டு மேன் அதோ நின்று பார்க்கிறானே, அவன்தானே! அவனுடைய மகள் எப்படி இருப்பாள்? அழகாயிருப்பாளா?'' என்று மேஜர் கேட்டான்.

''இருப்பாள்; அவுராங் அவுடாங்கைப் போல் அழகாயிருப்பாள்!'' என்று ஜமேதார் சொன்னதும் துரை கடகடவென்று சிரித்தான். சில நிமிஷத்துக்கெல்லாம் மேஜரும் ஜமேதாரும் மற்றச் சிப்பாய்களும் அர்ச்சுனன் குன்றைத் தாண்டி அப்பால் சென்று மறைந்தார்கள்.

அன்றெல்லாம் கருப்பையா சேர்வை, வேலம்மாள், மாடத்தேவன் ஆகிய மூவரும் கும்பினிக்காரரின் அக்கிரமங்களைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தார்கள்.

''நானும் இரண்டு வருஷம் கும்பினியாரிடம் வேலை பார்த்தேன். அவர்கள் செய்யும் அக்கிரமம் சகியாமல்தான் திரும்பி வந்து விட்டேன்'' என்றான் மாடத்தேவன்.

''நீ வந்தது நல்லதாய்ப் போயிற்று. இப்படிப்பட்ட பாவிகளிடம் யாராவது சேவகம் செய்வார்களா?''

''இவர்களுடைய அதிக்கிரமத்தை ஒழிக்கும் காலம் வந்து விட்டது. நேற்றுத்தான் நான் ஒரு செய்தி கேள்விப்பட்டேன். ஆயிரக்கணக்கான மக்கள் திரண்டு சென்று பாளையங்கோட்டைச் சிறையை உடைத்து விட்டு ஊமைத் துரையையும் அவருடன் இருந்த வீராதி வீரர்களையும் விடுதலை செய்து விட்டார்களாம். ஊமைத்துரை ஒரு பெரும் படை திரட்டி வருகிறாராம். கும்பினிக்காரர் இடித்துத் தரை மட்டமாக்கிய பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையை ஒரே வாரத்தில் மறுபடி கட்டி விட்டார்களாம். நீங்கள் இரண்டு பேரும் உத்தரவு கொடுத்தால் நான் கூடப் போய் ஊமைத்துரையின்

படையில் சேரலாம் என்று பார்க்கிறேன்'' என்றான் அந்த வாலிபன்.

இதைக் கேட்ட கிழவன் கருப்பையா சேர்வை பயந்து போனான். ''அதெல்லாம் வேண்டாம், தம்பி! ஊமைத் துரையின் காரியம் எப்படி நடக்கிறது என்று பார்த்துக் கொள்ளலாம். இந்த வெள்ளைக்காரர்கள் இருக்கிறார்களே, இவர்கள் பாதாள உலகத்திலிருந்து வந்த ராட்சதர்கள். இவர்களை ஒழித்துக் கட்டுவதற்குச் சூரபத்மனைக் கொன்ற முருகன் மறுபடி அவதாரம் எடுத்தாக வேண்டும். எல்லாவற்றுக்கும் கொஞ்ச நாள் பொறுத்திரு. மேலே என்ன நடக்கிறதென்று பார்த்துக் கொண்டு தீர்மானிக்கலாம்.''

வேலம்மாள் அன்று மாடத்தேவனைத் தனியாகச் சந்தித்த போது, ''அப்பா சொன்னதை நான் ஒப்புக் கொள்ளவில்லை. அன்னிய வெள்ளைக்காரக் கும்பினியை எதிர்த்துச் சண்டை போட வேண்டியதுதான். ஆனால் ஒரு விஷயந்தான் கவலையாயிருக்கிறது. என் தகப்பனார் சபல புத்தியுள்ளவர். நீ வெளியில் போனதும் யாராவது ஒருவனுடைய கழுத்தில் என்னைப் பலவந்தமாகப் பிடித்துக் கட்டி விட்டால் என்ன செய்கிறதென்று பயமாயிருக்கிறது. நமக்குள் ஒரு கலியாண பந்தம் ஏற்பட்ட பிறகு நீ போனால் பரவாயில்லை'' என்றாள். ''நீ சொல்வது உண்மைதான். தை மாதம் பிறந்ததும் ஒரு தேதி பார்த்துக் கலியாணத்தை முடித்து விடுவோம். பிறகு அப்போதுள்ள நிலைமைக்குத் தகுந்தாற் போல் யோசித்துச் செய்து கொள்ளலாம்!'' என்றான் மாடத்தேவன்.

அன்னியர்களாகிய கும்பினிக்காரர்களை எதிர்த்துப் போராட வேண்டியது அவசியந்தான்; ஆனாலும் வேலம்மாளைப் பிரிந்து செல்வது இலேசான காரியம் அல்ல. வேலம்மாள் இன்னொருவனைக் கலியாணம் செய்து கொள்வது என்பதை நினைத்த போது மாடத் தேவனுடைய உடம்பெல்லாம் பற்றி எரிந்தது. வெள்ளரிக்காய், பூவும் பிஞ்சுமாகப் பறிபோன போது கூட அவனுக்கு அவ்வளவு ஆத்திரம் உண்டாகவில்லை. எனவே, ஊமைத் துரையின் படையில் சேரும் யோசனையைத் தள்ளிப் போட்டான்.

3

சில நாளைக்கெல்லாம் முன்னைக் காட்டிலும் மிக்க துயரகரமான செய்தி வந்தது. ஊமைத்துரையின் படைக்கும் கும்பினியின் படைக்கும் கோரமான யுத்தம் நடந்தது என்றும், அதில் கும்பினிப்படை வெற்றியடைந்தது என்றும், பாஞ்சாலங்குறிச்சிப் படை கூண்டோடு கைலாசமாகப் போர்க்களத்தில் மாண்டு மடிந்து விட்டதென்றும் ஜனங்கள் சேரும் இடங்களில் எல்லாம் பேசிக் கொண்டார்கள். இதைக் கேட்ட வேலம்மாள் கண்ணீர் விட்டு அழுதாள். மாடத்தேவன் கல்லாய்ச் சமைந்து உட்கார்ந்திருந்தான். கருப்பையா சேர்வை அவர்களுக்கு ஆறுதல் சொன்னான். ஆயினும் அதிகமாக அவன் ஆறுதல் சொல்ல வேண்டிய அவசியம் ஏற்படவில்லை. யௌவனப் பிராயத்தில் எல்லா விதத் துயரங்களும் சீக்கிரத்தில் மறந்து போய் விடுகின்றன. அதிலும் புதிது புதிதாகக் காதலில் மூழ்கியிருப்பவர்களைப் பற்றிக் கேட்க வேண்டுமா? மாடத் தேவனும் வேலம்மாளும் தங்களுடைய வருங்கால வாழ்க்கையைப் பற்றிய கனவுகளில் வெளி உலகத்து நிகழ்ச்சிகளை மறந்து விட்டார்கள்.

கலியாணத்துக்குத் தேதி வைப்பது பற்றி மாடத்தேவன் கருப்பையா சேர்வையிடம் இரண்டு மூன்று தடவை பிரஸ்தாபித்தான். கிழவனும், ''ஆகட்டும்; குலதெய்வத்துக்குப் பூசை போட்டு விட்டுத் தேதி வைத்து விடுவோம்'' என்று சொன்னான்.

இந்த நிலையில் ஒரு நாள் மாடத் தேவனுடைய ஆகாசக் கோட்டைகள் எல்லாம், கும்பினியாரின் பீரங்கிகளினால் தகர்க்கப்பட்ட பாளையக்காரர் கோட்டைகளைப் போல், தகர்ந்து விழுந்து மண்ணோடு மண்ணாய்ப் போகும்படி நேர்ந்தது.

ஒரு நாள் அவன் சிவகங்கைக்குப் போயிருந்தான். அங்கே தனக்கு வேண்டிய சில சாமான்களை வாங்கிக் கொண்டான். பிறகு நகைக் கடைக்குப் போனான். வேலம்மாளுக்குக் கலியாணத்தின் போது போடுவதற்காகக் கைக்குத் தங்கக் காப்பு, கழுத்துக்குத் தங்கக் கொடி — இவை பற்றி விசாரித்தான். எதை வாங்கலாம் என்று நிச்சயிக்க அவனால் முடியவில்லை. வேலம்மாளையே ஒரு நாள் அழைத்து வந்து வாங்க வேண்டும் என்று தீர்மானித்துக் கொண்டு திரும்பி வந்தான். இதைப் பற்றிச் சொல்லலாமென்று உற்சாகத்துடன் அவன் கோட்டைக்கு வந்த போது, அங்கே கிழவனையும் அவனுடைய மகளையும் தவிர மூன்றாவது ஆள் ஒருவன் இருப்பதைக் கண்டான். அந்தப் புது மனிதன் ஒரு தூணில் சாய்ந்திருக்க, வேலம்மாள் ஒரு அடுக்குப் பானையில் வெந்நீர் வைத்துக் கொண்டு அவன் காலில் விட்டுக் கழுவிக் கொண்டிருந்தாள். கிழவன் பக்கத்தில் உட்கார்ந்து ஏதோ பேசிக் கொண்டிருந்தான்.

இந்தக் காட்சியை வாசற்படியில் நின்றபடியே சிறிது நேரம் மாடத்தேவன் பார்த்தான். அவன் வந்து நின்றதை அந்த மூவரில் ஒருவரும் கவனிக்கவில்லை. சப்தப்படுத்தாமல் திரும்பிப் போய் விட்டான்.

வெள்ளரிக்காய்த்தோட்டத்தில் அன்று மாடத்தேவனுக்கு வேலை ஒன்றும் ஓடவில்லை. உடம்பெல்லாம் வெலவெலத்திருந்தது. அடிக்கடி இடிந்த கோட்டையையும் மலைமேல் இருக்கும் சுனையையும் பார்த்துக் கொண்டிருந்தான். வேலம்மாள் கை

யில் குடத்துடன் கனைக்குப் போவது ஒரு தடவை தெரிந்தது. உடனே குன்றின் மீது பாய்ந்தேறிச் சென்றான். அவன் குன்றின் உச்சியை அடைந்த போது வேலம்மாள் இடுப்பில் தண்ணீர்க் குடத்துடன் புறப் பட்டுக் கொண்டிருந்தாள். மாடத்தேவன் அவள் எதிரில் போய் வழி மறிப்பது போல் நின்று முறைத்துப் பார்த்தான்.

"என்னங்கறேன்? ஏன் இப்படி வித்தி யாசமாய்ப் பார்க்கிறாய்?" என்று வேலம் மாள் கேட்டாள்.

"ஆமாம்; என்னைப் பார்த்தால் இனி மேல் உனக்கு வித்தியாசமாகத்தானிருக் கும்!" என்றான் மாடத்தேவன்.

"நீ சொல்லுகிறது ஒன்றும் எனக்குப் புரியவில்லை" என்றாள் வேலம்மாள்.

"அது எப்படிப் புரியும்?" என்றான் மாடத் தேவன்.

"சரி, புரியாது போனால் போகட்டும். வழியை விடு! எனக்கு வேலை இருக் கிறது" என்றாள் வேலம்மாள்.

"தாராளமாய்ப் போ! நானா வேண்டாம் என்று வழி மறிக்கிறேன்?" என்று கூறி மாடத் தேவன் வழியை விட்டு விலகிக் கொண் டான்.

வேலம்மாள் மேலே சென்றவள் இரண் டொரு தடவை தயங்கித் தயங்கி நின்றாள். மாடத்தேவன் அவளைப் பார்க்காமல் எங்கேயோ பார்த்துக் கொண்டு நின்றான்.

வேலம்மாள் ஆத்திரத்துடன் முணு முணுத்துக் கொண்டு விடுவிடு என்று நடந்து போய்விட்டாள்.

அன்று மத்தியானம் மாடத்தேவன் வழக் கம் போல் அவர்கள் வீட்டுக்குச் சாப்பிடப் போகவில்லை.

தோட்டத்தில் வேலை செய்யவும் அவ னால் முடியவில்லை. அங்குமிங்கும் அகா ரணமாய் அலைகிறதும், தனக்குத் தானே பேசிக் கொள்வதுமாயிருந்தான்.

சாயங்காலம் பொழுது சாய்கிற சமயத் தில் வேலம்மாள் ஒரு பாத்திரத்தில் சோறு எடுத்துக் கொண்டு தோட்டத்துக்கு வந்தாள்.

அவள் வருவது தெரிந்தும், மாடத்தேவன் அவளைப் பார்க்காமல் வேறு பக்கம் திரும்பிச் சுறுசுறுப்பாகச் செடிகளுக்குக் களை கொத்திக் கொண்டிருந்தான்.

வேலம்மாள் அவன் எதிராக வந்து நின்று, "மத்தியானம் ஏன் சாப்பிட வரவில்லை!" என்று கேட்டாள்.

"இஷ்டமில்லை, வரவில்லை! நீ எதற்கு இங்கே வந்தாய்?" என்றான் மாடத்தேவன்.

"உனக்குச் சோறு கொண்டு வந்தேன். அப்பா கொண்டு போய்க் கொடுத்துவிட்டு வரச் சொன்னார்."

"எனக்குச் சோறு வேண்டாம். உங்கள் வீட்டுக்குப் புது விருந்தாளி வந்திருக்கி றானே, அவனுக்கே எல்லாச் சோற்றையும் படையுங்கள்.

வேலம்மாள் சற்று திகைத்தவள் போல் நின்றுவிட்டு, "விருந்தாளி வந்திருப்பது உனக்குத் தெரியுமா?" என்றாள்.

"ஏன் தெரியாது? உங்களுக்குத்தான் — அப்பனுக்கும் மகளுக்கும், புது விருந்தாளி வந்திருக்கும் மவுசில் கண் தெரியாமல் போய் விட்டது. எனக்குக் கூடக் கண் தெரிய வில்லை என்று நினைத்தாயா?"

"ஓகோ! உனக்குக் கண்கூடத் தெரி யுமா? குருடு என்றல்லவா நினைத்துக் கொண்டிருந்தேன்?"

"நான் குருடுதான். இல்லாவிட்டால் கழு தையைக் குதிரை என்று எண்ணியிருப் பேனா? மூதேவியை லட்சுமி என்று கொண் டாடியிருப்பேனா?"

"என்ன சொன்னாய்? யாரைக் கழுதை என்றும் மூதேவி என்றும் சொன்னாய்?"

"உன்னைத்தான்! கருப்பையா சேர்வை யின் மகள் வேலம்மாளைத்தான்!"

"உனக்குப் பைத்தியந்தான் பிடித்திருக் கிறது. சோற்றை இதோ வைத்துவிட்டுப் போகிறேன். வேண்டுமென்றால் சாப்பிடு: இல்லாவிட்டால் பட்டினி கிடந்து செத்துப் போ!" என்று சொல்லிவிட்டு வேலம்மாள் சோற்றுப் பாத்திரத்தைக் கீழே வைத்தாள்.

"உன் சோறும் வேண்டாம், ஒன்றும் வேண்டாம்! இங்கே வைக்காதே! எடுத்துக் கொண்டு போய், எந்த நாய்க்காவது போடு!" என்று சொல்லிவிட்டு மாடத் தேவன் சோற்றுப் பாத்திரத்தைக் காலால் உதைத்தான். பாத்திரம் உருண்டு, சோறு சிதறி விழுந்தது.

வேலம்மாள், "இனி இந்தப் பக்கம் நான் வருகிறேனா, பார்!" என்று சொல்லிவிட்டு, விம்மிக் கொண்டே அங்கிருந்து போனாள்.

4

அன்றிரவே மாடத்தேவனுடைய தோட்டக் குடிசையில் அடுப்புப் புகை கிளம்ப ஆரம்பித்து விட்டது. பழையபடி சுயம்பாகம் செய்து சாப்பிடத் தொடங்கி னான்.

மறுநாள் கருப்பையா சேர்வை மாடத் தேவனைத் தேடிக் கொண்டு வந்தான்.

"தம்பி! நேற்றெல்லாம் உன்னைக் காணோமே!? எங்கே போயிருந்தாய்?" என்று கேட்டான்.

"நான் எங்கும் போகவில்லை. உங்களுக் குத்தான் கண் தெரியவில்லை. புது விருந் தாளி வந்திருக்கிறான் அல்லவா? அந்த மவு சில் முழுகியிருந்தீர்கள்!"

"அது உண்மைதான். வீட்டுக்குப் புது விருந்தாளி வந்தால் உபசரிக்க வேண்டியது நியாயந்தானே! அவனோ உடம்பெல்லாம் புண்ணுடன் வந்திருக்கிறான். அவன் யார் என்று தெரியுமா? வேலம்மாள் சொன் னாளா?"

"அவனோடு இங்கே யார் பேசினார் கள்?"

"நேற்றுச் சாயங்காலம் உனக்குச் சோறு கொண்டு வந்தாளே? சொல்லவில் லையா?"

"கொண்டு வந்தாள்; நான் சோறு வேண்



டாம் என்று சொல்லிவிட்டேன்......''

''நான்தான் அவளை இன்னும் ஐந்தாறு நாளைக்கு உனக்குச் சோறு கொண்டு வந்து இங்கேயே கொடுத்து விடும்படி சொன் னேன். புது ஆள் வந்திருக்கிறானே, அவன் என் அக்காவின் மகன். உன்னைப் பார்த் தால், நீ யார், இன்னார் என்று கேட்பான். எதற்காக வீணாய் இந்த வம்பு?''

''இத்தனை நாளும் இல்லாமல் இப்போது அக்கா மகன் திடீரென்று வந்து குதித்து விட் டானா?''

''அதில் என்ன அதிசயம்? இந்தக் காலத் தில் அங்கங்கே படை திரட்டுகிறார்கள்; படை யைக் கலைக்கிறார்கள். இன்றைக்கு ஒரு பாளையக்காரன் ராஜாங்கம் செலுத்து கிறான். நாளைக்கு அவன் புளிய மரத்தில் தொங்குகிறான். நீ கூட இரண்டு வருஷங் களுக்கு முன்னால் திடீரென்றுதானே இங்கே வந்து குதித்தாய்......?''

''அதைப் பற்றி இப்போது என்ன? எனக்கு வேலை இருக்கிறது. வீண் பேச்சுப் பேச நேரம் இல்லை. நீங்கள் போய் உங்கள் விருந் தாளியைப் பாருங்கள்.''

''அவ்வளவு பதற்றப்படாதே, தம்பி! வந்திருப்பவன் நல்ல சொத்துக்காரன். அதிக நாள் உயிரோடிருக்க மாட்டான். இருக்கிற வரையில் அவனைக் கொஞ்சம் கவனித்துக் கொண்டால், அவனுடைய சொத்து நமக்கு வரும். அப்புறம் உனக்கும் வேலம்மாளுக்கும் ஒருவிதமான கவலையு மில்லை! ஆயுள் முழுவதும் உட்கார்ந்து சாப்பிடலாம்.''

''அப்படிப்பட்ட சொத்து எனக்கு வேண் டாம். நீங்களும் உங்கள் மகளுமே வைத்துக் கொள்ளுங்கள். எனக்குக் கைப்பாடு பட்டுப் பிழைக்கத் தெரியும்!'' என்று சொல்லி மாடத்தேவன் விர்ரென்று நடந்து தோட்ட வேலையைப் பார்க்கப் போனான்.

கிழவன், ''இந்தப் பிள்ளைக்கு வந்த கிறுக் கைப் பார்!'' என்று சொல்லிக் கொண்டே வெளியேறினான்.

பிறகு நாலைந்து நாட்கள் விசேஷம் ஒன்றுமில்லாமல் கழிந்தன. மாடத்தேவ னுடைய உள்ளத்தில் மட்டும் எரிமலை ஜுவாலை விட்டுக் கொண்டிருந்தது. வெளியே தீப்பிழம்பைக் கக்குவதற்குச் சந் தர்ப்பத்தை எதிர்நோக்கிக் கொண்டிருந்தது. அந்தச் சந்தர்ப்பமும் வந்தது.

ஒருநாள் மாலை தற்செயலாக மாடத் தேவன் மலை உச்சியில் சுனை இருக்கும் இடத்தை நோக்கினான். அந்தச் சுனைக் கரையில் தானும் வேலம்மாளும் எத்த னையோ நாள் மாலை நேரங்களில் உல்லாச மாகப் பொழுது போக்கியதெல்லாம் நினைவு வந்தது. இருவருமாகச் சேர்ந்து கட்டிய ஆகாசக் கோட்டைகளை நினைத்துக் கொண்டு நெடிய பெருமூச்சு விட்டான். அதைப் பற்றி நினைத்தபோதெல்லாம் அவ னுடைய நெஞ்சை வலித்தது. அந்தச் சுனை யருகில் போனால் ஒருவேளை தன் மனத் தின் தாபம் தீருமோ என்று எண்ணி ஆர்வத்து டன் நோக்கினான். அப்போது மலைக்குப் பின்னால் மறைந்து கொண்டிருந்த அஸ்தமன சூரியனின் மஞ்சள் வெயில் பட்டு ஒரு மனித னின் உருவம் கரிய நெடிய சிலை போல அங்கே நின்றது. சற்று நேரத்துக்கெல்லாம் ஒரு பெண் உருவம் வந்து அந்த நெடிதுயர்ந்த மனிதனின் பக்கத்தில் நின்றது. இருவரும் சுனைக் கரையில் இருந்த வெள்வேல மரத் தடியில் உட்கார்ந்ததும் தெரிந்தது. இதைப் பார்த்ததும் மாடத்தேவனுடைய உள்ளம் குமுறியது. அடக்கி வைத்திருந்த கோபமெல் லாம் கொதித்து வெளிவந்தது. மிக்க ஆக் ரோஷத்துடன் குன்றின்மீது பாய்ந்து ஏறினான். அவன் அங்கே போய்ச் சேர்ந்த போது அந்தப் பெண் உருவத்தைக் காணோம். இடிந்த கோட்டைக்குள் வேலம் மாளின் பணிவிடைக்கு உரியவனாயிருந்த மனிதன் மட்டும் அந்த வெள்வேல மரத்தில் சாய்ந்து கொண்டு உட்கார்ந்திருந்தான். மேற்குத்திசையை நோக்கி அவன் ஆவலோடு பார்த்துக் கொண்டிருந்த படியால் மாடத் தேவன் வந்ததையே அவன் கவனிக்க வில்லை.

மாடத்தேவன் குன்றில் ஏறத் தொடங்கிய போது தோட்டத்துக்கு வேலி எடுத்துக் கொண்டிருந்தான். ஆகையால் அவனுடைய கையில் கொஞ்சம் நார்க் கயிறு இருந்தது. மடியில் செருகியிருந்த கத்தியும் இருந்தது. தனியாக உட்கார்ந்திருந்த ஆளைக் கண்ட தும் அவனுடைய மூளையில் சட்டென்று ஒரு யோசனை உதயமாயிற்று. பின்புற மாகச் சென்றான். கயிற்றை வீசி எறிந்து அந்த மனிதனைச் சுற்றி மரத்தோடு சேர்த்துக் கட்டினான். கட்டி முடிச்சுப் போட்டுவிட்டு எதிர்ப் பக்கத்தில் வந்தான், மடியில் வைத் திருந்த கத்தியை எடுத்துப் பிடித்துக் கொண் டான். ''அடபாவி! சண்டாளா! நீ யார்,

எதற்காக இங்கே வந்தாய் என்று சொல்லி விடு. எனக்கும் வேலம்மாளுக்கும் குறுக்கே எப்படி நீ வரலாம்? அவளுக்கும் எனக்கும் கல்யாணம் நடப்பது ஒன்றுதான் பாக்கியா யிருந்தது. அப்படி இரண்டு உடலும் ஒருயிரு மாயிருந்தோம். எங்கள் வாழ்க்கையைப் பாழாக்க நீ வந்தாய். எதற்காக வந்தாய்? உன்னுடைய மனத்தில் என்ன எண்ணியிருக் கிறாய்? உண்மையைச் சொல்லிவிடு. திரும் பவும் அவளைப் பார்க்காமல் இப்படியே ஓடிப் போவதாகச் சத்தியம் செய்து கொடு; சத்தியம் செய்து கொடுத்தால் உன்னை மன் னித்து விட்டுவிடுகிறேன். இல்லாவிட்டால் இந்தக் கத்தியால் குத்திக் கொன்று விடு வேன். இது நிச்சயம். நான் சொன்னபடி சத்தியம் செய்யப் போகிறாயா, இல் லையா?'' என்று சரமாரியாகப் பொழிந் தான்.

அந்தக் கட்டுண்ட மனிதனோ இத்தனைக் கும் அதிசயம் ததும்பிய கண்களால் மாடத் தேவனை உற்றுப் பார்த்துக் கொண்டிருந் தானே தவிர, ஒரு வார்த்தையும் பதில் சொல்லவில்லை. ஏதோ சொல்லப் போகி றவன்போல் அவனுடைய உதடுகள் ஒரு தடவை அசைந்தன. ஆனால் வார்த்தை ஒன் றும் வெளிவரவில்லை.

"அடே! ஏன் ஆடு திருடின கள்ளனைப் போல் விழித்துக் கொண்டிருக்கிறாய்? பதில் சொல்வதற்கு என்ன? வாயில் கொழுக்கட் டையா அடைத்திருக்கிறது? உன்னை இப் படியே கட்டிப் போட்டுக் கொலை செய் வேன் என்று நினைக்காதே! நீ என்னோடு கத்தி எடுத்துச் சண்டை செய்வதாயிருந் தால் சொல்லு! அவிழ்த்து விட்டுவிடுகிறேன். ஆனால் தப்பித்து ஓடிவிடலாம் என்று மட்டும் நினைக்காதே! கோட்டையில் ஒளிந்து கொள்ளலாம் என்று மனப்பால் குடிக்காதே! அந்தப் பாழுங்கோட்டையின் மர்ம வழிகள், மூலை முடுக்குகள் எல்லாம் எனக்குத் தெரியும். நீ எங்கே ஒளிந்து கொண் டாலும் விடமாட்டேன்!'' என்று மாடத் தேவன் கர்ஜித்தான்.

அதற்கும் கட்டுண்ட மனிதன் சும்மா இருந் தான்.

மாடத்தேவனுக்கு வந்த எரிச்சலைச் சொல்ல முடியாது. "நான் இவ்வளவு நேர மாகப் பேசிக் கொண்டிருக்கிறேன்; நீ ஏண்டா சும்மாயிருக்கிறாய்? உனக்குப் பேசத் தெரியாதா? நீ ஊமையா?'' என்றான்.

அத்தனை நேரமும் வியப்பு மட்டும் தோன்றிய முகத்தில் இப்போது ஒரு புன் னகை தோன்றிப் பரவியது. அந்தப் புன்னகைமிகவிசித்திரமாயிருந்தது. ஆனால் அதன் பொருள் மாடத்தேவனுக்கு விளங்க வில்லை. எரிச்சல் அதிகமாயிற்று.

"என்னடா சிரிக்கிறாய்? நான் சொல்வ தெல்லாம் உனக்குக் கேலியாயிருக்கிறதா? பரிகாசமா செய்கிறாய்? இதோ பார்! உன்னை ஒரே குத்தாய்க் குத்திவிடுகிறேன். என் ஆசைக் காதலியை என்னிடமிருந்து பறித்தவனுக்கு இதுதான் தண்டனை!'' என்று கத்தியை ஓங்கினான்.

அச்சமயம் கட்டுண்ட மனிதனுடைய பார்வை மாடத்தேவனுக்குப் பின்புறம் சென்றது. அதே கணத்தில் யாரோ வேகமாக ஓடிவரும் காலடிச் சத்தம் கேட்டது.

"அட பாவி! நில்லு! நில்லு! என்ன காரி யம் செய்யப் போகிறாய்?'' என்ற வேலம் மாளின் பதறிய குரல் ஒலியும் கேட்டது.

மாடத்தேவன் திரும்பிப் பார்த்தான். அவ னுடைய உள்ளக் கொதிப்பு இப்போது அனல் ஜுவாலை ஆயிற்று.

"அடி பாதகி! நானா பாவி? கையடித்துக் கொடுத்த சத்தியத்தையெல்லாம் மறந்து எனக்குத் துரோகம் செய்யத் துணிந்த நீ என்னவாம்? முதலில் உன்னைக் கொன்று விட்டு அப்புறம் உன் ஆசை நாயகனைக் கொல்கிறேன்!'' என்று மாடத்தேவன் கத்திக் கொண்டே வேலம்மாளை நோக்கிக் கத்தி யை ஓங்கினான்.

"ஐயோ!'' என்று வேலம்மாள் வீலிட் டாள். அதே சமயத்தில் மாடத்தேவனுக்குப் பின்னால் படபடபடவென்று சத்தம் கேட் டது. அது என்ன சப்தம் என்று திரும்பிப் பார்ப்பதற்குள் அவனுடைய கத்தி பிடித்த கையை இன்னொருவனுடைய கை பிடித்துக் கொண்டது. மறுகணம் மற்றக் கையும் அவ்விதம் கெட்டியாகப் பற்றப்பட்டது. அது சாதாரணப் பிடியா? இரும்புப் பிடி! அவனைப் பிடித்த கைகள் வஜ்ரத்தினா லான கைகளாகவே இருக்க வேண்டும். மாடத்தேவனுடைய உச்சந் தலைமுதல் உள்ளங்கால் வரையில் அந்தப் பிடியின் வேகத்தினால் நரம்புகள் புடைத்துக் கொண்டன; அவனுடைய உடம்பெல்லாம் வெடவெடவென்று நடுங்கிற்று.

மாடத்தேவன் சற்றுத் திரும்பிப் பார்த் தான். மரத்தில் சேர்த்துக் கட்டியிருந்த கயிறு கள் சுக்குச் சுக்காக அறுபட்டிருந்தன. கட்டை அறுத்துக் கொண்ட அம்மனிதனு டைய முகத்தில் முன்போலவே ஓர் அதிசய மான புன்னகை தவழ்ந்தது. அவன் உதடு கள் துடித்தன.

"அட பாவி! அவர் யார் என்று தெரிய வில்லையா? உன் மண்டையில் மூளை இல் லையா? உன் முகத்தில் கண்ணில்லையா?'' என்று வேலம்மாள் அலறினாள்.

உடனே, மாடத்தேவனுடைய மூளையில் ஒரு நரம்பு அசைந்தது. அந்த நரம்பு வான வெளியிலிருந்து ஒரு செய்தியை ஏற்று அவன் மூளையில் நிரப்பிற்று. அவனுடைய உடம்பு முழுவதும் புளகாங்கிதமடைந்து புல்லரித் தது. கோபத்தினால் புடைத்திருந்த நரம்பு கள் தளர்ந்தன. கையில் இருந்த கத்தியும் சரிந்து கீழே விழுந்தது.

உடனே, அந்த இரும்புக் கைகளும் பிடியை விட்டன.

"வேலம்மா! இவர்தான் ஊமைத் துரையா?'' என்று கேட்டான் மாடத்தேவன்.

"அது உனக்கு இத்தனை நேரம் தெரிய வில்லையா? உன் புத்திக் கூர்மையை என்ன வென்று சொல்ல?'' என்றாள் வேலம்மாள்.

"சாமி! துரையே!" என்று மாடத்தேவன் பாறையில் நெடுஞ்சாண்கிடையாக விழுந்து ஊமைத்துரையின் கால்களைக் கெட்டியாகப் பிடித்துக் கொண்டான்.

"தெரியாமல் நான் செய்த குற்றத்தை மன்னிக்க வேண்டும். கும்பிடப் போன தெய்வம் குறுக்கே வந்தது என்று சொல்வார்கள். நான் கும்பிடப் புறப்படுவதற்கு முன்னாலேயே என் தெய்வம் என்னைத் தேடிவந்து விட்டது. துரையே! இந்தச் சண்டாளப் பாவி வேலம்மாள் இருக்கிறாளே, இவளிடம் நான் கொண்ட மோகந்தான் என் கண்களுக்குத் திரை போட்டு மறைத்து விட்டது. இவளாவது முன்னாலேயே எனக்குச் சொல்லக் கூடாதா? சொல்லாமல் துரோகம் செய்து விட்டாளே!" என்றான்.

ஊமைத்துரை மறுபடியும் புன்னகை செய்தான். கொன்னிக் கொன்னி, இந்த வார்த்தைகளைச் சொன்னான்: "த-த-தம்பி! இந்தச் சு-சு-சுருள் வாளைப் பார்! இதை ஒ-ஒ-ஒரு தடவை வீசி... ஏ-ஏ-ஏழு தலைகளை வெட்டியிருக்கிறேன். உன்னுடன் ச-ச-ச-சண்டை போடச் சொல்கிறாயா!" இவ்விதம் ஊமைத்துரை தன் மடியிலிருந்து கீழே விழுந்து கிடந்த சுருள்வாளை எடுத்து ஒரு வீச்சு வீசினான். இருபுறமும் கூருடைய அந்தச் சுருள்வாள் சுமார் பதினாறு அடி தூரம் மின்வெட்டைப் போல் பாய்ந்து திரும்பி வந்து சுருண்டு கொண்டது. அதை அவ்விதம் விசிறிய போது நாகப் பாம்பு சீறுவது போன்ற சீறல் சத்தம் கேட்டது.

மாடத்தேவன் அதைப் பார்த்துவிட்டு, "சாமி! நான் இந்தச் சுருள் வாளுக்குப் பயப்படவில்லை. இதே சுருள்வாள் உங்கள் விரோதியிடம் இருந்தால் என் சிறிய மடக்குக் கத்தியை வைத்துக் கொண்டே ஒரு கை பார்ப்பேன். ஆனால் உங்களுடன் நான் சண்டையிடுவேனா? உங்களை இந்த ஜன்மத்தில் பார்க்கப் போகிறேனா என்று தவம் கிடந்தேன். நீங்கள் போர்க்களத்தில் இறந்து வீர சொர்க்கம் சென்றீர்கள் என்று கேள்விப்பட்டு மனமுடைந்து போயிருந்தேன். இப்போதுதான் எனக்குப் புதிய உயிர் வந்தது. நீங்கள் காலால் இட்ட வேலையைத் தலையால் செய்யக் காத்திருக்கிறேன். உங்கள் காலடியில் என் உடல் பொருள் உயிரை அர்ப்பணம் செய்யத் தயார். எனக்குக் கட்டளையிடுங்கள்!" என்றான்.

ஊமைத்துரையின் கண்ணில் அப்போது கண்ணீர் துளித்தது. இதையெல்லாம் பார்த்துக் கேட்டுக் கொண்டிருந்த வேலம்மாளும் ஆனந்தக் கண்ணீர் விட்டாள். அவர்கள் மூன்று பேருமாகச் சுனைக் கரையிலிருந்து புறப்பட்டு இடிந்த கோட்டைக்குத் திரும்பிப் போனார்கள்.

5

கோட்டைக்குள் ஒரு தனி அறையை மாடத்தேவன் கேட்டு வாங்கிக் கொண்டிருந்தான். அதில் தன்னுடைய தட்டுமுட்டுச் சாமான்களையும் பெட்டி பேழைகளையும் போட்டு வைத்திருப்பதாகக் கருப்பையா சேர்வையிடம் சொல்லியிருந்தான். ஊமைத்துரையை அந்த அறைக்கு அழைத்துப் போய்ப் பூட்டைத் திறந்து காட்டினான். அறைக்குள்ளே சில பெட்டிகளும் சாக்கு மூட்டைகளும் இருந்தன. அவற்றுக்குள்ளெல்லாம் கன்னங்கரிய வெடி மருந்து இருந்தது. பக்கத்தில் சில துப்பாக்கிகளும் ஈட்டிகளும் கத்திகளும் குவித்து வைக்கப்பட்டிருந்தன. "சாமி! இவற்றையெல்லாம் உங்களுக்காகத்தான் சேர்த்து வைத்திருக்கிறேன். உபயோகப்படுத்த மட்டும் வழி சொல்லுங்கள்!" என்றான் மாடத்தேவன்.

பின்னர், ஏழெட்டுத் தினங்கள் மாடத்தேவன் மிகச் சுறுசுறுப்பாயிருந்தான். ஊமைத்துரை சொன்னபடி பல இடங்களுக்கும் போய்ப் பலரைப் பார்த்துச் சங்கேதமாகச் செய்தி சொல்லிவிட்டு வந்தான். கடைசியாக, ஊமைத்துரை மிக முக்கியமான வேலை ஒன்றை அந்த வாலிபனிடம் ஒப்புவித்தான். சிவகங்கைக்கு அவன் சென்று, சிவகங்கைப் பாளையக்காரரின் தம்பியான சின்ன மருது சேர்வை எங்கே இருக்கிறார் என்று விசாரித்துத் தெரிந்து கொள்ள வேண்டியது. சின்னமருதுவைக் கண்டு, ஊமைத்துரை இருக்குமிடத்தைத் தெரிவிக்காமல் அவர் உயிரோடிருக்கிறார் என்று மட்டும் சொல்ல வேண்டியது. மருதுவின் மனத்தை அறிந்து கொண்டு, 'ஊமைத்துரையுடன் சேர்ந்து வெள்ளைப் பூண்டை இந்த நாட்டிலிருந்து அடியோடு ஒழிக்கும் முயற்சிக்கு உதவி செய்யத் தயாரா?' என்று கேட்டு வர வேண்டியது — இந்த முக்கிய விஷயத்தை ஊமைத்துரை இரண்டு மூன்று தடவை படித்துப் படித்துச் சொன்னான். மாடத்தேவனும் நன்றாய்க் கேட்டுக் கொண்டு உற்சாகமாகக் கிளம்பினான். சிவகங்கைக்குப் போய் விசாரித்தான். சின்னமருது சேர்வை சிறுவயல் என்ற ஊரில் தனி அரண்மனை கட்டிக் கொண்டு வசிப்பதாகத் தெரிய வந்தது. பிறகு சிறுவயலுக்குப் போய்ச் சின்னமருதுவைப் பேட்டி கண்டான். ஊமைத்துரை உயிரோடிருப்பது அறிந்து அவர் அளவில்லாத மகிழ்ச்சி அடைந்தார். உடனே தம்முடைய அரண்மனைக்கு வந்து சேரும்படியும், பதினைந்து நாட்களில் இருபதினாயிரம் படை வரையில் திரட்டிவிடத் தம்மால் முடியும் என்றும், வீராதிவீரரான ஊமைத்துரை தலைமை வகித்து நடத்தினால் வெள்ளைப் பூண்டை அடியோடு இந்நாட்டிலிருந்து ஒழித்துக் கட்டி விடலாம் என்றும் சொல்லி அனுப்பினார்.

இந்த உற்சாகமான செய்தியுடன் மாடத்தேவன் இடிந்த கோட்டைக்கு விரைந்து வரத் தொடங்கினான். ஆனால் வரும் வழியில் ஓர் இடையூறு ஏற்பட்டது. ஒரு சிறிய கும்பினிப் படை அங்கே தண்டு இறங்கியிருப்பதைப் பார்த்து, மாடத்தேவன் ஒதுங்கிப் போக நினைத்தான். அது பலிக்கவில்லை. நாலைந்து சிப்பாய்கள் அவனைப்

பிடித்துக் கட்டிப் பாசறையின் நடுவில் இருந்த கூடாரத்துக்குக் கொண்டு போனார்கள். கூடாரத்தில் அவனைத் தூணோடு ஒன்றாகச் சேர்த்துக் கட்டினார்கள்.

இந்த நிலையில் பக்கத்துக் கூடாரத்தில் நடந்த சம்பாஷணையில் கொஞ்சம் அவன் காதில் விழுந்தது. ஒரு கிழக் குரல், "ஊமைத் துரை இருக்குமிடம் எனக்குத் தெரியும். காட்டிக் கொடுக்கிறேன்'' என்று சொல்லியது. அதற்காகக் கும்பினித் துரைத்தனத்தார் கொடுப்பதாகச் சொல்லியிருந்த ஐயாயிரம் ரூபாய் பணத்தையும் கொடுக்கும்படி அதே குரல் கேட்டது.

''ஆகட்டும்; ஊமையன் பிடிபட்டதும் பரிசுத் தொகை கொடுக்கப்படும்!'' என்றார் மேஜர் துரை.

"ஜமேதார்! இப்போதைக்கு இந்தக் கிழவனுக்கு நல்ல பழைய புட்டிச் சாராயம் ஒரு கிளாஸ் கொடு!'' என்றும் அந்த மேஜரின் குரல் சொல்லிற்று.

''அதிகம் பேர் வேண்டாம். கூட்டமாக வந்தால் அவன் தப்பித்து ஓடிப் போய் விடுவான். நாலைந்து பேரை மட்டும் — தைரியசாலிகளாக, — என்னுடன் அனுப்புங்கள். பிடித்துக் கொடுக்கா விட்டால் என் பெயர்..... அல்ல; மாற்றி வைத்துக் கொள்கிறேன்'' என்றது கிழக் குரல்.

இதையெல்லாம் கேட்டு மாடத்தேவன் துடிதுடித்துக் கொண்டிருந்தான். கட்டுக்களைப் பலாத்காரமாக அறுத்தெறியும் சக்தி தனக்கு இல்லையே என்று வருத்தப்பட்டான். இதற்குள் மேஜர் துரை அவனைக் கட்டி வைத்திருந்த கூடாரத்துக்கு வந்தார்.

"ஓ! இந்தப் பையனை நான் பார்த்திருக்கிறேனே? இவனுடைய தோட்டத்தில்தானே நிறைய வெள்ளரிக்காய் கிடைத்தது!'' என்றார் மேஜர்.

''ஆம், எஜமானே! என்னை எதற்காக இவர்கள் பிடித்துக் கட்டி வைத்திருக்கிறார்கள் என்று தெரியவில்லை!'' என்றான் மாடத்தேவன்.

''என்ன, மேன்! கும்பினியின் படையில் நீ சேர்ந்து விடுவதுதானே? நல்ல சம்பளம் கிடைக்கும்!'' என்றார் மேஜர்.

"எஜமானே! நான் ஒரு சமயம் ஆர்க்காட்டு நவாபின் படையில் இருந்தேன். என்னைப் போருக்கு உபயோகமில்லையென்று போகச் சொல்லிவிட்டார்கள். இப்போது சேர்ந்து மட்டும் என்ன பிரயோஜனம்? நல்ல வெள்ளரிக்காய் பயிர் செய்து சேமித்து வைக்கிறேன். நீங்கள் அந்தப் பக்கம் வரும்போது கொடுப்பேன். கும்பினிப் படையில் சம்பளத்துக்கு ஆசைப்பட்டுச் சேர லட்சம் பேர் வருவார்கள். ஆனால் வெள்ளரிக்காய் பயிர் செய்ய யார் வருவார்கள்?'' என்றான் மாடத்தேவன்.

இந்தப் பதில் மேஜருக்கு மிகவும் பிடித்திருந்தது. "நீ சொல்கிறது ரொம்ப சரி. வெள்ளரித் தோட்டம் நன்றாய்ப் போட்டு வை! மறுமுறை வரும்போது வெள்ளரிக்காய் வாங்கி வைத்துக்கொள்ள மாட்டேன். காசுக்கு நாலு விதம் பணம் கொடுத்து வாங்கிக் கொள்வேன்!'' என்றான்.

மேஜர் துரையின் உத்தரவுப்படி மாடத்தேவனின் கட்டை அவிழ்த்து விட்டார்கள்.

''வந்தனம், துரைகளே!'' என்று சொல்லிவிட்டு மாடத்தேவன் அங்கிருந்து விரைந்து சென்றான். ஓட்டமும் நடையுமாகப் போய் இடிந்த கோட்டையை அடைந்தான்.

6

மாடத்தேவன் அர்ச்சுனன் குன்றை அடைந்த போது, ஊமைத் துரையும் வேலம்மாளும் கோட்டைச் சுவர் மீது உட்கார்ந்து கொண்டு ஆவலோடு வழி பார்த்துக் கொண்டிருப்பதைக் கண்டான். அவர்கள் கேட்பதற்காகக் கூட இவன் காத்திருக்கவில்லை.

''சாமி! நான் போன காரியம் பழம்தான். சிறு வயலில் சின்ன மருது சேர்வை இருக்கிறார். உங்களை உடனே புறப்பட்டு வரச் சொன்னார். கிளம்புங்கள்! ஒரு விநாடி கூடத் தாமதிக்கக் கூடாது! வேலம்மா! சாமியைத் தனியாக அனுப்பக் கூடாது. நீ சிறு வயல் வரையில் கொண்டு விட்டு வா!'' என்றான்.

அவசரத்தின் காரணத்தை அறியாத வேலம்மாள் ஊமைத் துரையைப் பார்த்தாள். ஊமைத்துரையின் முகத்தில் மறுபடியும் ஒரு புன்னகை தவழ்ந்தது. அவன் குதித்து எழுந்து புறப்படுவதற்கு ஆயத்தமானான்.

''இ—இ—இவள் வர வேண்டாம்; நா—நா—நான் போகிறேன்; வ—வ—வழி தெரியும்'' என்று சொன்னான்.

''இல்லை, துரையே! உங்களைக் காலில் விழுந்து கேட்டுக் கொள்கிறேன். நீங்கள் கட்டாயம் இவளை அழைத்துப் போக வேண்டும். வேலம்மா! ஏன் தயங்குகிறாய்? உனக்கு விஷயம் புரியவில்லை போலிருக்கிறது. வழியில் கும்பினிப் படையைப் பார்த்தேன். இன்னும் கொஞ்ச நேரத்தில் இங்கு வந்து விடுவார்கள். குறுக்கு வழியில் சீக்கிரமாகச் சாமியைக் கொண்டு போய்ச் சிறு வயலில் விட்டுவிட்டு வா!'' என்றான்.

இதைக் கேட்டதும் வேலம்மாளுக்கு அவனுடைய பரபரப்பின் காரணம் தெரிந்து விட்டது. ஆனாலும் சிறிது தயங்கினாள்.

''நீயும்... அப்பாவும்... என்ன செய்வீர்கள்?'' என்றாள்.

''என்னை நான் காப்பாற்றிக் கொள்வேன். உன் அப்பனைக் கடவுள் கவனித்துக் கொள்வார். முருகன் மேல் ஆணை! உடனே புறப்படு!'' என்றான்.

இருவரும் ரொம்ப ஆயத்தமானார்கள்.

''சாமி! சற்றுப் பொறுங்கள்!'' என்று சொல்லி விட்டு மாடத்தேவன் கோட்டைக்குள் ஓடினான். ஒரு நிமிஷத்துக்கெல்லாம் ஒரு துப்பாக்கியை எடுத்துக் கொண்டு வந்

தான். "சாமி! இதைக் கையில் எடுத்துக் கொண்டு போங்கள்!" என்றான்.

ஊமைத்துரை உதட்டைப் பிதுக்கி "ஹூம்" என்றான். தன் மடியில் வைத்திருந்த சுருள் கத்தியை எடுத்து ஒரு விசிறு விசிறினான்.

"எனக்கு இ-இ-இது போதும்! அ-அ-அதை நீயே வைத்துக் கொள்!" என்று சொல்லி விட்டு அங்கிருந்து கிளம்பினான்.

ஊமைத்துரையும் வேலம்மாளும் கொஞ்ச தூரம் சென்றார்கள். குன்றுக்குப் பின்னால் அவர்கள் மறைய வேண்டிய சமயம் வந்தது. வேலம்மாள் ஒரே ஓட்டமாய்த் திரும்பி ஓடி வந்தாள். மாடத்தேவனுடைய கழுத்தைக் கட்டிக் கொண்டாள்.

"என் பேரில் சந்தேகப்பட்டாயே? இப்போது சாமியுடன் என்னை அனுப்புகிறாயே?" என்றாள்.

"பெண்ணே! சந்தேகத்தைப் பற்றிப் பேச இதுதானா சமயம்?" என்று மழுப்பினான் மாடத்தேவன்.

"ஆனால் உன் பேரில் எனக்குச் சந்தேகமாயிருக்கிறது!" என்றாள் வேலம்மாள்.

"இது என்ன பைத்தியம்?" என்றான் மாடத்தேவன்.

"நீ என் உயிரைக் காப்பாற்றுவதற்குத்தான் இப்போது போகச் சொல்கிறாய், இல்லையா?"

"அப்படித்தான் வைத்துக் கொள்ளேன். உன் உயிர் எனக்குப் பாத்தியதைப் பட்டதில்லையா?"

"ஈரேழு ஜன்மத்துக்கும் பாத்தியதைப் பட்டது. ஆகையால் நான் திரும்பி வரும் வரையில் நீ உயிரோடிருப்பதாகச் சத்தியம் செய்து கொடு! அப்படிச் சத்தியம் செய்தால்தான் போவேன்!"

"பெண்ணே! அப்படியே சத்தியம் செய்கிறேன். அதை நிறைவேற்றுவது முருகனுடைய பொறுப்பு."

"முருகனை நான் வேண்டிக் கொள்கிறேன். நீ கவலைப்படாதே!" என்று வேலம்மாள் சொல்லி, தன் இரு கரிய விழிகளாலும் ஒரு தடவை மாடத்தேவன் முகத்தைப் பருகி விடுபவள் போலப் பார்த்தாள். பிறகு அவனுடைய கழுத்தை விட்டு விட்டு ஓட்டம் பிடித்தாள்.

மாடத்தேவன் தன்னுடைய குடிசைக்குப் போனான். அதிலிருந்த சில ஆயுதங்களையும் தட்டு முட்டுச் சாமான்களையும் எடுத்துக் கொண்டான். பிறகு நெருப்புக் குச்சியைக் கிழித்துக் குடிசையின் கூரையில் பற்ற வைத்தான். தீப்பிடித்துக் கொண்டு குடிசை எரிய ஆரம்பித்ததும் கோட்டையை நோக்கிச் சென்றான். கோட்டைச் சுவர் மேல் ஏறி ஒரு வசதியான இடத்தில் கையில் துப்பாக்கியுடன் உட்கார்ந்து கொண்டான்.

சற்று நேரத்துக்கெல்லாம் குடிசை எரிந்த தீயின் வெளிச்சத்தில் ஏழெட்டுப் பேர் சாலையோடு வருவது தெரிந்தது. அவர்கள், எரியும் குடிசையின் அருகில் நின்று சற்று நேரம் பார்த்துக் கொண்டு நின்றார்கள்.



ஒருவரோடொருவர் ஏதோ பேசிக் கொண்டார்கள். பின்னர் அவர்களில் நாலு பேர் பிரிந்து முன்னால் வந்தார்கள்.

மாடத்தேவன் துப்பாக்கியின் விசையை இழுத்தான். 'டுபீர்' என்ற சத்தத்துடன் குண்டு பாய்ந்தது. வந்தவர்கள் நாலு பேரும் துள்ளி நகர்ந்து கொண்டார்கள். ஒருவர் மேலும் குண்டு பாயவில்லை.

மாடத்தேவன் பிறகு இரண்டு மூன்று தடவை சுட்டதும் வியர்த்தமாகவே போயிற்று.

பிறகு அந்த மனிதர்கள் எல்லோரும் ஓரிடத்தில் கூடி ஆலோசித்தார்கள். அவர்களில் ஒருவன் மட்டும் வந்த வழியே திரும்பிச் சென்றான்.

மற்றவர்கள் சாலையில் துப்பாக்கி எல்லைக்கு வெளியே ஓரிடத்தில் உட்கார்ந்து கொண்டார்கள்.

திடீரென்று அவர்களில் ஒருவன், "வேலம்மா! மகளே, வேலம்மா!" என்று கூவிக் கொண்டு கோட்டையை நோக்கி ஓடி வந்தான். அவன் கருப்பையா சேர்வை என்பது மாடத்தேவனுக்குத் தெரிந்தது. கூடாரத்தில் கட்டுப்பட்டிருந்த போது பக்கத்துக் கூடாரத்திலிருந்து வந்த கிழவனின் குரல் கருப்பையா சேர்வையின் குரல்தான். ஆனால் அவன் எதற்காக இப்போது அப்படி அலறிக் கொண்டு ஓடி வருகிறான்? இதுவும் ஒரு சூழ்ச்சியோ? துப்பாக்கியில் பாக்கியிருந்த ஒரு குண்டை அந்தத் துரோகியின் மீது செலுத்தலாமா என்று மாடத்தேவன் ஒரு கணம் யோசித்தான். ஆனால் அதற்கு அவசியம் ஏற்படவில்லை. ஏனெனில், பின்னால் உட்கார்ந்திருந்தவர்களில் ஒருவன் அந்த வேலையைச் செய்து விட்டான். கிழவன் 'வீல்' என்ற சத்தமிட்டுக் கொண்டு கீழே விழுந்தான். 'கிழவனுடைய துரோகத்துக்குப் பலன் கிடைத்து விட்டது' என்று எண்ணி மாடத்தேவன் மகிழ்ந்தான். ஆனால் இப்படி அவன் செய்த துரோகத்தைப் பற்றி வேலம்மாள் தெரிந்து கொள்ளாதது எவ்வளவு நல்லதாய்ப் போயிற்று?

தெரிந்திருந்தால் வேலம்மாள் அதை நினைத்து எவ்வளவு வேதனைப்பட்டிருப்பாள்!

கிழவனுடைய துரோகச் செயலினால் ஊமைத் துரைக்கு ஆபத்து ஏற்படாமல் அவரை எச்சரித்து அனுப்பியது கூட அவ்வளவு பெரிய காரியம் இல்லை. அவருக்கு வழி காட்டுவது என்ற காரணத்தின் பேரில் வேலம்மாளை அனுப்பியது எவ்வளவு நல்ல யோசனை?

அதுவரையில் மாடத்தேவனுடைய யோசனை வெற்றிகரமாக முடிந்து விட்டது. இனி என்ன செய்வது என்பதுதான் தெரியவில்லை. வந்தவர்கள் துணிந்து கோட்டைக்குள் வருவார்கள், ஒருகை பார்த்து விடலாம் என்று எண்ணியிருந்தான். ஆனால் அவர்கள் அருகில் நெருங்குகிற வழியாயில்லை. ஊமைத்துரை இங்கிருப்பதாகவே அவர்கள் நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்! அந்த வரையில் நல்லதுதான். நேரம் ஆக ஆக, ஊமைத்துரை சிறுவயல் போய்ச் சேர்வதற்கு வசதி ஏற்படும். இந்தப் படுமுட்டாள்கள் இங்கேயே காத்துக் கொண்டிருக்கட்டும்! ஊமைத்துரையின் கருள் வாளை நினைத்துப் பயந்து சாகட்டும்...!

இவ்வாறு இருதரப்பிலும் காத்திருக்கும் போட்டி நடந்தது. நள்ளிரவு வரையில் அந்தப் போட்டி நடந்தது. மாடத்தேவனுக்குத் தூக்கம் கூட வர ஆரம்பித்து விட்டது! இளம்பிராயம் அல்லவா? கண்ணைச் சுழற்றிக் கொண்டு வந்தது. அந்தச் சமயத்தில், வடக்கேயிருந்து வந்த சாலை வழியாக ஒரு கரிய கட்டெறும்புக் கூட்டம் சாரி வைத்து வருவதைக் கண்டான்.

இல்லை, இல்லை! அவை கட்டெறும்புகள் அல்ல. கும்பினிப் பட்டாளம்தான் வருகிறது. அப்பப்பா! எத்தனை பேர்? இருநூறு, ஐந்நூறு, ஆயிரம் பேர் இருக்கும் போல் தோன்றுகிறதே? அத்தனை பெரிய படைக்கு முன்னால்தான் ஒருவன் என்ன செய்ய முடியும்? ஆனாலும் ஒரு கை பார்த்து விட வேண்டும். பாஞ்சாலங் குறிச்சிக் கோட்டையில் கும்பினிப் பட்டாளச் சிப்பாய்கள் புகுந்த போது, கோட்டைக்குள்ளே இருந்த ஒவ்வொரு வீரனும் எத்தனை பேரைக் கொன்று தீர்த்தான்? அதைப் போல் தானும் செய்துவிட்டு, வீர சொர்க்கம் அடைய வேண்டியதுதான். ஆனால், பாவம் வேலம்மாள்! அவளுக்குச் செய்து கொடுத்த சத்தியம் என்ன ஆகிறது? அதைப் பற்றி யோசித்து என்ன பயன்? அவள்தான் முருகன் பேரில் பாரத்தைப் போட்டிருக்கிறாளே? முருகனே சத்தியத்தை நிறைவேற்றட்டும்! நமக்கு என்ன கவலை?

இப்படிச் சாஹஸச் செயல்கள் புரிவது பற்றி மாடத்தேவன் எண்ணமிட்டுக் கொண்டிருக்கையில் கும்பினிப்படை நெருங்கி வந்து விட்டது. அது என்ன, படைக்கு நடுவில் நீளமான வண்டி ஒன்று வருகிறதே! அந்த வண்டியில் என்ன வருகிறது?

பட்டாள வரிசை, முன்னால் வந்த வீரர்கள் நின்ற இடத்திலேயே நின்றது. ஏதோ ஆலோசனைகள் நடந்தன. பிறகு, அந்தக் கரிய நீண்ட வண்டியருகில் நின்று கொண்டு சில வீரர்கள் என்னமோ செய்தார்கள். ஓகோ! அது பீரங்கி வண்டி போல் அல்லவா இருக்கிறது? பீரங்கியில் மருந்து போட்டுக் கெட்டிக்கிறார்களா?

மாடத்தேவன் சிறிது திடுக்கிடத்தான் செய்தான். பீரங்கி வரும் என்று அவன் எதிர்பார்க்கவில்லை. பீரங்கியிலிருந்து குண்டு போட்டுக் கோட்டையை அடியோடு நாசமாக்கப் பார்க்கிறார்கள் போலும்! ஆனால் அதிகமாகக் குண்டு போடுதல் தேவையாயிராது. பீரங்கியின் வேலை மிகவும் எளிதாய்ப் போய்விடும். மூட்டை மூட்டையாக வெடி மருந்தைத் திருடிக் கொண்டு வந்து மாடத்தேவன் கோட்டையின் அறை ஒன்றில் போட்டுப் பூட்டி வைத்திருந்தான் அல்லவா? அந்த அறையில் குண்டு விழ வேண்டியதுதான்! தீர்ந்தது கோட்டை! தீர்ந்தது தன் உயிரும்! வேலம்மா! நன்றாக முருகன் பேரில் பாரத்தைப் போட்டாய்! கும்பினிப் பட்டாளத்தில் பீரங்கியின் முன்னால் முருகன் என்ன செய்வான்?

ஓகோ! கிழவன் அலறி ஓடி வந்ததன் காரணமும் இப்போது தெரிந்தது. பீரங்கி கொண்டு வந்து கோட்டை மேல் சுடப்போகிறுர்கள் என்று அறிந்ததும் கிழவனுக்கு மகளைப் பற்றிய கவலை வந்துவிட்டதாக்கும்!......

தீவட்டிசைத் தீ முன்னமே அணைந்து விட்டது. நாலா பக்கமும் காரிருள் சூழ்ந்திருந்தது. அந்த இருளைப் பிளந்து கொண்டு பீரங்கி முகப்பில் ஒரு மின்னல் ஜோதி தென்பட்டது. அடுத்த கணம் பயங்கரமான பீரங்கியின் குரைப்புச் சத்தம் கேட்டது. அந்தச் சப்தத்திலேயே இந்தப் பழைய கோட்டைச் சுவர்கள் அதிர்ந்தன. மறு விநாடி குண்டு வந்து கோட்டைக்குள் விழ்ந்தது. ஆயிரம் பேரிடி ஏக காலத்தில் இடித்தாற்போல் ஒருபயங்கர வெடிச் சத்தம். ஒரு பெரிய அகண்டமான நெருப்பு ஜுவாலை. பிறகு, சட சட, பட படவென்று வானம் இடிந்து விழுந்தது. குன்றும் கோட்டைச் சுவர்களும் தகர்ந்து விழுந்தன. மாடத்தேவனும் உருண்டு விழுந்தான். விழுந்த கணத்திலேயே நினைவை இழந்தான்.

மாடத்தேவனுக்கு மறுபடி நினைவு வந்த போது, காலில் சகிக்க முடியாத கொடிய வலி தெரிந்தது. மூச்சு விடத் திணறியதும் தெரிந்தது. உடம்பெல்லாம் சொட்டவியர்த்து நனைந்திருந்தது. ஒரே இருட்டாயும் இருந்தது. அந்த இருட்டைப் போன்ற இருட்டை அவன் அதற்கு முன் கண்டதேயில்லை. ஒரு வேளை தன் கண் பொட்டையாயிற்றோ என்று நினைத்தான். இல்லை; கண்ணில் ஒருகோளாறும் இல்லை. கையினால் தடவிப் பார்த்தான். மேலே

சில்லிட்ட பாறை ; பக்கத்திலும் சில்லிட்ட பாறை ; கீழே மட்டும் கல்லும் மண்ணுமான தரை. அப்பால் இப்பால் நகர்வதற்கு இடம் இல்லை. இடமிருந்தாலும் நகர முடியாதபடி காலில் ஏதோ பெரும் பாரம் அமுக்கியது. பொறுக்க முடியாத வலியும் சேர்ந்திருந்தது.

யாரோ சிலர் பேசிக்கொண்ட குரல்கள் பாதாளத்திலிருந்து கேட்பது போலக் கேட்டன.

'' பார்த்தாயா? ஊமையன் மறுபடியும் டிமிக்கி கொடுத்து விட்டான்!''

"நன்றாகத் தேடிப் பார்த்தாகி விட்டது. இனித் தேடுவதற்கு இடமில்லை.''

''பீரங்கி வருவதற்கு முன்னாலேயே கம்பி நீட்டியிருக்க வேண்டும்.''

''ஊமைத்துரையை ஊர் ஜனங்கள் இந்திர ஜித்தன் என்று சொல்வது சரி தான்.''

''எப்படியும் அகப்படாமலா போகிறான்? நாலாபுறமும் ஆள்களைப் பிரித்து அனுப்பித் தேடச் செய்யலாம்.''

''சிவ கங்கைக்குப் போயிருப்பான்.''

''இல்லை ; கமுதிக் கோட்டைக்குச் சென்றிருப்பான்.''

''காட்டிலே ஒளிந்து கொண்டிருந்தாலும் இருப்பான்.''

''அந்தக்குடிகாரக் கிழவன் நம்மை வேண்டு மென்று ஏமாற்றினானா? அல்லது தானே ஏமாந்து போனானா?''

''முட்டாள்களே! அவனைச் சுட்டுக் கொன்று விட்டீர்களே! மற்றவர்களுக்கு உதாரணமாகத் தூக்கிலல்லவா தொங்கவிட்டிருக்க வேண்டும்?''

கிழவன் மரத்தில் தொங்கும் காட்சியை மாடத்தேவன் மனக் கண்ணால் பார்த்து மகிழ்ந்தான். அந்தச் சண்டாளத் துரோகியை அப்படிச் செய்திருந்தாலும் தகும். ஆனால் வேலம்மாள் பார்த்தால், எவ்வளவு கஷ்டப்படுவாள்! வேலம்மா! வேலம்மா!— உன்னை இனி நான் காணப் போவதில்லை. இதோ மறுபடியும் எனக்கு மயக்கம் வருகிறது: என்னுடைய உயிர் இதோ பிரிந்து போகிறது....

7

மாடத் தேவனுடைய உயிர் வெகு கெட்டியாக அவனுடைய உடலைப் பற்றிக் கொண்டிருந்தது. மறுபடியும் அவனுக்கு நினைவு வந்த போது அதை உணர்ந்தான். இப்போது சிறிது மங்கலாக வெளிச்சம் கூடத் தெரிந்தது. மேலேயும் பக்கத்திலேயும் உற்றுப் பார்த்தான். கோட்டைச் சுவரின் ஒரு பெரும் பாளம் எக்கச் சக்கமாகத் தன் பேரில் விழுந்திருக்கிறது என்பதை உணர்ந்தான். தன் தலையிலும் உடம்பிலும் படாமல் சாய்வாக அந்தப் பாளம் வேறொரு கல்லினால் முட்டுக் கொடுக்கப்பட்டு நிற்கிறது. ஆனால் காலின் மேல் மட்டும் ஒரு பெரிய குண்டுப் பாறை விழுந்திருக்க வேண்டும். கால் எலும்பே முறிந்து போயிருக்க வேண்டும். இல்லாவிட்டால் இவ்வளவு பொறுக்க முடியாமல் வலிக்குமா?

நேரம் ஆக ஆகப் பக்கத்துப் பாறைகள் சுட ஆரம்பித்தன. சூரியனுடைய வெய்யில் அடித்துச் சூடாகி வருகின்றன போலும். வரவரச் சூடு அதிகமாயிற்று: தாகம் தொண்டையை வரட்டியது: பசியும் எடுத்தது. தான் இப்படியே கிடந்து பசியினாலும் தாகத்தினாலும் பரிதவித்துச் சாக வேண்டியதுதானா? கோட்டைச் சுவர் தலையில் விழுந்து ஒரேயடியாகக் கொன்றிருக்கக் கூடாதா? முருகா! வேலம்மாள் பிரார்த்தனையின் பயனா இது?

எங்கேயோ வெகு தூரத்திலிருந்து, அதல பாதாளத்திலிருந்து, ஆழமான குகையிலிருந்து, ''முருகா'' ''முருகா!'' என்று ஒரு தீனக் குரல் கேட்டது.

''முருகா! என் கணவன் எங்கே? நான் ஆசை வைத்த புருஷன் எங்கே? உன்னிடம் ஒப்புவித்துப் போன என் ராஜா எங்கே?'' என்று புலம்பிய குரல் வெகு வெகு தீனஸ்வரத்தில், ஆனால் தெளிவாகக் கேட்டது.

அதற்குப் பதில் சொல்ல மாடத்தேவன் முயன்றான். ''வேலம்மா!'' என்று அவன் அழைத்த குரல் அவனுக்கே கேட்கவில்லை: அவளுக்கு எப்படிக் கேட்கும்? ஐயோ முருகா! தம்பிரனிச் சிப்பாய்கள் தன்னைப் பார்க்காமற் போனது போல் வேலம்மாளும் போய் விடுவாளோ?

இல்லை: முருகன் அவ்வளவு கருணையற்றவனல்ல. வேலம்மாள் இதோ நெருங்கி நெருங்கி வந்து கொண்டிருக்கிறாள். அவளுடைய குரல் மேலும் மேலும் தெளிவாகக் கேட்கிறது!— மாடத்தேவன் தன்னுடைய சக்தியையெல்லாம் பிரயோகித்து, ''வேலம்மா! வேலம்மா! இதோ இருக்கிறேன்!'' என்று கத்தினான்.

''என் ராஜா!'' என்று கதறிக் கொண்டு வேலம்மாள் ஓடி வந்தாள். அவன் காலின் மேல் கிடந்த குண்டுப் பாறையை முக்கி முனகி அப்புறப்படுத்தினாள். அதனால் அவளுக்கு ஏற்பட்ட இரைப்பு நீங்குவதற்குள் மாடத்தேவனின் காலைப் பிடித்து அவனை வெளியில் இழுத்தாள். அடிப்பாவி! கால் முறிந்திருக்கிறதடி! வலி கொல்லுகிறது! என்னைத் தொடாதே! இப்படி இழுக்காதே.....!

மாடத்தேவன் பாறைக்குள்ளிருந்து வெளிப்பட்டதும் வேலம்மாள் அவன் மீது விழுந்து கட்டிக் கொண்டு அழுதாள். மாடத்தேவன் பலாத்காரமாக அவளுடைய முகத்தைத் தள்ளிப் பிடித்துக் கொண்டு தான் தாகத்தினால் தவிப்பதை ஜாடையினால் தெரிவித்தான். அவனை உடனே வாரி அணைத்துத் தூக்கிக் கொண்டு சுனைக் கரையில் கொண்டு போய்ச் சேர்த்தாள். நாலு கை தண்ணீர் எடுத்து அவன் வாயில் விட்டதும் மாடத்தேவனுக்குப் போன உயிர் திரும்பி வந்தது.

''வேலம்மா! உனக்குக் கொடுத்த சத்தி



யத்தை நிறைவேற்றினேன் பார்த்தாயா? ஆனால் கால் மட்டும் போய் விட்டது!'' என்றான்.

வேலம்மாள் அவனுடைய காலைப் பார்த்துப் பார்த்து விம்மி அழுதாள்.

''எனக்காக அழாதே, வேலம்மா! உன் அப்பனுக்காக அழு! நான் கால் இழந்தாலும் உயிரோடு இருக்கிறேன்: அவன் செத்தே போய் விட்டான். ஆனால் அவனுக்காகத் தான் ஏன் அழ வேண்டும்? வீரச் சாவு அடைந்தவனுக்காக அழக் கூடாது. நேற்று இராத்திரி உன் அப்பன் என்னோடு நின்று கும்பினிக்காரர்களோடு சண்டையிட்டதைப் பார்த்திருந்தாயானால்.... ஆகா! வீரபாண்டியனும் ஊமைத்துரையும் கூட அதிசயப்பட்டிருப்பார்கள்!''

வேலம்மாள் அழுகையை நிறுத்தி விட்டு, ''அப்பன் உண்மையில் அப்படி உன்னோடு நின்றானா? வேறு விதமாக நான் சந்தேகப் பட்டேனே!'' என்றாள்.

''சந்தேகப்பட்டாயா? நான் சந்தேகப் பட்டதற்கு மட்டும் அவ்வளவு பிரமாதமாகக் கோபித்துக் கொண்டாயே? சந்தேகம் பொல்லாதது, வேலம்மா!''

''ஆமாம, சந்தேகப்படக் கூடாதுதான். சற்று முன்னால் நான் முருகன் பேரில் கூடச் சந்தேகப்பட்டேன். ஆனால் முருகன் உன்னை எனக்குக் காப்பாற்றிக் கொடுத்தார்!'' என்றாள் வேலம்மாள்.

முருகன் கருணையினாலும் வேலம்மாளின் பணிவிடையினாலும் மாடத்தேவன் பிழைத்து எழுந்தான். ஆனால் கால் போனது போனதுதான். கால் இல்லா முடவனாகவே அவன் வாழ்ந்து வந்தான்.

முடவனைக் கட்டிக் கொண்டதற்காக வேலம்மாள் சிறிதும் வருந்தவில்லை. அதைப் பற்றிப் பெருமையே கொண்டாள். அவளே வெள்ளரித் தோட்டம் போட்டு, வெள்ளரிக்காய் விற்று வந்த காசைக் கொண்டு குடும்பம் நடத்தினாள். கணவனையும் காப்பாற்றினாள்.

ஏழு வருஷம் அவர்கள் இன்ப வாழ்க்கை நடத்தினார்கள். பிறகு மாடத்தேவன் இறந்து போனான்.

இறக்கும் வரையில் வேலம்மாளின் தகப்பன் செய்த துரோகச் செயலைப் பற்றி மாடத்தேவன் அவளிடம் சொல்லவில்லை. வீரப் போர் புரிந்து அவன் உயிர் விட்டதாகவே சொல்லி வந்தான்.

வேலம்மாளும் ஒரு இரகசியத்தை இறுதி வரையில் தன் மனத்திற்குள்ளேயே வைத்திருந்து இறந்தாள். ஊமைத்துரைக்கு வழி காட்ட அவனை மாடத்தேவன் போகச் சொன்ன இரவில், கொஞ்ச தூரத்திலேயே ஊமைத் துரையிடம் விடை பெற்றுக் கொண்டு, அவள் திரும்பி விட்டாள். சுனைக் கரையில் மரத்தின் பின்னாலிருந்து நடந்தது எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்தாள். தன் தகப்பன் செய்த சதிச் செயலையும் அறிந்து கொண்டிருந்தாள். ஆனால் அதைப் பற்றிப் பிரஸ்தாபிக்கவில்லை. ''உனக்கு எப்படித் தெரிந்தது?'' என்று கேட்டால் என்ன பதில் சொல்வது? ''ஊமைத்துரையை நடுவில் விட்டு விட்டு வந்தேன்'' என்றுதானே சொல்ல வேண்டும்?

இந்த அதிசயத் தம்பதிகளுடைய வாழ்க்கையைப் பற்றி அறிந்த பக்கத்துக் கிராம வாசிகள் வீரன் மாடத்தேவனுடைய நினைவுக்காகச் சுனைக் கரையில் ஒரு கல் நாட்டினார்கள். அவனைக் காப்பாற்றிய முருகனுக்காக ஒரு வேலையும் நட்டார்கள். அந்தச் சுனைக்கு நாளடைவில் 'மாடத்தேவன் சுனை' என்ற பெயர் வந்தது.

இப்போதும் அந்தப் பக்கமாகப் போகிற கிராமத்து ஜனங்கள் மாடத்தேவன் கல் மீதும், அருகிலுள்ள வேல் மீதும் சுனை ஓரத்து அரளிச் செடியிலிருந்து பூப்பறித்துப் போட்டு வணங்கி விட்டுப் போகிறார்கள்.

சுபம்



Rediffusion/CP/5707 f TM

ISTERED No. M 4392
assed as a Newspaper in Sri Lanka

